கியோர்கி யூதின்


ஓவியன் எகோரியின் கதை







இது மத்தியகால ருஷ்யாவின் திறமை வாய்ந்த கலைஞன் ஒருவனின் உயிர்த் துடிப்புள்ள நிகழ்ச்சிகளுடன் கூடிய கற்பனை வாழ்க்கைக் கதை. இது பல பண்டையப் புராணங்களையும் அந்தத் தொலைதூரக் காலத்தின் குணாமிசமான தேசியப் பழக்கங்கள், சடங்குகள், பாடல்கள் மற்றும் மரபுகள் ஆகியவற்றையும் வாசகனுக்கு அறிமுகம் செய்கிறது.



கியோர்கி யூதின்

ஓவியன் ஏகோரியின் கதை

ஓவியர்: கி. யூதின்

மொழிபெயர்ப்பாளர்: நா. முகம்மது செரீபு, எம்.ஏ.

ராதுகா பதிப்பகம் • மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

Г. Юдин

БЕЛАЯ ЛЕБЁДУШКА

На тамильском языке

Georgy Yudin

THE TALE OF MASTER EGOR

In Tamil

Для детей младшего возраста

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது
மறுபதிப்பு 1993

ISBN 5-05-001436-0



அத்தியாயம் ஒன்று

முன்னொரு காலத்தில், நீண்ட போர்களுக்கும், கடும் அரசனுக்குரிய பூசலுக்கும் பிறகு மத்தியகால ருஷ்யாவின் தலைநகராக மாஸ்கோ ஆன போது, ஜார் இவானுக்கு அரியணை சென்றது. அவரது கொடுமை காரணமாக மக்கள் அவரைப் பயங்கர இவான் என்றழைத்தனர். ஆயினும் நமது கதை அவரைப் பற்றி அன்று, சாதாரண ருஷ்ய நபரான கலைஞன் எகோரி பற்றியதாகும்.

மாஸ்கோவினின்றும் சற்றுத் தொலைவில், மகிழ்ச்சி என்ற ஆற்றங் கரையில், வீடுவாசல்கள் என்ற அழகிய சிறு கிராமம் ஒன்று இருந்தது. இங்கு தான் எகோரி பிறந்தான். அவன் சிறுவனாக இருந்த போது எகோர்கா என்று அழைத்தார்கள்.

அவன் ஓர் அதிசயமான சிறுவனாக இருந்தான். கிராமத்துப் பையன்களுடன் பச்சாக் குதிரை ஆட்டம் அல்லது ஓடிப்பிடித்து விளையாட்டு ஆடிக்கொண்டு ஓடிச் செல்கையில், வீதியின் நடுவே திடீரென்று சிறிதும் அசைவற்ற நிலையில் நின்று விடுவான்.

''ஏன் நின்றுவிட்டாய், எகோர்கா?''

''சூரியன் மறைவதைச் சற்று பார்,'' என்றான். ''வானம் தீப்பற்றி எரிவது போல அது தெரிகிறது. தவளைகள் கத்திக் கொண்டிருக்கின்றன...''

''அவன் சொல்றதைக் கேளுங்க! இதுக்கு முன்னே தவளைகள் கத்துறதை நீ கேட்டதில்லை? வா, வந்து விளையாடு, இல்லாவிட்டால் நாங்கள் உன்னைக் குட்டையில் அமிழ்த்துவோம்.''

அல்லது உயரமான புல்லின் மீது படுத்து மணிக்கணக்காகப் பூக்களைப் பார்ப்பான்.

''உனக்கு உடம்புக்கு நல்லா இல்லையா, எகோர்கா?'' என்று அவனது அம்மா கேட்டாள். ''அங்கே நீ எல்லா நாளும் காலையிலிருந்து எந்த அசைவுமே இல்லாமல் படுத்தே இருக்கிறாயே.''

''தண்டுகளில் செடிப்பால் ஓடுறதைக் கேட்டுக் கொண்டிருக்கேன், அம்மா.''

''நிச்சயமா உன்னால் அதைக் கேட்க முடிகிறது?'' என்று தாய் பரிவோடு சொன்னாள். பிறகு அவனைச் சிந்தனையிலாழ்ந்தவாறு பார்த்து விட்டு, மெதுவாக அப்பால் நடந்தாள்.

எகோர்காவின் மற்றொரு பொழுதுபோக்கு, நட்சத்திரங்கள் மறைந்து கொண்டிருக்கும் போதும் தோட்டத்தில் புல்லின் மீது ஆப்பிள்கள் விழுவதைக் கேட்கும் போதும் அதிகாலையில் பறவைகளை எழுப்புவதாகும். அவன் வெளியே சென்று அவனுடைய ஊதுகுழலை மெதுவாக வாசித்தான். முதலாவது சிறிய பறவையிடமிருந்து கீச்சுக்கீச்செனப் பதில் திரும்ப வந்தது. அதைத் தொடர்ந்தது இரண்டாவது, பிறகு மூன்றாவது; இப்படியாகத் தோட்டம் முழுமையுமே திடீரென உயிர் பெற்றுப் பாடல் பாடத் தொடங்கியது.

''அங்கே கீச்சிடுகிறாய், சின்னச் சிட்டுக் குருவியே,'' பாட்டி அகுலீனா, அடுப்பு பெஞ்சின் மீது இருந்து கரகரத்த குரலில் சொன்னாள். ''உன்னால் தான் பறவைகள் விழிக்கும்னு நினைக்கிறியா?''

ஆனால் எல்லாவற்றையும் விட எகோர்கா ருஷ்ய விழாக்களை விரும்பினான், அப்போது மக்கள் கிளர்ச்சியூட்டும் பாடல்களைப் பாடினார்கள், வட்ட நடனம் மகிழ்ச்சியாக ஆடினார்கள், சேணத்

தில் மணிகள் பூட்டிய குதிரைகளில் சவாரி செய்தார்கள். ஒவ்வொரு விழாவும் ஒரு தேவதைக் கதை போலத் தந்திரமும், புதிரும் நிறைந்ததாக இருந்தது. விழா நடைமுறைகளினின்றும் அவனை அப்பால் இழுக்க பூமியில் எதனாலும் இயலாது.

எகோரியின் நாள் என விழாவை எடுத்துக் கொள்வோம்; அந்நாளில் கடுமையான குளிர்காலத்திற்குப் பிறகு முதன் முறையாகக் கால்நடைகள் மேய்ச்சல் நிலங்களுக்கு ஓட்டிச் செல்லப்பட்டன. பழைய ருஷ்யாவில் இருந்த ஒவ்வொருவரும் மாவீரன் புனித ஜியார்ஜ் அல்லது பாதுகாவலன் ஜியார்ஜை அறிந்திருந்தனர். பொதுமக்கள் அவரை எகோரி என்றழைத்தனர். அவர் விவசாயிகளுக்கு உதவி செய்தார், தேவைப்பட்டால் அவர்களுக்காக இடையிட்டுப் பரிந்து பேசினார், கால்நடைகளைக் காப்பாற்றினார். ஆகவே விழாக்களில் ஒன்று அவர் பெயரால் அழைக்கப்பட்டது.

எகோரியின் நாளுக்கு முந்திய மாலையில் பாட்டி அகுலீனா, கிராமத்திலுள்ள மற்ற எல்லாப் பெண்களையும் போல 'கோன்கள்' எனப்பட்ட ரொட்டித் துண்டுகளை, ஒவ்வொன்றிலும் பசுவின் மயிரை வைத்துச் சிறியவைகளாக அடுப்பில் சுட்டெடுத்தாள்.

மறுநாள் அதிகாலையில் எகோர்காவும் அவனது பாட்டியும் பசுவையும் குதிரையையும் தொழுவத்தை விட்டு வெளியே, மொட்டையான குச்சிக்குப் பதிலாக மலர்ந்த வில்லோக் குச்சியால் துரத்தினார்கள். தொழுவத்துக்கு முன்னால் தரையில் அப்பா ஓர் இரும்பு விசைத்தாழ் வைத்தார். அதைத் தொடாமலேயே பசுவும் குதிரையும் தாண்டிப் போக வேண்டும். அப்போதே இது ஓநாய் அல்லது கரடியின் தாடைகளை எவ்வளவு முடியுமோ அவ்வளவு இறுக்கமாகப் பூட்டிக் கொள்ளும்.



பிறகு கிராமம் முழுமையுமே வெளியே வயலுக்குச் சென்றது. அவர்கள் தரையில் முப்பது முறை, வடக்கு, தெற்கு, கிழக்கு மற்றும் மேற்காக வணங்கி இவ்வாறு சொன்னார்கள்: ''எங்களது துணிச்சல் மிக்க புனித ஜியார்ஜே, நெருப்பிலிருந்தும், நீரிலிருந்தும், கொடிய விலங்கிடமிருந்தும், ஊர்ந்து செல்லும் பாம்பிடமிருந்தும், எல்லா மந்திர வசியங்களிலிருந்தும் எங்களது கால்நடைகளைக் காப்பாற்று. கொடிய விலங்கு பசுக்களின் கதறலையும் ஆட்டின் கத்தலையும் தனது கூரிய செவிகளால் கேட்காதிருக்கட்டும், மனிதக் குரலுக்கு அது அஞ்சி நடுங்கட்டும், பிசாசுகள் அப்பால் துரத்தியடிக்கப் படட்டும்''. பிறகு அவர்கள் 'கோன்'களை' கால்நடைகளுக்கு ஊட்டினார்கள், அவற்றிற்குக் குடிக்கக் கொடுத்தார்கள், மேலும் புனித ஜியார்ஜிடம் வலியுறுத்தினார்கள்:

அதிகாலை எழுவீர், புனித ஜியார்ஜ்,
திறப்பீர் பூமியை,
வெளிப்படுத்துவீர் பனித்திவலையை

வெப்பமான கோடைக்காக,
நல்ல மகசூலுக்காக
எல்லா மனிதரின் நன்மைக்கே.

இந்த இரவின் போது புனித ஜியார்ஜ் தூங்கவில்லை. தனது தங்கச் சாவியினால் பனித்திவலையை வெளிப்படுத்தி அதைப் பூமிக்குப் போகச் செய்தார், பிறகு அவர் புல்லை வெளிப்படுத்தி அதை வளரச் செய்தார், தனது தங்க ஊதுகுழலை அவர் ஊதிய போது, காடுகள் பசுமையாக மாறின.

* * *

எகோர்காவின் அப்பா வாழ்க்கைக்காக நிலத்தை உழுதார், மகிழ்ச்சிக்காக சர்ச் மணிகளை அடித்தார். சிறந்த மணி அடிப் பவராகவும் இருந்தார். செவிக்கு இனிமையூட்ட ஐந்து மணிகளில் அடுத்தடுத்துப் பண்மணி ஒலிகள் எழுப்ப அவரால் முடியும். அந்த ஒலி இதயத்தையும் ஆன்மாவையும் மகிழ்வூட்டியது. மாஸ்கோ விலுள்ள மைய மணிக்கூண்டிற்குச் செல்ல, அதிகப் பணம் தருவதாகக் கூறி அவருக்கு ஆசையூட்ட அவர்கள் முயன்றார்கள், ஆனால் அவர் மறுத்து விட்டார். ''எனது திறமையை எனக்குக் கற்பித்தது எனது சொந்தக் கிராமம் தான்,'' என்றார், ''கிராமத்திற்காக நான் மணி அடிப்பேன்.''

எகோர்காவுக்கு மகிழ்ச்சியான நேரம் மாலை வேளையாகும், அப்போது கடுமையான அன்றைய வேலைக்குப் பிறகு குடும்பத்தினர் எல்லாரும் வீட்டில் கூடினார்கள். கொளுத்தப்பட்ட மரச்சக்கை மங்கலான ஒளி வீசி மெதுவாகச் சடசடத்தது, அறையின் உட்கூரை வரை புகைச் சுருள் தடம் சுருண்டு நின்றது, அதிசயமான நிழல்கள் சுவர்களின் மீது நடனமாடின. அடுப்படியில் பாட்டி அகுலீனா இரும்புச் சட்டிகளால ஒலி எழுப்பினாள், சிறுகச் சிறுகப் புத்தம்புது ரொட்டியின், காய்ச்சிய பாலின் நறுமணத்தால் வீடு நிறைந்தது, கொழுத்த ஆண் பூனை திரேந்தி, சுண்டெலிகள் பற்றி மறந்து, தனது மீசை மயிர் மீது நூலாம் படையுடன் அறைக்குள்ளாக ஓடியது, தனது ஆழமான குரலில் ஆர்வத்தோடு மியாவ்மியாவ் எனக் கத்தத் தொடங்கியது.

குடும்பத்திற்காக அப்பா மரப்பட்டைச் செருப்புகளை நெய்து கொண்டிருந்தார், தனது நூற்புக் கருவி அருகே உட்கார்ந்த தாய் நூற்றுக் கொண்டிருந்தாள். எகோர்கா அவளுடைய வெதுவெ துப்பான முதுகில் தொத்தி, அவளுடைய கற்பனைக் கதை களைக் கேட்கையில் இருண்ட சன்னலுக்கு வெளியே உற்றுப் பார்த் தான்.

''ஏழு ஆழமான கடல்களுக்கு அப்பால், ஏழு உயரமான மலை களைத் தாண்டி, பூமியும் வானமும் சந்திக்கும் இடத்தில், ஓர்

அதுசயமான நாடு இருக்கிறது. ஓர் ஆண்டு முழுக்கக் குதிரையில் சுற்றி வர முடியாத அளவுக்குப் பெரியது. அங்குள்ள மக்கள் மூன்று கால்களும் நான்கு கைகளும் கொண்ட ராட்சசர்கள், அவர்களது கண்களும் வாயும் நெஞ்சின் மீது இருக்கின்றன. அந்த நாட்டில் திருடர்களோ, கொள்ளையர்களோ, பொறாமைக்காரர்களோ கிடையாது, ஏனெனில் அது அளவற்ற செல்வத்தைக் கொண்டிருக் கிறது. அந்த நாட்டிலே நிலத்திற்கு அடியில் ஓர் அழகான நதி ஓடுகிறது. ஆண்டுக்கு ஒரு முறை நதிக்கு மேலாக உள்ள தரை திறக்கிறது, அது திரும்பவும் மூடிக் கொள்வதற்கு முன்னதாக, நதிக்குள் குதிப்பவன், நீரில் அவனுக்கு முடிந்தவற்றைக் கைப்பற்றித் தன்னோடு இழுத்துக் கொள்கிறான். கற்கள் அரிய இரத்தினக் கற் களாகவும், மணல் பெரிய முத்துகளாகவும் தோன்றுகின்றன.

''அந்நாட்டில் விலங்குத் தன்மைகள் எல்லாம் இருக்கின்றன. சே வல்கள் மிகவும் பெரிதாக இருக்கின்றன, அவற்றின் மீது ஒரு மனி தன் சவாரி செய்ய முடியும். அங்கே ஃபினிக்ஸ் பறவையும் இருக் கிறது. வளர்பிறையின் போது ஃபினிக்ஸ் பதினைந்து ஓக் மரங்களில் தனது கூட்டைக் கட்டுகிறது. சொர்க்கத்திலிருந்து தீயைக் கீழே கொண்டு வந்து தனது கூட்டிற்கு நெருப்பிட்டு அதனுடனேயே எரிந்து போனது. சாம்பலிலிருந்து ஒரு புழு பிறந்து சிறகுகளால் மூடிக் கொண்டு திரும்பவும் ஃபினிக்ஸ் ஆகி, ஐந்நூறு ஆண்டுகளுக்கு வசிக்கிறது.''

மரத்தாலான அறையின் இருண்ட சுவர்கள் எகோர்காவின் கண் களுக்கு முன்னால் மெல்ல மறைந்தன. அடுப்பு பெஞ்சின் மீது அவன் அதற்கு மேல் படுத்திருக்கவில்லை, ஆனால் அந்தத் தொலைதூர நாட்டில் வெதுவெதுப்பான, இளஞ்சிவப்பு நிற மணலில் கிடக் கிறான். தலைக்கு மேலாகப் பெரிய சிவப்பு மற்றும் வெள்ளை நிறப் பூக்கள், மணிகளின் அளவில், அலைகின்றன. அவற்றில் ஒன்றில் தனது கால்களை வளைத்துக் குந்தியிருந்து மின்னுகின்ற சிறகுகளைக் கொண்ட சீரின் பறவை தனிவாகவும் இனிமையாகவும் ஏதோ பாடுகிறது, அது தாயின் முகத்தைப் பெற்றிருக்கிறது...

* * *

பிறகு ஒருநாள் பிந்திய கோடையில், பயிர்கள் முற்றிய போது, சூரிய உதயத்தில் எகோர்கா மேய்ச்சல் நிலத்திலிருந்து வீட்டிற்கு ஓடி வந்தான்; வெளிறிப் போயும், நடுங்கிக் கொண்டும் இருந் தான்.

''எழுங்க, அப்பா!'' அவன் கத்தினான். ''அதோ ஆபத்து!''

''என்ன இது, எகோர்கா? குதிரை களவாடப்பட்டு விட்டதா?''

''குதிரை மீது எதிரிகள் வந்து கொண்டிருக்கிறாங்க! அவர்கள் இங்கே நெருங்கிவிட்டார்கள்!''

இதைக் கேட்டதும், அவர் மணிக்கூண்டிற்கு, தனது இரவு உடையிலேயே, எச்சரிக்கை மணி அடிக்க விரைந்தார். எகோர்கா, அவனது அம்மா, பாட்டி அகுலீனா ஆகியோரை நிலவறையில் ஒளிந்து கொள்ளுமாறு சொல்ல மட்டுமே அவருக்கு நேரமிருந்தது.

மணிக்கூண்டிற்குப் பறவை போலப் பறந்து சென்றார், ஆனால், அட கடவுளே! வெறுப்புக்குரிய எதிரிகள் மிகவும் அண்மையில் வந்து விட்டனர்! புழுதி கருமையான மேகமாகக் கிளம்ப, குதிரைக் குளம்புகளுக்குக் கீழே பூமி நடுநடுங்க, நெடுகிலும் விரைந்தனர். மணி அடிப்பவர் எச்சரிக்கை மணியின் கயிற்றினை இழுத்தார். விரைவு படுத்துங்கள், அருமை மக்களே! பேராபத்து நேர இருக்கிறது!

ஆனால் அது மிகவும் பிந்தி விட்டது.

குதிரையில் வந்தவர்கள் கிராமத்திற்குள்ளாகச் சூறாவளியைப் போலப் பாய்ந்தோடி நுழைந்தார்கள். ஒளிந்து கொள்ள நேரமில்லாதவர்கள் சமயநம்பிக்கையற்றவர்களால் வெட்டி வீழ்த்தப்பட்டார்கள், அல்லது அவர்களது கொடிய போர்க் குதிரைகளால் மிதித்து நசுக்கப்பட்டார்கள்.

எகோர்காவின் தாயினால் அதற்கு மேலும் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. தனது அன்புக் கணவனைக் கண்டுபிடிப்பதற்காக எகோர்காவுடன் வெளியே ஓடினாள். அப்போதுதான், எதிரி ஆள் ஒருவன் தீய பல் இளிப்புடன் குதிரையில் பாய்ந்து வந்தான். எகோர்காவைப் புதருக்குள்ளாகத் தள்ளி விட்டு, அவனுக்கு முன்னே நின்றாளோ இல்லையோ அப்போது இக்கொடியவன் தனது வளைந்த கொடுவாளினால் அவளை வெட்டி வீழ்த்தினான். தங்களது போர்க் குதிரைகளில் விசிலடித்துக் கொண்டும், கத்திக் கொண்டும் அந்தப் பயங்கரக் கூட்டம் ஸ்டெப்பியைக் கடந்து சென்ற பிறகு, அநேகமாக அச்சத்தால் செத்துப் போன எகோர்கா, தெருவின் வழியாக, எரிந்து கொண்டிருந்த வீடுகளைக் கடந்து, மணிக்கூண்டிற்கு ஓடி வந்த போது, அங்கே, உலோக முனை கொண்ட அம்பு தொண்டையில் தைக்க, தன் தந்தை தரையில் செத்துக் கிடப்பதைக் கண்டான்.

இப்படித்தான் எகோர்கா அநாதையானான்...

அந்நேரத்திலே ருஷ்யாவில் எத்தனை அநாதைகள் இருந்தார்கள், எத்தனை நல்லவர்கள் மறைந்து போனார்கள்! பூமி குருதியில் மூழ்கிப் போகாதது ஏன்? கரும்புகையில் மூச்சுத் திணறிப் போகாதது ஏன்?

* * *

கிராமத்தில் எஞ்சியதெல்லாம் குழாய்களுடன் கூடிய அடுப்புகள் மட்டுமே. மற்றதெல்லாமே எரிந்து சாம்பலாகி விட்டன. அடுப்புகள் கருத்த சாம்பலில் பாதி புதைந்து கிடந்தன, அவற்றினுடைய நீளமான குழாய்கள் கழுத்துகளைப் போல நட்டமாக நின்றன. இரவில்,



குருதி உறையுமாறு அவற்றில் காற்றுப் புலம்பியது.

தப்பிப் பிழைத்த ஆண்கள் எஞ்சிய கட்டைகளைச் சேகரித்து, அவற்றைக் கொண்டு சில வீடுகளைக் கட்டினார்கள். கட்டைகள் நெருப்பில் கருகிப் போயிருந்தன, ஆகவே அவற்றைக் கொண்டு கட்டப்பட்ட வீடுகள் கருப்புக் காக்கைகளைப் போல எழுந்து நின்றன. கிராமம் தனது பெயரைக் கருப்பு வீடுவாசல்கள் என மாற்றிக் கொண்டது, மகிழ்ச்சி ஆறும் துயர ஆறாக மாறியது.

மகிழ்ச்சியற்ற, அநாதையாகி விட்ட நாள்கள் சிறுவன் எகோர் காவுக்கு மெதுவாக நகர்ந்தன. தனது பெற்றோர்களுக்காகப் பையன் ஏங்கினான். அவன் எப்போதும் மௌனமாகவும், துயரமாகவும் இருந்தான், அடுப்பு பெஞ்சின் மீது கிடந்து இரவில் அழுதான். அவனது பாட்டி அகுலீனா இறந்து விடுவதென்ற முடிவுக்கு வந்து விட்டாள், ஆனால் இப்போது அதைச் சற்றுத் தள்ளிப் போடு வதென்று தீர்மானித்தாள். அத்தகைய நெருக்கடி நிலையில் தன் பேரனைத் தனிமையில் விட்டுச் செல்ல எப்படி அவளால் முடியும்?

குளிர் காலம் கொடுமையானதாகவும், வளமற்றும் இருந்தது. முற்றிய பயிர்கள் அனைத்தையும் குதிரை ஆட்கள் எரிந்து விட்டார் கள். மர உரியும் ஊறுகாய்க் கோசும் தவிர வேறு உணவு எதுவுமே இல்லை. கடினமான வாழ்க்கை வாழவேண்டியிருந்தது.

எகோர்காவுக்கும் அவனது பாட்டிக்கும் ஓர் ஆறுதல் கிடைத்தது. அந்தச் சூறையின் போது அவர்களுடைய வெள்ளைக் கோழி ஓர் அதிசயமான முறையில் தப்பிப் பிழைத்தது. எவ்வளவு மெலிவாக இருக்க முடியுமோ அவ்வளவு அது இருந்தது, ஆனால் மிகவும் எழுச்சியோடு இருந்தது, சில நேரங்களில் முட்டையும் இட்டது. பசியாக இருந்த போதும், பாட்டி அகுலீனா அந்தச் சில அரிய முட் டைகளை, ஈஸ்டர் என்னும் வசந்த விழாவுக்காகச் சேகரித்துக் கொண்டு வந்தாள்.

''வா, பேரா,'' என்று ஒரு நாள் அழைத்தாள். ''முட்டைகளுக்கு வர்ணம் தீட்டி, ஈஸ்டர் அன்பளிப்புகளாக அவற்றை மக்களுக்குக் கொடுக்கலாம். அது அவர்களுக்கு மகிழ்ச்சியைத் தரும்.''

''ஆனால், வர்ணம் பூச எதைப் பயன்படுத்த முடியும்?''

''மக்கள் எப்போதும் எதைப் பயன்படுத்துவார்களோ அதைத் தான். நாம் கொஞ்சம் வெங்காயத் தோல் அல்லது ஓக் மரப்பட் டைகளை வேக வைத்து, முட்டைகளுக்குப் பழுப்பு வர்ணந்தீட்ட லாம்.''

''பழுப்பு வர்ண முட்டைகளைக் கொடுப்பது மக்களுக்கு அவ்வளவு மகிழ்ச்சியைத் தராது, பாட்டி. அநேகமா நாம் அவற்றிற்கு எல்லா வித்தியாசமான வர்ணங்களையும் அடிக்க முடியும்.''

''அதை நாம் எப்படிச் செய்ய முடியும்?''

''சர்ச் முதல்வர், பாதுகாப்பாக வைத்திருக்கும்படி அப்பாவிடம்

கொஞ்சம் வர்ணம் கொடுத்தார், நினைவிருக்கிறதா? அவற்றைக் கொண்டு நான் அடிக்க முயலக் கூடுமா?''

''ஏன் கூடாது?'' அவளது பேரன் கடைசியில் அவனது துக்கத் தைத் தூர எறிந்ததற்காக அவள் பெரிதும் மகிழ்ச்சியுற்றாள்.

எகோர்கா கீழே நிலவறைக்கு ஓடினான், நெருப்புக்குத் தப்பிப் பிழைத்த அவர்களது சில உடைமைகள் இருந்த அங்கே, மரப்பெட் டியைக் கண்டான். வர்ணங்கள் சிறிய பைகளில் பொடிகளாக இருந்தன. அவற்றைக் கொண்டு அவன் எங்ஙனம் வர்ணம் தீட்ட முடியும்?

''ஒரு சமயம் உருவச்சிலை வர்ணந்தீட்டுபவன் முட்டை மஞ்சள் கருவுடன் இந்தப் பொடிகளைக் கலந்ததை நான் பார்த்தேன், எகோர்கா. நீயும் ஏன் முயற்சித்துப் பார்க்கக் கூடாது?''

அப்படியே அவன் செய்தான். முட்டை மஞ்சள் கருவுடன் பொடி களைக் கலந்தான், அவை அழுத்தமான, மின்னுகிற வர்ணங்களாக மாறின!

''ஆரம்பிக்க நான் பயப்படுறேன், பாட்டி!''

''கவலைப் படாதே, பேரா. உனது கண்கள் மருளுகிறதாக இருக்கலாம், ஆனா அந்த வேலையை உனது கைகளே செய்கின் றன!''

வெதுவெதுப்பான வெள்ளை முட்டை ஒன்றை எடுத்து, அதன் மீது என்ன வர்ணந்தீட்ட வேண்டுமென்று சிந்தனையில் ஆழ்ந்தான். பிறகு அப்பாவின் சட்டையில் அம்மா பின்னல் வேலை செய்த பூக்களை நினைத்துப் பார்த்தான். அவற்றைப் போன்ற ஒரு பூவினைக் கவனமாக வரைந்தான், பிறகு இன்னொன்றை, அவற் றைச் சுற்றிலும் பளிச்சிடும் பச்சை இலைகளை வரைந்தான். வானவில்லைப் போல முட்டை மின்னியது. அது அவனது உள்ளங்கை யில் பிரகாசமான சரஃபான் உடையில் உள்ள கிராமியப்பெண் ணைப் போல இருந்தது.

மற்றொரு முட்டையை எடுத்தான். இந்த முறை எடுப்பான வால் இறகுகளுடன் கூடிய சிவப்புநிற வீட்டுச் சேவலை வரைந்தான். உண்மையான ஒன்றைப் போலவே! மூன்றாவது முட்டையில் மாயச் செடிகள், குதித்து விளையாடுகின்ற ஒல்லியான கால்கள் கொண்ட குதிரைகள் மற்றும் அதிசயத் தோற்றந் தரும் விலங்குகள் உயிர் பெற்றன.



''அருமை, நம்ப முடியவில்லை, எகோர்கா! இதைச் செய்வதற்கு எங்கே நீ கற்றுக் கொண்டாய்?''

தன் தந்தையினுடைய வெள்ளி மணியோசைகளினின்றும், அவன் தாயினுடைய தேவதைக் கதைகளினின்றும் அவன் அழகை உறிஞ்சி யிருந்தான், அந்த அழகு இப்போது விழித்தெழுந்திருந்தது.

* * *

குளிர்காலம் எவ்வளவுதான் கொடுமையானதாக இருந்தாலும் வசந்தம் அதன் மீது வெற்றிகொண்டது, குளிர்காலத்தைக் கண்ணீர் விட வைத்தது. அதனது கண்ணீர் சிற்றாறுகளாக உருவெடுத்துத் தீயில் பொசுங்கிய பூமியை அடித்துச் சென்றது. பூமி பெருமூச்சுவிட்டு வெதுவெதுப்பான ஆவியை வெளிவிடத் தொடங்கியது. வசந்தம் வந்தது. அத்துடன் வசந்தகால விழா ஈஸ்டரும் வந்தது.

முன்னைய நாள்களில் பாட்டி அகுலீனா, காளான்களைப் போல உயரமாகவும், வட்டமாகவும், உச்சியில் பனியைப் போல இனிப்பைத் தடவி, உலர்ந்த திராட்சைகளுடன் ஈஸ்டர் கேக் சுட்டாள். கேக் பிண்டு போகாமல் இருந்தால், குடும்பத்தில் எல்லாரும் நன்றாக இருப்பார்கள். ஆனால், அது உயராது அல்லது வளைவாக இருந்தால், அது ஒரு கெட்ட சகுனமாகும்.

''உன்னுடைய ஈஸ்டர் கேக்குகளை அலங்கரிக்க எதற்குக் கவலைப் படுகிறாய், பாட்டி?'' என்று அவர்களது அண்டை வீட்டுக்காரக் கிழவன் அஃபனாஸி அவளைக் கேட்பான். ''அது எப்படிப்பட்ட தோற்றத்தில் இருந்தாலும் நிச்சயமாக உன் வயிறு பொருட்படுத்தாது, இல்லையா?''

''உன்னுடையது அக்கறைப்படாது இருக்கலாம், கிழவரே, ஆனால் என்னுடையது அப்பாவித்தனமானது, ஆகவே ஏதாவது அழகிய தோற்றமுடையதைப் பார்க்கட்டும்.''

ஆனால் இந்த ஆண்டு ஈஸ்டர் கேக்குகள் தயாரிக்க எதுவுமே இல்லை.

காலையில் பாட்டி தனது சிறந்த தலைக்குட்டையை அணிந்து கொண்டு, வர்ணம் பூசப்பட்ட முட்டைகளைச் சிறிய வெள்ளைத் துணியில் கட்டிக் கொண்டு, எகோர்காவின் தலைமுடியை வாரி விட்டு, அவர்கள் மகிழ்ச்சியான ஈஸ்டர் வாழ்த்தினை பக்கத்து வீட்டார்க்குத் தெரிவிப்பதற்காகப் புறப்பட்டார்கள்.

முதலில் அவர்கள் கிழவன் அஃபனாஸியை பார்த்தார்கள். அவன் தனது பேத்தி மாஷாவுடன் வசித்தான். அவளுங் கூட ஓர் அநாதை தான். அந்தப் பயங்கரமான காலையில் குதிரையில் வந்தவர்கள் அவளது தாயாரைச் சுருக்குக் கண்ணியிட்டுப் பிடித்து, தங்களுக்குப் பின்னே ஸ்டெப்பி நிலத்திற்குள்ளாக இழுத்துச் சென்றார்கள். அவளை மீட்பதற்காக ஒரு கவர்க்கோலுடன் அவர்கள் பின்னால் அவளது தந்தை ஓடினார். அவர்களில் ஆறு பேரைக் குத்திச் சாய்த்தார், ஆனால் *அந்தக் கூட்டத்திற்கு எதிராகத் தன்னந்தனியாக என்ன செய்ய முடியும்? அவரது உடலை அவர்கள் தங்களது வேல் கம்புகளினால் மேலே தூக்கினார்கள்...

எகோர்காவும் அவனது பாட்டியும் கிழவனையும் மாஷாவையும் மரபுக்கேற்ப மூன்று முறை முத்தமிட்டு, வர்ணம் பூசப்பட்ட முட்டைகளை அவர்களிடம் கொடுத்தார்கள். ஆச்சரியத்தால் கிழவன் தனது கைகளை விரித்தான்.

''என் அன்பே, அகுலீனா, இவற்றை உண்மையாகவே அழகாகச் செய்திருக்கிறாய்.''

''அது நான் செய்யவில்லை. அது எகோர்காவின் வேலை.''

''ஒரு சிறுவனால் எப்படி இம்மாதிரியாக வர்ணந்தீட்ட முடிந்தது?''

மாஷாவுக்கு எகோர்கா கொடுத்த முட்டையில் சிவப்பு வீட்டுச் சேவல்கள் இருக்கவே, முகஞ்சிவந்து அடுப்புக்குப் பின்னே குழப்பத்தோடு ஓடினாள்.

எங்கெல்லாம் அவர்கள் சென்றார்களோ அங்கெல்லாம் அவர்களது பரிசுகளினால் சிரிப்பும் மகிழ்ச்சியும் ஏற்பட்டது. எனினும், ஒரு நாளைக்காவது மக்கள் துயரத்தை மறக்க எகோர்கா உதவி செய்தான்.

* * *

வசந்தகாலம் வந்தது, ஆனால் வாழ்க்கை எகோர்காவுக்கும் அவனது பாட்டிக்கும் சுலபமானதாக இல்லை. கொள்ளையர்கள் அவர்களது குதிரையையும் பசுவையும் ஸ்டெப்பிக்குள்ளாக ஓட்டிக் கொண்டு போய் விட்டார்கள், ஆகவே அவர்களால் உழ முடியவில்லை, குடிப்பதற்குப் பாலுமில்லை.


எகோர்கா குச்சி போல மெலிந்து விட்டான். ஆகவே அவனைக் கால்நடைகளை மேய்க்க விடுவதென்று கிராமத்தார்கள் முடிவு செய்தார்கள், அல்லது அவன் செத்துப் போய் விடுவான்.

கிராமத்தில் எஞ்சியவைகளை அவர்கள் ஒன்று சேர்த்தார்கள்: ஒரு பெண் குதிரை, அதனது குட்டி, இரண்டு வெள்ளாடுகள் மற்றும் ஒரு பசு.

அதிகாலையில், இன்னமும் தரை பூஞ்சிறகு போன்ற பனிமூட்டத்தால் இறுக்கமாகக் கட்டுண்டு கிடந்த போது, எகோர்கா முற்றங்களைச் சுற்றி வந்து தனது 'மந்தை'யை ஒன்று சேர்த்து, புல்வெளிக்கு அதை ஓட்டிச் செல்வான். மரபுக்கேற்ப அவன் ஒரு சாட்டையை நெய்தான், நாய்க்குப் பதிலாக ஆண் பூனை திரேந்தியை பின்னுக்குக் கூட்டிச் சென்றான். ஒரு நாய் போலத் தனது வாலை வைத்துக் கொள்ள திரேந்தி கற்றுக் கொண்டது, குரைக்கத்தான் முடியாது! தீ விபத்துக்குப் பிறகு அது நீண்ட காலமாகக் காணாமற் போய்விட்டது, ஆனால் பிறகு திரும்பவும் ஒருநாள் வந்து சேர்ந்தது, ஓர் எலும்புக்கூடு போல மெலிந்து போனது, அதனது மென்மயிர் சில இடங்களில் கருகிப்போயிருந்தது, அதனது மீசைமயிர்கள் முற்றிலுமாக எரிந்து போய்விட்டன.



ஒரு நாள் எகோர்காவும் அவனது கதம்ப மந்தையும் துயர ஆற்றின் கரைக்கு வந்தனர். பசுவும், வெள்ளாடுகளும் இளம் புல்லை மேயத் தொடங்கின, பெண் குதிரையும் அதனது குட்டியும் ஆற்றில்



ஆழத்திற்குள் சென்று நீர் குடிக்கத் தொடங்கின. குதிரைக் குட்டி, ஒரு சிறு குழந்தை போலத் தனது தாயிடம் நெருங்கி நின்று கொண்டது, பெண் குதிரை, பயப்பட வேண்டாம் எனக் கூறுவது போல அதன் பின்பகுதியைத் தனது ஈரமான மூஞ்சியால் தடவிக் கொடுத்தது. ஆற்றுக்கு மேலாக மிதந்து கொண்டிருந்த வெண்பனிமூட்டம் பார்வைக்குத் தெரியாதபடி அவற்றை மறைத்தது, எப்போதாவது ஒரு வாலையோ, ஒன்று சிறியதும் மற்றது பெரியதுமாக இருந்த இரண்டு தலைகளுடன் கூடிய ஒரே குதிரையையோ காட்டியவாறு பனிமூட்டம் விலகியது.

எகோர்கா அவற்றை நீண்ட நேரமாகக் கவனித்தான், தன்னை அறியாமலேயே தூங்கிப் போய் விட்டான். திடீரென்று ஓர் ஒடுக்கமான படகு பனிமூட்டத்தின் ஊடாக மௌனமாக மிதந்து வந்து கொண்டிருப்பதைப் பார்த்தான். பக்கங்கள் செதுக்கப்பட்டிருந்தன, படகின் முன்புறமானது இரண்டு குதிரைத் தலைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. நடுவே, நீண்ட வெண்ணிற சரஃபான் அணிந்த ஒரு பெண் சோகமாக முறுவலித்துக் கொண்டே நின்றாள்.

எகோர்கா உற்றுப்பார்த்தான், ஆனால் அது யார் என்பதைக் காண முடியவில்லை. பனிமூட்டம் அவளைத் தெரியாதவாறு மறைத்தது.

இப்போது படகு அவனைக் கடந்து போய்க் கொண்டிருந்தது, மெதுவாக, வானத்திலே மிதக்கும் ஒரு சிறகைப் போல. திடீரென்று அப்பெண் இவனைப் பார்த்து மிகவும் தாழ்ந்த குரலில் கேட்டாள்:

''என்னை நினைவிருக்கிறதா, மகனே?''

எகோர்கா கத்தினான், குதித்து எழுந்து நின்றான், ஆனால் படகு பேரச்சத்துடன் அவனிடத்திலிருந்து விலகிப் போயிற்று, அது படகாகவும் இல்லை, ஆனால் அது ஒரு வெள்ளை அன்னம். தனது சிறகுகளை உரக்க அடித்தபடி பனிமூட்டத்திற்குள்ளாக மறைந்து போயிற்று.

எகோர்கா விழித்தெழுந்தான், அவனது முகம் கண்ணீரால் நனைந்திருந்தது. ''அம்மா,'' அவன் கிசுகிசுத்தான். ''உண்மையாகவே அது நீ தானே?''

இந்தக் கனவின் நினைவில், ஒரு கடினமான பீர்ச் மரக்கட்டைத் துண்டில், முன்புறத்தில் இரண்டு குதிரைத் தலைகள் கொண்ட மந்திரப்படகைச் செதுக்குவதில் எகோர்கா சில நாள்களைச் செலவிட்டான். நடுப்பகுதியை அவன் செதுக்கி முடித்த போது, கொஞ்சம் பெரணியைப் பறித்து, அதனது கடினமான காம்பால் படகு பளபளப்பாகும் வரை மெருகிட்டான். மாலையில் பாட்டி அகுலீனாவிடம் தனது கனவைப் பற்றிக் கூறிப் படகை மேசை மீது வைத்தான். பாட்டி அதைக் கவனமாக எடுத்துத் தடவிக் கொடுத்தாள். பிறகு அவள் கூறினாள்:

‘‘அருமையான கோப்பைக் கரண்டி நீ செய்தது, எகோர்கா. எப்பொழுதெல்லாம் இதிலிருந்து நீ குடிக்கிறாயோ, அப்பொழு தெல்லிாம் உன் அம்மாவை நீ நினைப்பாய்.’’

அந்த இரவு எகோர்கா அடுப்பு பெஞ்சின் மீது படுத்து நீண்ட நேரத்திற்குப் புரண்டான். ‘‘இது போன்ற கோப்பைக் கரண்டிகளை, தங்களுக்குப் பிரியமானவரை இழந்த ஒவ்வொருவருக்காகவும் செதுக்கி னால் நன்றாயிருக்கும்,’’ என்று நினைத்தான்.

அவ்வாறே அவன் செய்தான். கோடை முழுதும் அவன் இழைக்க வும், செதுக்கவும், மெருகிடவும் செய்தான்.

தங்களுக்குப் பிரியமானவர்களை நினைப்பதற்காகக் கிராமத்தவர் கள் ஒன்று கூடினார்கள். மரபுக்கேற்ப அவர்கள் கொஞ்சம் பீரைக் காய்ச்சி வடித்தார்கள். பிறகு எகோர்கா ஒவ்வொருவருக்கும் ஒரு கோப்பைக் கரண்டியை அளித்தான். ஆண்கள் மகிழ்வுடன் உறுமினார் கள், அருமையான மரவேலையைப் பாராட்டினார்கள், பெண் களோ பரிசுகளை மார்புறத் தழுவி அழுதவாறே குழப்பமடைந்த ‘வேலைக்காரனி’ன் பொன்னிற உச்சந்தலையில் முத்தமிட்டார்கள்.

* * *



எகோர்கா இப்போது கிளர்ச்சி கொண்டான், தனது நேரத்தைச் செலவிட ஒரு பயனுள்ள வழியை அவன் கண்டுபிடித்து விட்டான். கரண்டிகளைச் செதுக்குவதற்குக் கற்றுக் கொண்டான்: குழந்தை களுக்காக வளைந்த கைப்பிடிகளும் மகிழ்ச்சியான ஓவியமும் கொண்ட சிறிய கரண்டிகள்; ஆண்களுக்காக செதுக்கப்பட்ட கரடிகளுடன் கூடிய பெரிய கரண்டிகள்; குடும்பப் பெண்களுக்காகப் பிரகாசமான படங்களுடன் கூடிய மிகப் பெரிய அகப்பைகள்; குடும்பம் முழுமைக்கு மாக மடக்கு அடைப்பானுடன் கூடிய நன்கு செதுக்கப்பட்ட உப்புக் கலயங்கள். ருஷ்யாவில் உப்பு உயர்வாகப் போற்றப்பட்டது, உணவு மேசை மீது உப்புக் கலயத்துக்கு எப்போதுமே பெருமைக்குரிய இடமளிக்கப்பட்டது.

மற்ற கிராமங்களில் இருந்த மக்கள் எகோர்காவைப் பற்றிக் கேள்விப்பட்டு அவனுடைய கரண்டிகளுக்காகவும், கோப்பைக் கரண்டி களுக்காகவும், உப்புக் கலயங்களுக்காகவும் வந்தார்கள். அவன் பணம் பெற்றுக் கொள்ளவில்லை, வெறுமனே அவற்றைக் கொடுத்தான். பிறகு ஒரு நாள் பக்கத்துக் கிராமத்திலிருந்து வந்த கிழவன் ஒருவன் இவனிடம் கோபம் கொண்டான்.

‘‘என்னுடைய தேனை நீ மறுப்பது ஏன்?’’ என்று கேட்டான். ‘‘அந்தக் கரண்டிகளை நீ உனக்காகச் செதுக்கவில்லை, இல்லையா? நானும் தேன்கூடுகளை எந்தவகையிலும் எனக்காக வைத்துக் கொள்ளவில்லை. தேனீக்களை எடுத்துக் கொள். அவற்றில் ஒன்று மலரைக் கண்டுபிடிக்கும், இன்னொன்று அதினின்றும் சொட்டுச்

சொட்டாக அமிழ்தத்தை உறிஞ்சும், மூன்றாவது தேனடை கட்டும், நான்காவது கூட்டைச் சுத்தம் செய்யும். அவை எல்லாமே ஒன்றுக் கொன்று வேலை செய்கின்றன. மக்களும் அப்படியே செய்ய வேண்டும்.''

ஆண்டுக்காண்டு மேன்மேலும் ஆட்கள் எகோர்காவிடம் வந்தார் கள். இப்போது அவர்கள் அவன் செய்ததை எடுத்துக் கொள்வது மட்டுமல்லாமல் அவனிடம் தேவைக்குச் சொன்னார்கள். ஒருவர் பலகாரங்களுக்கு அழகிய தட்டையும், மற்றவர் வேரிலிருந்து ஒரு பெரிய வாளியையும், மூன்றாமவர் தன் மகளது சீதனத்துக்காகப் பேழையையும் விரும்பினார்.

சில நேரங்களில் வீடானது வாடிக்கையாளர்களால் நிறைந்து வழிந்தது, அநேகமாக வீடு இடிந்து விழுவது போலத் தோன்றியது.

''நமக்காக நான் ஒரு புதிய வீடு கட்ட வேண்டும் என்று நினைக் கிறேன், பாட்டி,'' என்று எகோர்கா ஒருநாள் சொன்னான்.

''நல்லது. உன் அப்பாவும் தானே கட்டினார்.''

எகோர்கா பலமான பைன் கட்டைகளைச் சேமித்து வைத்தான், வீடு வெதுவெதுப்பாக இருப்பதற்காக. குளிர்க்காலத்திற்காகத்தான் வீட்டைக் கட்டுவது, கோடைக்காக அல்ல. புல்படர்ந்த சிறு குன்றின் மீது அருமையான இடத்தைக் கண்டான், வேலையானது தொடங் கப்படவிருந்தது, அப்போது பொறுத்திருக்கும்படி பாட்டி அவனிடம் சொன்னாள்.

''நான்கு குழிகள் தோண்டு,'' என்றாள், ''மூலைகள் இருக்கும் இடங்களிலே. அங்கே தீய ஆவிகள் எதுவும் இல்லை என்பதை நாம் அவசியம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.''

எகோர்கா வியப்படைந்தான், ஆனால் அவள் சொன்னபடி செய்தான். பிறகு பாட்டி அகுலீனா நீர் நிறைந்த மரக்குவளையை ஒவ்வொரு குழியிலும் வைத்து அதை ரொட்டித் துண்டால் மூடினாள். காலையில் அவர்கள் அதைப் பார்த்தார்கள். எந்தக் குவளையும் கீழே சாய்க்கப்படவில்லை. இதன் பொருள் அந்த இடத்தில் தீய ஆவிகள் எதுவுமில்லை என்பதாகும். ஆகவே இப்போது அவர்கள் அங்கே வீட்டைக் கட்ட முடியும்.

எகோர்கா அதனைத் தானாகவே எப்போதுமே கட்டி முடிக்க முடியாது, ஆனால் கிராமத்தில் பாதிப்பேர் அவனது உதவிக்கு வந்தார்கள். கோடரிகள் ஒலித்தன, மரச்சீவல்கள் பறந்தன, பசை வாடை அழுத்தமாக வீசியது. அவர்களது கண்களுக்கு முன்னால் வீடு வளரத் தொடங்கியது. தன்னுடைய வீட்டிற்கு வெளியே ஒரு பெஞ்சின் மீது அமர்ந்த கிழவன் அஃபனாஸி, பாட்டி அகுலீனாவை பரிகசித்தான்:

''உனது பாடல்களைப் பாடு, உனது வீட்டைக் கட்டு, ஆனால் வசதியாகப் படுப்பதற்கு ஒரு சவப்பெட்டிக்காக ஆறு பலகைகளை வைத்திரு.''



''சாவதற்கு நீ நினைத்தால் அவற்றை நீ வைத்திரு. ஒரு வீட்டைக் கட்டுவதை விட அது மிகச் சுலபமானது. படு, வாயைப் பிள, உனது கால்களை நீட்டிக்கொள்.''

கட்டைகளின் கடைசி அடுக்கு வைக்கப்பட்ட போதும், இறைவாரக் கைகள் சரியாக வைக்கப்பட்ட போதும், எகோர்கா மரபுக் கேற்ப ஒரு குதிரையின் தலையைச் செதுக்கி அதை கூரை உத்தரத்தின் மீது நிலைநாட்டினான்.

பிறகு பாட்டி ஆண் பூனை திரேந்தியை புதிய வீட்டிற்குள் நுழையவிட்டாள். எந்தத் தீய ஆவிகளும் உள்ளே வந்துவிடவில்லையா என்பதை அது பார்க்க முடியும் எனக் கருதப்பட்டது. பூனையால் அவற்றை மோப்பம் பிடிக்க முடியும். ஏதாவது இருந்தால், காலால் காற்றை எற்றும். திரேந்தி சமநிலையில் நடந்தது, ஒவ்வொன்றையும் முற்றாகச் சோதித்தது, எல்லா மூலைகளையும் மோப்பம் பிடித்தது, எதையுமே `காணவில்லை, பிறகு மரச்சீவல்களுக்கு மத்தியில் உருள ஆரம்பித்தது. ஆகவே இப்போது அவர்கள் புதுமனை புகுவிழா நடத்த முடியும்.

அதன் பின்னர் ஓராண்டு வரை எகோர்கா தனது வீட்டைச் செதுக்கு வேலையால் அலங்கரித்தான், ஒவ்வொரு பலகையையும் விரும்புகிற முறையில் வடிவமைத்தான். சாதாரண மரவீடாக அமையாது ஒரு சிறிய தேவதைக் கதை மாளிகையாக அமைகின்ற வரை அலங்கரித்தான். வீட்டின் முன்புறப் பலகையில் செதுக்கு வேலை செய்யப்பட்ட மயில்கள் இருந்தன. வீட்டில் மகிழ்ச்சி நிலைக்கச் செய்ய பெரிய வால்களுடன் கூடிய இரண்டு கடற்கன்னி கள் சன்னல்களுக்கு மேலே இருந்தன, உத்தரத்திற்குக் கீழே சிரிக்கின்ற சிங்கங்கள் இரண்டு இருந்தன. விருந்தினர்கள் இங்கே வரவேற்கப் பட்டார்கள் என்பதைத் தொலைவிலிருந்தே காண முடியும்.

உண்மையில், முன்னை விட அதிக விருந்தினர்கள் வந்தனர். சிறிது காலம் சென்றதும் ஒருவர் பின் ஒருவராகத் தங்களது வீடுகளைக் கட்டிக் கொண்டிருந்தார்கள். சிலர் அலங்காரமின்றிச் சாதாரணமாக வும், வேறு சிலர் எகோரியிடமிருந்து செதுக்கு வேலையைக் கற்று அதன்படியும் கட்டிக்கொண்டிருந்தார்கள், இவ்வாறே அவன் இப் போது மரியாதையோடு அழைக்கப்பட்டான்.

கருப்பு வீடுவாசல்கள் என்பதற்குப் பதிலாகக் கிராமம் வெறுமை யாக வீடுவாசல்கள் எனத் திரும்பவும் அழைக்கப்பட்டது.

* * *

முதலில் விழிப்பது கிராமத்தின் சேவல் தான். பகலை ஆரம்பித்தல் அதனது பணி. மூன்று முறை அது கூவ வேண்டியிருந்தது, முதல் முறை அது தனது தொண்டையைச் சரி செய்து கொள்ள, இரண்

டாவது முறை மக்களை உசுப்ப, மூன்றாவது முறை அவர்களைப் படுக்கையினின்றும் எழச் செய்ய.

முதலாவது கூவலுக்கே எகோர்கா எழுந்து, பனித்திவலையால் கழுவிக் கொள்வதற்காகப் புல்வெளிக்குச் சென்றான்.



இன்று சூரியன் இத்தனை அதிசயமாக இருந்தது ஏன்? வானவில்லின் எல்லா நிறங்களுடனும் சுடரிட்ட அது, விளையாடுவது போல குதித்துக் குதித்துக் குளிப்பதற்காக நதிக்குள்ளாக மூழ்கித் திரும்பவும் வெளியே வந்தது.

''இன்று புனித இவானின் இரவு!'' எகோரி நினைவுபடுத்திக் கொண்டான், ஒரு குதிரைக் குட்டி போல ஈரமான மேய்ச்சல் நிலத்தைச் சுற்றி ஓடத் தொடங்கினான். அது மிகவும் சிறப்பான நாள்.

புனித இவானின் இரவில் மிக நீண்ட பகற்பொழுது மிகக் குறுகிய இராப் பொழுதைச் சந்திக்கும். அப்போது புற்களும் செடிகளும் செடிப்பால் நிறைந்து கனக்கும். பழங்கள் பழுக்கத் தொடங்கும், விவசாயியினுடைய மிக முக்கியப் பணியாகிய அறுவடை அதிக தூரத்தில் இருக்கவில்லை.

சிறப்பான முறையில் அறுவடைக்கு அவர்கள் தயாராகிக் கொண்டிருந்தார்கள். புனித இவானின் இரவில், சுவாலையில் தூய்மைப் படுத்திக் கொள்ளவும், தீய பார்வையையும், கருப்பு மந்திரத்தையும் விலக்கவும், எல்லாவற்றினும் முக்கியமானதாகிய, அறுவடை தொடங்குவதற்கு முன்னதாகத் தங்களது வலிமையையும், உயர்ந்த ஆர்வத்தையும் வளர்த்துக் கொள்ளவும் அவர்கள் ஒரு பெரிய நெகிடியைத் தாண்டினார்கள்.

காலையில் இளம் பெண்கள் வெட்டப்பட்ட ஓர் இளம் பிர்ச் மரத்தை வர்ண நாடாக்களாலும், மலர்களாலும், புற்களாலும் அலங்கரித்தார்கள். நதிக்கரையில் இளைஞர்கள் நெகிடியை வளர்த்தார்கள், மரபுப்படி பிர்ச் மரத்தைத் திருடி அதனை முரிக்கத் தொடர்ந்து முயன்றார்கள். ஆனால் இளம் பெண்களோ சிரித்து, கேலி செய்யும் பாடல்களைப் பாடிக் கொண்டு அப்பால் ஓடினார்கள்:

புனித இவானின் இரவில் தீ எரிகிறது,
எம் வாலிபர் வயிறுகளோ வலிக்கிறது!
வலிகளை அவர்களும் புரிந்து கொள்கிறாரே!
புனித இவானின் மரத்தை முரிக்காதிரென்றே!

மாலையில் கிராமம் முழுமையுமே, இளைஞர்களும் கிழவர்களும், தங்களது வண்ண உடைகளுடன் ஒன்று கூடினர். எங்கு நோக்கினும், இரைச்சலும், சிரிப்பும், பாட்டுமாய் இருந்தது. இளைஞர்களுக்குச் சற்றும் குறையாது கிழவர்கள் களியாட்டத்தில் கலந்து கொண்டனர். கிழவன் அஃபனாஸியும் தாத்தா மிகேயும் மரபுப்படி நெகிடியைப் பற்ற வைத்தார்கள். பலமாக மூச்சு விட்டுக் கொண்டும்,

உறுமிக் கொண்டும் ஒரு சுள்ளியைத் தங்களது உள்ளங்கைகளில் வைத்துத் தேய்த்தார்கள். காய்ந்த மரத்துண்டின் மீது சுள்ளி வைக்கப் பட்டது. தொடர்ச்சியாக உரசிக் கொண்டிருந்தது கட்டையைப் புகையச் செய்தது, அதன் மீது கொஞ்சம் காய்ந்த பாசியை அவர்கள் தூவிய போது, மிகச் சிறிய, சிவப்புச் சுவாலையின் சுடர் தோன்றி யது. புனித இவானின் நெகிடியைப் பற்ற வைக்க இந்த ஒரு முறை மட்டுமே அநுமதிக்கப்பட்டது.

எல்லாத் திசைகளிலும் பொறிகளை உதிர்த்தபடி, சுவாலை உயரே எழுந்தது. விரைந்து அப்பால் தாண்டாவிட்டால், தீப்புண் ஏற்படும்.

இப்போது வெப்பமாகவும், கர்ஜித்துக் கொண்டும் இருந்த நெகிடி ஒவ்வொருவரையும் மகிழ்ச்சியாக இருக்கவும், அச்சப்படவும் வைத்தது. இப்போது அவர்கள் கைகளைக் கோத்துக் கொண்டு, ஜோடியாக நெகிடிக்கு மேலாக ஓடிக் குதிக்க வேண்டி இருந்தது. வெறுமனே எந்தக் கூட்டாளியுடனும் இல்லாது தங்களது விருப்பத் திற்கேற்ற நபருடன். அந்த ஜோடி தங்களது கைகளை விட்டு விடாது இருந்தாலும், பொறிகள் அவர்களைப் பின்தொடர்ந்தாலும், அவர் களுக்கு நிச்சயம் திருமணம் முடியும்.

எல்லாவற்றின் மீதும் பிரகாசமான வெளிச்சத்தைத் தீ ஏற்படுத் தியது. மஞ்சள், சிவப்பு, நீல நிறத்தினாலான நாடாக்களும் சரஃபான் களும் தேவதைக் கதையில் வருவன போல நடனமிட்டன, பின்னிப் பிணைந்தன. பெண்களின் தலைகளில் இருந்த மலர்க் கொத்துகள் அரச கிரீடங்களைப் போல இருந்தன, அவர்களுடைய கண்கள் எரிக்கிற அளவில் பிரகாசமாக இருந்தன.

அவர்கள் எல்லாருமே எடுப்பாக இருந்தார்கள், இருந்தும் எவளா லும் எகோர்காவின் பாசத்தைப் பெற இயலவில்லை.

பிறகு மாஷா ஒருத்தியே அவனிடம் சென்றாள். தனது சிறந்த ஆடைகளில் ஒளிமயமாகத் தோன்றிய, தனது துணிச்சலால் வெட்க மடைந்த அவள், தனது கைக்குட்டையின் ஓரங்களை முறுக்கிய வாறு அங்கே நின்றாள்.

''நாம் போய்க் குதிக்கலாம், வருகிறாயா, எகோரி? நீ எதையேனும் நினைக்காதே, தனியாகத் தாண்ட நான் பயப்படுகிறேன்.''

எகோர்கா புன்னகையுடன் அவள் கையைப் பற்றினான். அவர்கள் ஓடிச் சென்று அனல் தகிக்கும் நெகிடிக்கு மேலாக இணை பறவை களைப் போலப் பறந்தார்கள். அவர்களில் எவரும் பிடியைத்தளர்த்த வில்லை, பொறிகள் தீத்தேனீக்களின் கூட்டத்தைப் போல அவர் களைப் பின்தொடர்ந்தது. இதைக் கண்ட கிராம மக்கள் கத்தினார் கள்: ''ஜோடி! நல்ல ஜோடி!''

மாஷா தடுமாற்றத்தால் தனது கையை உருவிக் கொண்டு அங்கிருந்து ஓடினாள், அவர்களது எக்களிப்பு மிக்க சிரிப்பு அவளைப் பின்தொடர்ந்தது.

நெருப்பு அணையத் தொடங்கிய போதும், இருண்ட வானத்தில் நட்சத்திரங்கள் மிகவும் பிரகாசமாகப் பளிச்சிட்ட போதும், இளம் பெண்கள் பிர்ச் மரத்தை ஆறு வரை எடுத்துச் சென்று, அதனது தாகத்தைத் தணித்துக் கொள்வதற்காகவும், பூமிக்கு மழையை அழைப்பதற்காகவும் அதை நதியில் எறிந்தார்கள். இருண்ட நீரின் மீது நெடுகிலும் மரம் ,மிதந்து சென்றது, இளம் பெண்களுடைய மலர்க் கொத்துகள் நிலவொளியில் அதன் பின்னே சென்றன. எங்கே ஒருத்தியினுடைய மலர்க் கொத்து கரை சேருகிறதோ, அங்கே அவளது மணமகன் நிற்கிறான். மலர்க் கொத்து நீரில் மூழ்குமானால் அது ஒரு கெட்ட சகுனம். ஆனால் அன்றைய தினம் எந்த மலர்க் கொத்துகளும் மூழ்கவில்லை, கடவுளுக்கு நன்றி.

திருமணமான பெண்கள் தங்களது மலர்க் கொத்துகளை நீருக்குள் ளாக வீசியெறியவில்லை, தங்களது கணவன்களுடனும் பெற்றோர் களுடனும் நீராவிக்குளியல் எடுக்க புறப்பட்டுச் சென்றார்கள். அவர் கள் ஒவ்வொருவரும் குளிப்பதற்காக நன்கு மணக்கும் புற்களாலும் பிரகாசமான மலர்களாலும் சேர்த்துக்கட்டிய விஷேடமான துடைப்பம் வைத்திருந்தார்கள்.

இந்த ஒரு கணத்திற்காகத்தான் இளைஞர் கூட்டம் காத்துக் கொண்டிருந்திருக்கிறது. முதியவர்கள் புறப்பட்டுப் போன உடனேயே, அவர்கள் தங்களது ஆடைகளைக் களைந்து எறிந்து சிரித்துக் கொண்டே நதியில் முக்குளித்தார்கள் — நீர் விசிறியடித்தது! மனம் நிறைவு பெறுமாறு அங்கே அவர்கள் நீரைத் தெளித்துக் கேளிக்கை செய்து கீச்சிட்டுக் கொண்டார்கள். அந்த இரவில் நீர் விஷேடமான, உயிர் ஊட்டச் சக்திகளைப் பெற்றிருந்தது, ஏனெனில் சூரியன் அதற்குள் குளித்திருந்தது.

நீரில் இளம் பெண்கள் நீர் வில்லிகளைப் போல மலர்ச்சியுற்றார் கள், முன்னைவிட அழகாக.

ஆனால் மாஷா எங்கே?

எல்லாரும் நீரிலிருந்து கரைக்கு வந்தார்கள், ஆனால் அவளோ காணப்படவில்லை. எகோரி பரபரப்போடு சுற்றிலும் பார்த்தான். மூழ்கிப் போயிருக்க முடியுமோ? மற்றவர்களைக் கேட்டான். அவள் காட்டுக்குள் செல்வதை அவர்கள் பார்த்திருக்கிறார்கள்.

அவளைக் கண்டுபிடிக்க எகோரி விரைந்து வெளியேறினான். இத்தகைய ஓர் இருண்ட இரவில் காட்டில் எதுவும் அவளுக்கு நேரவியலும். வீணாக அவளைத் • தேடினான். அவளைப் பற்றிய அடையாளம் எதுவுமே இல்லை. சுற்றி இருந்தன வெல்லாம் அச் சுறுத்துகின்ற அமைதிதான், மூச்சை அடக்கிக் கொண்டு காடு இருப்பதைப் போல இருந்தது.

திடீரென்று ஒரு கருப்பு ஆந்தை தலைக்கு மேலாக அலறி காடு உயிர் பெற்றது. காற்றே வீசவில்லை, எனினும் இலைகள் சலசலத்தன, கொப்புகள் கிறீச்சிட்டன, மரங்கள் அலைந்து நகர்ந்து எகோரியை



நெருக்கித் தள்ளத் தொடங்கின. எகோரி அச்சத்தால் பிடிக்கப்பட்டான். அவனது முதுகெலும்பு நடுங்கியது.

புனித இவானின் இரவில் விநோதமான விஷயங்களின் எல்லா வகைகளும் நடந்தன என்று பாட்டி கூறியதை அவன் நினைவுகூர்ந்தான். அவளை அவன் நம்பவில்லை, ஆனால் இப்போதோ அவள் கூறியது சரியென்பதைக் கண்டான்! மரங்களினின்றும் நீண்ட வளைநகங்களுடன் கூடிய ரோமமிருந்த கைகள் அவனது தொண்டையைப் பிடிப்பதற்காக நீட்டுவது போலக் காணப்பட்டது. அச்சந்தரும் முணுமுணுப்பை அவன் கேட்க முடிந்தது. இருளில் மங்கலான தீக்கள் மினுமினுத்தன.

ஓடுவதற்காக எகோரி திரும்பினான், எதோ புதர்களின் மீது மோதினான். அவனுக்கு முன்னே கிறீச்சிடும் கதறலைக் கேட்டான், பிறகு எல்லாமே அமைதியாகிப் போயிற்று. அது மாஷாவின் குரலைப் போல ஒலித்தது. கண நேரத்தில், எகோரி தனது பயத்தை மறந்து விட்டு, அந்த இடம் நோக்கி முன்னே ஓடினான். அவனது இதயம் வேகமாக அடித்துக் கொண்டிருந்தது, சுறீரெனத் தாக்கிய கிளைகளால் அவனது முகம் சிராய்ப்புற்று, குருதி கசிந்து கொண்டிருந்தது. நேரத்தில் அவன் அங்கு போயாக வேண்டும்!

நிலவு காய்ந்த காட்டின் திறந்த வெளியில் ஓடுகையில், கையில் ஒரு பெரணிச் செடியுடன் அசைவற்று மாஷா படுத்திருப்பதைக் கண்டான். எகோரியின் கால்கள் நிலைகுலைந்தன. முழங்கால்களை வைத்துக் கீழே விழுந்து, அவளது மார்பின் மீது தலையை வைத்தான். அவள் இதயம் இன்னமும் துடித்துக் கொண்டிருந்தது. அவள் உயிரோடு இருந்தாள்!

அவளது முகத்தில் கிடந்த தலைமுடியை விலக்கியவாறு, ஆச்சரியத்தோடு பார்த்தான். மாஷாவை ஒவ்வொரு நாளும் பார்த்துக் கொண்டுதான் வந்திருக்கிறான், விசேஷமான எதையும் அவளிடம் அவன் ஒருபோதும் கண்டதில்லை. ஆனால் இப்போது, முதல் முறை என்பது போல, அவள் எவ்வளவு அழகாக இருந்தாள் என்பதைக் கண்டான். அந்த மந்திர இரவு அவளை அழகுள்ளவளாக ஆக்கியிருக்க வேண்டும், அல்லது எகோரிக்கு ஒரு ஜோடி புதிய கண்களைக் கொடுத்திருக்க வேண்டும்.

தன்னைத் தானே கட்டுப்படுத்த முடியாதவனாய், அவளது வெதுவெதுப்பான உதடுகளில் எகோரி முத்தமிட்டான். மாஷாவின் கண்ணிமைகள் படபடத்தன. அச்சத்துடன் தனது கண்களை அகலத் திறந்தாள்.

''ஐயோ, எகோரி! என்னைப் பயன்படுத்தி விட்டாய்! இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறாய்?''

''நீயுந்தான் இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?''

''மந்திரப் பூவை நான் தேடிக் கொண்டிருந்தேன். ஒவ்வொரு புனித இவானின் இரவிலும் காட்டில் ஒரே ஒரு பெரணி மலர் பூக்கும்



என்று தாத்தா என்னிடம் சொன்னார். அதைக் கண்டுபிடிக்கும் நபரை அது மறைவாக உள்ள புதையலை நோக்கிக் கூட்டிச் செல் கிறது. பிசாசுகள் பூமியினின்றும் வெளியே தங்கத்தைக் கொண்டு வந்து, அதைச் சுற்றி நின்று காவல்காக்கின்றன. ஆனால் நீ பயந்து விடக் கூடாது. முன்னேறிச் சென்று அவற்றின் மீது பூவை வீச வேண்டும், அப்போது அவை சிலைகள் போல விறைத்துப் போய்விடும். உனது ஸ்கர்ட்டிலே எவ்வளவு தங்கத்தைப் போட்டுக் கொள்ள முடியுமோ அவ்வளவு போட்டுக் கொள். ஆனால் குளம்புகளின் இடியோசையையும், கனைப்பு ஒலியையும் காட்டில் உற்றுக் கேள். அது தீப்புரவி உன்னை மிதித்துத் தள்ளிவிடவருகிறது. நீ உடனே தரையில் விழுந்து, அசையாது கிட. தன் பின்கால்களின் மீது நின்ற அது எவ்வளவு அண்மையில் இருந்தாலும், அதனது தீ மூச்சு எவ்வளவு புண்படுத்துவதாக இருந்தாலும், உன் கண்களைத் திறக்காதே. அது களைப்படைந்து அப்பால் போய்விடும். பிறகு தங்கம் உன்னுடையது தான்.''

''உனக்கு ஏன் தங்கம் தேவைப்படுகிறது?''

''நான் தங்கத்திற்காக வரவில்லை. அது உண்மையா என்று பார்க்க விரும்பினேன். ஆகவே நான் தனியாக, இறந்தோ, உயிருட னோ, தனிமையில் போகப் பயந்தாலும் பூவைத் தேடியவாறு போய்க் கொண்டிருந்தேன். திடீரென்று எனக்குப் பின்னே ஏதோ கிறீச்சிட்டது, புதர்களின் ஊடாக என்னை நோக்கி வரத்தொடங்கி யது! 'கடவுள் என்னைக் காப்பார்!' என்று நினைத்தேன். 'நான் பூவைக் கண்டு பிடிக்கிறதுக்கு முன்னாலேயே தீப்புரவி என்னைத் தாக்குகிறது.' பிறகு நான் பேரச்சத்தாலே நிலைகுலைஞ்சேன்... எதற்காக நீ சிரித்துக் கொண்டிருக்கே?''

எகோரி குலுக்குச் சிரிப்புடன் தரையில் உருண்டு கொண்டிருந் தான்.

''ஓ, என்ன வேடிக்கை! நான் தான் புதர்களின் வழியா வந்து கொண்டிருந்தேன். ஓ, சிரிப்பால் முறிந்து போவேன்!''



கடைசியில் அவன் சிரிப்பதை நிறுத்தி, உட்கார்ந்து கண்களைத் துடைத்துக் கொண்டான்.

''ஆக, நீ பூவைக் கண்டுபிடிக்கலே?''

''இல்லை.''

''நல்லது, நானே கண்டுபிடிச்சேன்.''

''நீ கண்டுபிடிச்சாயா? என்னிடம் காட்டு!''

''உன் கண்களை மூடிக் கொள்.''

அவள் தனது கண்களை மூடினாள். எகோரி அவளது சிறிய கண்ணாடியை எடுத்து அவளது முகத்தின் முன்னே பிடித்தான்.

''பார். இதோ என்னுடைய பூ!''

மாஷா வியப்புற்றாள், தனது கைகளில் முகத்தை மறைத்து, அழத் தொடங்கினாள்!

எகோரியின் நாளங்களில் குருதி அலைபாய்ந்தது. பாசத்தோடு மாஷாவின் தோள்மீது தனது கைகளைப் போட்டான்.

''ஏன் அழுகிறாய்? என்னை நீ விரும்பலையா?''

''வெகு நாளாக உன்னை நான் விரும்பியிருக்கேன். மகிழ்ச்சியினால் நான் அழுகிறேன். உனது நேரம் முழுதையும், உன்னுடைய வர்ணங்களைப் பார்ப்பதில் தான் செலவிட்டாயே தவிர என்னைப் பற்றி அறவே கவனிக்கலே!''

''அது உண்மையில்லே, மாஷா. வர்ணங்கள் தாம் எனக்கு அழகைப் பார்க்கவும், உள்ளபடியே உன்னைப் பார்க்கவும் கத்துக் கொடுத்திருக்கு. என்னை நீ மணந்து கொள்வாயா?''

''என்னைத் திருமணம் செய்ய நீ விரும்பினா, என்னிடம் உள்ள எல்லாத்தையும் விட்டு விட்டு, உன்னைத் தொடர்வேன். ஆனா தாத்தா ஒப்புக் கொள்ள மாட்டார் என்று அஞ்சுறேன். எனக்காக ஒரு பணக்காரக் கணவனைத் தேட அவர் விரும்புறார்.''

''நாங்கள் பாட்டி அகுலீனாவை அவரிடம் அனுப்புறோம். விரைவிலேயே அவரை அவள் இணங்க வைப்பாள்.''

சூரிய உதயத்தில், அவர்களுக்காகக் காத்திருந்த மகிழ்ச்சி குறித்துக் கிசுகிசுத்தவாறு, முத்தமிட்டுக் கொண்டு அவர்கள் திரும்பவும் கிராமத்திற்கு வந்தார்கள்.

வீட்டிற்குள்ளாக ஒரு சுண்டெலியைப் போல எகோரி நழுவிய போது சேவல்கள் கூவிக் கொண்டிருந்தன. ஆனால் பாட்டி ஒரு விளக்குமாறுடன் அவனுக்காகக் காத்துக் கொண்டிருந்தாள்.

''இரவு முழுக்க நீ எங்கே போயிருந்தாய், சனியனே? இந்த விளக்குமாறால் உனக்குப் பாடம் கற்பிக்கிறேன்!''

எகோரி தனது அன்புக்குரிய கிழப் பாட்டியைப் புன்னகையுடன், அவளது மெலிந்த உடலை ஒரு பெருங்கரடி போலத் தொற்றி, கட்டித் தழுவ, அவளும் அமைதியாகிப் போனாள்.

''சரி, அப்போ, எங்கே இருந்தாய், சொல்லு.''

''மந்திரப் பூவை நான் தேடிக் கிட்டிருந்தேன்.''

''அதைக் கண்டுபிடித்தாயா?''

''ஆமாம், பாட்டி.''

''அப்படியானா எங்கே அது?''

''அடுத்த வீட்டில் அதைக் கிழவன் அஃபனாஸியிடம் விட்டு வந்திருக்கேன். மாஷாவைப் பெண் கேட்க என்னோடு வருவாயா?''

பாட்டி பெருமூச்சு விட்டு பெஞ்சின் மேல் அமர்ந்தாள்.

''கடவுளுக்கு நன்றி! கடைசியில் ஒரு தீர்மானத்திற்கு அவர் வர முடிந்தது. நீ எல்லா நேரமும் வேலை செய்து கொண்டு, பெண்களையே ஒருபோதும் பார்க்காத ஒரு மாதிரியான துறவி என்று நான் சிந்திக்கத் தொடங்கினேன். மாஷா உனக்கு ஒரு நல்ல மனைவியாக இருப்பா. அவள் அழகானவ, பூந்தையல் வேலை செய்வதில்

திறமையானவ. இப்போ போய் கிழவனிடம் கேட்போம்.''

''ஒருவகையில் மாலை வரை நாம் காத்திருப்பது நல்லது. அவர் மறுத்து விட்டா, வெட்கத்தை நான் தாங்க மாட்டேன்.''

''மறுக்கிறது ஒரு கோடரி கம்புயில்லே, அது உன்னுடைய நெற்றியைக் கன்றிப் போக வைக்க முடியாது.''

ஆனால், எதற்கும் அவர்கள் அன்று மாலையே போவதென்று தீர்மானித்தார்கள். தங்களுடைய சிறந்த உடைகளை அணிந்து கொண்டார்கள். எகோரி தீவிரமான உள்ளக் கிளர்ச்சி அடைந் தான், அவனுடைய முகம் அவனது லினென் வெள்ளைச் சட்டை யைப் போல வெளிறிப் போனது.

அவர்கள் அஃபனாஸியினுடைய வீட்டை அடைந்த போது துணிச்சல் அவனை முழுமையாகக் கைவிட்டு விட்டது. தெய்வபீடத் திற்கு முன் நின்று நடுங்குகின்ற கையால் சிலுவை வரைந்து கொண் டான்.

மாஷா வீட்டை விட்டு வெளியே உடனே ஓடிச் சென்று சூரிய காந்திப் பூக்களில் மறைந்து கொண்டாள். என்ன நடந்தது என் பதை அவளது தாத்தா நொடிப்போதில் உணர்ந்து கொண்டான், ஆனால் அதை வெளிக் காட்டவில்லை.

அவர்கள் பெஞ்சின் மீது அமர்ந்து, விஷயத்தைச் சுற்றி வளைத் துப் பேசத் தொடங்கினார்கள்.

''உன்னிடத்தில் அழகான மலர் இருக்கு, அஃபனாஸி, எங் களிடத்திலே ஓர் அருமையான தோட்டக்காரனைக் கண்டுபிடித் திருக்கோம்.''

''நீங்க எதைப் பத்திப் பேசுகிறீங்க? மாஷாவா? ஓ, முடியாது, அருமை விருந்தாளிகளே. உங்க தோட்டக்காரனுக்காக நீங்க வேறொரு தோட்டத்தைப் பார்த்தாக வேணும்.''

''ஏன் அப்படி? அவன் அந்தளவுக்கு மோசமான ஆளா?''

''இல்லை, அண்டை வீட்டுக்காரியே. மணமகளே சரியில்லாதவ. அவள் சன்னலுக்கு வெளியே பார்க்கும் போது, குதிரை பின்கால் களின் மீது நிற்கும். அவள் முற்றத்திற்குப் போகும் போது, நாய்கள் மூனு நாளைக்குக் குரைக்கும். நமக்குள் அந்தரங்கமாக இருக்கட்டும், வட்டக் கூடைகளைப் போல கண்கள் அவளுக்கு, தலையிலே கொம்பு இருக்கு, அவளுக்குக் கோணி மாதிரி வாய்! இரு காலிலேயும் நொண்டுறா, தனது கூனைப் பக்கவாட்டத்திலே நகர்த்துறா.''

''ஓ, தாத்தா, எனக்கு நீதான் சாவாக இருப்பாய்!'' சிரித்தாள் பாட்டி. ''அது தன்னைத்தானே நீ வர்ணிக்கச் சொல்றியா! மாஷா இருக்காளே, கண்ணைப் பறிக்கிற அழகு. நமது பையனும் மோசு மானவனில்லை. அபாரமான கைக்காரன், இவனை விட அருமை யானவனை நீ ஒருபோதும் பார்த்ததில்லை.''

''உண்மையிலே, நல்ல செல்வமும் நீங்க பெற்றிருக்கீங்க. ஒரு பெட்டியிலே இரண்டு துடைப்பங்கள், ஒரு சாக்கிலே ஒரு சுண்டெலி.''

''அது உண்மை தான். காசு சம்பாதிக்கலேனாலும் பேரு சம்பாதித்திருக்கோம். எகோரி எப்படிப்பட்ட வேலைக்காரன் என்பதை நீயாகவே அறிவாய். திறமையான கை இருந்தா செல்வமும் இருக்கும். உன் பேத்தி எங்களிடத்தில் நல்லாயிருப்பா.''

''ஹீம்... வெறுங்கையில் முழம் போடுறே.''

இதைக் கேட்டதும் அகுலீனா கோபமுற்றாள்.

''என்ன சொல்வதாக நினைக்கிறாய்? பறவைக் கழுத்து மாதிரி சிலிர்த்துக் கொண்டு, பழுத்த பூசணிப் பழமே! உன்னுடைய பழைய பெட்டியில் கூட மீன் செதிள்களும் ஈ இறக்கைகளும் தவிர வேறு எதுவுமில்லே. நீ ஒத்துவரலேன்னா வேறு இடத்துக்குப் போவோம்.''

''அவள் சொல்றதைக் கேளுங்க! பெரிய பல் கொண்ட பைக் மீனை மூழ்கடித்து விடுவதாக அச்சுறுத்துறாங்க.''

''இந்தப் பல்லில்லாத வயசான பைக் மீனைப் பார், எகோரி! என்ன பயங்கரக் காட்சி, கடவுள் என்னை மன்னிக்கணும்! ஆனா உன்னிடத்திலே ஒரு விஷயம் சொல்வேன், அஃபனாஸி. நீ ஒரு பயரங்கரப் பைக் மீனைப் போலத் தோன விரும்பலாம், ஆனா உனது இதயம் எப்போதுமே மெழுகை விட மென்மையா இருக்கு. கிராமத்திலுள்ள எல்லாப் பெண்களும் அதைப் பத்திப் பேசுறாங்க.''

அப்போதே கிழவன், சூரிய ஒளியில் உள்ள பனிக்கட்டியைப் போல உருகிப்போனான்.

''நீ ஒரு தந்திரக்காரக் கிழவி! உன் வாயிலேயே பந்தல் போட்டுறுவே! ஆனா, இது போதுமான பேச்சாகும். நாம திருமணக் காரியத்தில் இணங்கிப் போவது நல்லது.''

மாஷா உள்ளே அழைக்கப்பட்டாள். குழப்பத்தால் விழிகள் தாழ்ந்திருக்க, முன்றானையை முறுக்கியபடி அவள் அங்கே நின்றாள்.

''எகோரியை நீ மணந்து கொள்வாயா, பேத்தி?''

''நீங்க என்னை அநுமதிச்சா, தாத்தா, மணந்து கொள்வேன்.''

''நல்லது, அப்படியானா, சரிதான். ஆனா திருமணத்தை நாம் குளிர்கால முடிவில் வைத்துக் கொள்வோம். ஏதாவது இருந்தா நல்லா யோசித்துப் பார். உனது மணமகளுக்காகக் கொஞ்சம் பரிசுகளைத் தயாரா வச்சிரு, எகோரி. அவளை மகிழ்விக்க நீ எவ்வளவு முயற்சி செய்வாய் என்பதை நான் பார்க்க விரும்புறேன்.''



தனது மணப்பெண்ணுக்கு என்ன கொடுப்பது என்பது பற்றி எகோரி தனது மூளையைக் குழப்பிக் கொண்டான். ஒருவகையில் அது அழகானதாகவும், பயனுள்ளதாகவும் இருந்து, அவனைப் பற்றி அவளுக்கு நினைவு படுத்தி, அவள் எல்லா நேரமும் பயன்படுத்துவதாக இருக்க வேண்டும்.

அவனால் எவ்விதத்திலும் எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை!

பிறகு ஒரு நாள் இளம் பெண்கள் வழக்கமாகக் கூடும் வீட்டிற்குள்ளாகச் சென்றான். பெஞ்சுகள் நெடுகிலும் அமர்ந்து அவர்கள் நூற்றுக் கொண்டும், பாடிக் கொண்டும், இளித்துக் கொண்டும் இருந்தார்கள். மாஷாவும் அங்கே இருந்தாள்.

எகோரி உட்கார்ந்து உற்றுக் கவனித்தான். மாஷாவிடமிருந்து தனது கண்களை அவனால் அகற்ற முடியவில்லை. அவளது கைகள் அந்தளவு கைவந்ததாகவும், விரைவானதாகவும் இருந்தன, அவளை யாராலும் எட்டிப் பிடிக்க முடியவில்லை, அவளது நூற்புக் கருவி எல்லாவற்றினும் மோசமானதாக இருந்தாலும். துண்டாகக் கீழே விழப் போவது போல அது கீச்சொலி இடவும் நிலை கொள்ளாமல் தடுமாறவும் செய்தது. அது அவளது கொள்ளுப் பாட்டிக்குச் சொந்தமானது.

''அவளுக்காக நான் அவசியம் செய்ய வேண்டியது அது தான்,'' என்று ஓர் அதிர்ச்சியுடன் எகோரி நினைத்தான். ''அது பயனுள்ளது, மேலும் மாஷா அதை எல்லாக் காலமும் பயன்படுத்துவாள்.''

மறுநாள் நூற்புக் கருவிக்காக ஒரு லைம் மரத்தை வெட்டுவதற்குக் காட்டிற்குள்ளாகச் சென்றான். லைம் மரம் இளமையாகவும், மெல்லியதாகவும் இருந்தது. அதினின்றும் விரும்பிய எதையும் செதுக்க முடியும், அது பிளந்து போகாது. அது அருமையான பொன்னிற பளபளப்பையும் பெற்றிருந்தது.

நதிக்கரை ஓரமாக அவன் நடக்கையில் நீர் நெடுகிலும் பெருமை மிக்க வளைந்த கழுத்துடனும், அழகிய செப்பமுடைய தலையுடனும் ஒரு வெள்ளை அன்னம் நீந்தி வருவதை அவன் பார்த்தான்.

''நான் செய்ய வேண்டியது அவசியம் இது போலத்தான்!'' என்று மகிழ்ச்சியோடு சிந்தித்தான். ''ஓர் அன்னத்தின் வடிவம் போல.''

பொருத்தமான லைம் மரம் ஒன்றை அவன் வெட்டினான், ஆனால் பட்டையைக் கீறாமல் ஓரங்களை களிமண்ணால் தேய்த்தான், ஆகவே அது உடையாது இருப்பதற்காக.

முறையாக லைம் மரம் காய்ந்து போன உடனேயே, எகோரி நூற்பு அடிப்பகுதிக்காக அகலமான தட்டைப் பலகையை வெட்ட ஆரம்பித்தான். அடிப்பகுதியின் ஓரத்தில் அவன் ஒரு துளை போட்டான், அதற்குள்ளாக நூற்புச் சீப்பு அல்லது நூலிழைக்கான கதிரைப் பொருத்த முடியும். பிறகு அவன் மேப்பிள் மரத்திலிருந்து ஒரு கதிரை வெட்டி உருவாக்கினான், ஒரு சிறிய துடுப்புப் போல. அதை நன்றாக இழைத்து மரம் பொன்னிறமாக மின்னுகின்ற வரை பளபளப்பூட்டினான். இப்போது அது ஒரு நூற்புக் கருவியை விட ஓர் அழகிய பறவை போலவே அதிகம் காணப்பட்டது. அதைப் போன்றது வேறு யாருக்கும் இல்லை. அது அழகாக இருந்தது, ஆனால் ஏதோ போதுமானதாக இல்லை.

 ''இதைச் செதுக்கலோடும் வர்ணத்தோடும் அலங்கரித்தாலோ?''

என்று எகோரி தனக்குத்தானே நினைத்தான். ஆகவே அடிப்பரப்பில் சில மெல்லிய வரிகளைத் தீட்டி முனைகளில் சிறிய சுருள்களையும் செதுக்கினான். பிறகு சில சின்னஞ்சிறு சூரியன்கள், விநோதமான இலைகள், கண்டறியாத மலர்கள் ஆகியவை தோன்றின.

ஆனால் எகோரி மறுபடியும் சிடுசிடுத்தான், இன்னும் அவன் திருப்தியடையவில்லை.

முற்றத்திற்குள்ளாகச் சென்று, அங்கே கருப்பு வண்ணச் சாயம் கொடுக்கப்பட்ட ஓக் மரக்கட்டை ஒன்று கிடப்பதைப் பார்த்தான். அந்தக் கட்டையை மெல்லிய மரப்பாளங்களாக வருமாறு பிளந்து, அவற்றினின்றும் வளைந்த கழுத்துகளுடன் கூடிய இரண்டு சிறிய கருப்புக் குதிரைகளைச் செய்தான். பிறகு அவற்றை நூற்புக் கருவி யின் அடிப்பகுதியில் மலர்களுக்கு இடையே சொருகினான். எந்தப் பசையும் இல்லாமல் அவை கச்சிதமாகப் பொருந்தின. ஆனால் மேலும் சில துளைகள் போட்டு அவற்றில் மஞ்சள் லைம் மர ஆணி களைக் கவனமாக, கண்களும் சேணமும் இருந்த இடங்களில் அடித் தான். உடனே குதிரைகள் உயிர்பெற்றன. அவற்றின் சேணங்கள் கணகண ஒலி எழுப்பின, அவற்றின் கண்கள் பளிச்சிட்டன.

இதனால் மன நிறைவு பெற்று, கதிரை அலங்கரிக்கத் தொடங்கி னான். ''இப்போது இங்கே நான் என்ன வர்ணம் பூசுவது?'' என்று சிந்தித்தான். பிறகு அவன் புனித இவானின் நிலா இரவையும் பெரணிப் பூவையும் நினைவு கூர்ந்தான். ஆனால் அந்தப் புதிரான பூ என்ன நிறத்தில் இருந்தது? சிவப்பு, நீலம் அல்லது வெள்ளை? பெரும் பாலும் உலகத்தில் உள்ள வேறு எந்தப் பூவையும் போல அல்லாது — கருப்பாக! மேலும், அது தான் கருப்பு மந்திரத்தின் நிறம்.

ஆகவே, அவன் தனது தூரிகையைக் கருப்பு வர்ணத்தில் நனைத்து, அற்புதமான பூவை வரைந்தான், இருளைப் போல கருப்பாய். அதைச் சுற்றிலும் ஒடுங்கிய பெரணி இலைகளை வரைந்தான். பொன்னிறப் பலகையின் பின்னணியில் கருப்பு இதழ்கள் மினுமினுத்துக் கண்ணைக் கவர்ந்தன, உண்மையில் அத்தகைய பூ ஒன்று இருப்பதை நம்பச் செய்தவாறு. அதைத் தேடு!

உச்சியில் ஒரு சிவப்புச் சூரியன் வரைந்தான், அது மறைந்து போவதைத் தடுக்க இரு புறமும் சீரின் பறவைகள் பாதுகாப்பாய் நின்றன. சூரியனுக்குக் கீழே பூக்களால் நிறைந்து ஒரு மந்திர மரம் இருந்தது, ஆகவே குடும்பம் வலுவானதாக இருக்கும். மரத்துக்குக் கீழே, தீங்கிலிருந்து அதைப் பாதுகாப்பதற்காக அழகிய வால்களுடன் கூடிய இரு சிங்கங்களை அமைத்தான்.

நூற்புக் கருவியைப் பாட்டி அகுலீனா பார்த்த போது, வியப்பில் தனது தலையை ஆட்டினாள்.

''இது போன்ற ஒரு பரிசினை எந்த மணமகளும் பெற்றதில்லை, எகோரி! இதை மாஷாவிடம் கொடுக்க நீ பயப்படவில்லை? நூற்புக்

கருவி மீது அவள் காதலில் விழுந்து, உன்னைப் பற்றி மறந்து போகலாம்.''

வர்ணம் காய்ந்த போது, இளம் பெண்கள் கூடியிருந்த வீட்டிற்கு நூற்புக் கருவியை எடுத்துக் கொண்டு எகோரி சென்றான். அங்கே அதை ஒரு பெஞ்சின் மீது வைக்க, அது சூரியனைப் போலப் பிர காசித்தது. இளம் பெண்கள் தங்களது வேலையை விட்டு விட்டு அதைச் சூழ்ந்து நின்றார்கள்.

''சற்று நீ பொறு! நமது இளைஞர்களிடத்தில் இது போல எங்களுக் கும் ஒன்னு செய்யுமாறு நாம் சொல்வோம். அவர்கள் செய்யவில்லை என்றால், எந்தத் திருமணவிழாவும் இருக்காது!''

அவர்களுடைய இளைஞர்கள் பெருமூச்சு விட்டுத் தங்களுடைய தலைகளைச் சொரிந்தார்கள். அவர்களால் எகோரியோடு போட்டி யிட முடியுமோ? அவனை நையப் புடைக்கலாம் என்று கூட விரும் பினார்கள், ஆனால் அவனோ வலிமையான இளைஞனாக இருந் தான், அவனிடத்தில் வம்பு செய்ய முடியாது.

ஆகவே, அவர்களும் நூற்புக் கருவிகளைச் செதுக்கி அவர்களால் முடிந்த அளவுக்குச் சிறப்பாக வர்ணம் பூச வேண்டியிருந்தது. அப் போதிலிருந்து மணப்பெண்ணுக்கு நூற்புக் கருவி கொடுப்பது இளை ஞனுக்கு வழக்கமாகி விட்டது. ஏனெனில் அது மணமகனுடைய பாசத்தின் வலிமையைக் காட்டுகிறது.

* * *



மாஷா தனது வீட்டின் எசமானியாகின்ற நாளுக்காக எகோரி இடர்ப்பாட்டுடன் பொறுத்துக் கொள்ள முடியும்.

''எதற்காகச் சோம்பேறித்தனமாக உட்கார்ந்து கொண்டிருக் கிறாய், என் இளைஞனே?'' பாட்டி அகுலீனாவால் அதற்கு மேலும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. ''கல்யாணத்துக்கு நாளை எண்ணிக் கொண்டிருக்கிறதுக்குப் பதிலா, மாஷாவுக்காக நீ ஏதாவது செய்ய வேண்டும்.''

''என்ன செய்வது?''

''தீக்கு முன் நான் வழக்கமாக வைத்திருக்கும் வர்ணம் பூசப்பட்ட பெட்டி நினைவிருக்கிறதா? உன் தாத்தா அதை எனக்காக, என் னுடைய சீதனத்தை வைக்க வெலிகி உஸ்த்யூக் நகரத்திலிருந்து வாங்கி வந்தார். ஹும், ஆனால் அது மிக அருமையான ஒன்று. ஒவ்வொருவரும் என் மீது பொறாமைப்பட்டார்கள்! எல்லாவகை யான மந்திர விலங்குகளுடனும் பூக்களுடனும் அது வர்ணம் பூசப் பட்டது.''

''என்ன விலங்குகள், பாட்டி?''

''அடர்த்தியான பிடரிமயிர்கள் கொண்ட சிங்கங்கள், ஒரு சீரின் பறவை, ஒரு கிரிஃபோன் ஆகியனவென்று நினைக்கிறேன்.''



‘‘கிரிஃபோனா? என்ன அது, பாட்டி?’’

‘‘உனக்குத் தெரியாதா? அது ஒரு வேட்டை விலங்கு. சிங்கத்தினுடைய பிடரிமயிரையும் பெரிய நகங்கள் கொண்ட கால்களையும் உடலையும் பெற்றிருக்கிறது. மிகப் பெரிய இறக்கைகளும் கூர்மையான அலகுடன் கூடிய பறவையின் தலையும் பெற்றிருக்கிறது. அதனுடைய வால் சுருண்டது, வலிமையிலும் துணிச்சலிலும் எதுவும் அதற்கு நிகரில்லை. அது அப்பால் எங்கோ வசிக்கிறது. அதனால் எல்லாத் தங்கமும் காவல் காக்கப்படுகிறது, ஏதேனும் பொறாமை கொண்ட நபர் அதைத் திருட முயன்றால், கிரிஃபோன் அவனைத் துண்டுதுண்டாகக் கிழிக்கும். அதனால் தான் பெட்டிகளின் மூடிகளில் அது வரையப்பட்டிருக்கிறது, திருடர்களை அச்சுறுத்தி விரட்ட.’’

‘‘ஓ, பாட்டி! முன்னமேயே கிரிஃபோனைப் பற்றி என்னிடம் ஏன் நீ சொல்லவில்லை? மாஷாவின் பெட்டி மீது அதை நானும் வரைவேன்.’’

‘‘பாதுகாப்பதற்காக என்ன தங்கம் அவள் வைத்துக் கொள்வாள்?’’ என்று அவனது பாட்டி சிரித்தாள்.

‘‘நல்லது, தீய ஆவிகளிடமிருந்து அவளை அது பாதுகாக்கட்டும், எந்தத் தங்கமும் இல்லை என்றால்.’’

‘‘அதைச் செய்வதற்கு மற்றொரு விலங்கு இருக்கிறது. அது ஒற்றைக் கொம்பன் என்று அழைக்கப்படுகிறது. அது ஒரு குதிரையினுடைய உடலைப் பெற்றிருக்கிறது, அதனது நெற்றியில் ஒரு மந்திரக் கொம்பு உண்டு. இந்தக் கொம்பினால் அது எல்லாத் தீமைகளையும் குத்தித் துளைக்கிறது, அது அவற்றோடு சண்டை போடுகின்ற போது, அதைச் சுற்றிலும் நன்மக்கள் வட்டமாக நின்று பாடுவர்:



இரண்டு விலங்குகள் இங்கு சேரவில்லை,
கொடிய விலங்குகள் இரண்டு பொருதவில்லை,
மெய்யும் பொய்யும் மோதுகின்றன,
கொடிய போரும் தொடங்கலாயிற்று.

மிகுந்த ஆசையோடு தனது புதிய பணியைச் செய்ய எகோரி தயாரானான். ஒரு லைம் மரத்தை வெட்டி, மெல்லிய, மேல் மரப்பட்டையைச் சீவினான். பிறகு அதை ஒரு பெரிய பெட்டியின் வடிவத்திற்கு வளைத்து, விளிம்புகளில் மூடி, மரப்பட்டைகளினால் அவற்றை ஒன்றாகத் தைத்தான். மரப்பட்டை இன்னமும் ஈரமாக இருந்த போது, உள்ளுக்குள்ளாக ஒரு ஃபிர் மரக்கட்டையை அடிப்பகுதியாக வைத்தான். மரப்பட்டை காய்ந்த போது, அடிப்பகுதியைச் சுற்றிப் பெட்டியின் பக்கங்கள் இறுக்கமாகச் சேர்ந்து கொள்ளும்.

எஞ்சிய மரப்பட்டைகளினின்றும் மேலும் இரு பெட்டிகள் செய்தான். வட்டில்களுக்காக ஒரு நடுத்தர அளவுப் பெட்டியும், மாஷாவுடைய காது வளையங்களுக்காகவும், குமிழ்மணிகளுக்காகவும் ஒரு

சிறிய பெட்டியும் செய்தான். பிறகு எல்லாப் பெட்டிகளுக்கும் மெல்லிய, ஃபிர் மர மூடிகளை உலோகக் கீல்களைப் பொருத்தி னான்.

ஓரிரு நாள் செல்லவும் மரப்பட்டை காய்ந்து பெட்டிகள் வழவழப் பாகவும் வெண்ணிறமாகவும் ஆயின. கருப்புப் புல்லின் மெல்லிய தாள்களையும் பெரிய சிவப்புப் பூக்களையும் சிறிய பெட்டி மீது எகோரி வரைந்து அருமையான ஆபரணங்களுக்கான அரிய ஒரு பெட்டியாக அதை மாற்றினான்.

வட்டில்களுக்கான நடுத்தர அளவுப் பெட்டியில் அன்றாட வாழ்க் கையிலிருந்து மகிழ்ச்சியான காட்சிகளை வரைந்தான். ஒரு பக்கத்தில் புள்ளி கொண்ட குதிரை வர்ணம் பூசப்பட்ட ஸ்லெட்ஜ் வண்டியை இழுத்துச் சென்று கொண்டிருந்தது. அதில் மாஷா உட்கார்ந்து கொண்டும், எகோரி கடிவாளத்தைப் பிடித்தபடியும் இருந்தனர். அவன் சாட்டையை உயரே தூக்கிப்பிடித்தவாறே அசையற்று நின்று விட்டான், ஏனெனில் தனது பிரகாசமான இறகுகளுடன் சீரின் பறவை குதிரைக்கு மேலே பறந்து கொண்டிருந்தது. பளிச்சி டும் மலர்களால் வானம் நிறைந்திருந்தது, குதிரையை விட உயர மாகப் பனியினின்றும் சிவப்பு மற்றும் பச்சை இலைகள் நீட்டி நின்றன.

பெட்டியின் மற்றொரு பக்கத்தில் வீட்டிற்கு வந்து சேர்ந்த எகோரியும் மாஷாவும் ஒரு பெரிய சமோவார் அருகே உட்கார்ந்து தேநீர் பருகிக் கொண்டு இருந்தார்கள். மாஷாவுடைய கால் மீது திரேந்தி உரசிக் கொண்டிருந்தது. கருப்பு நாய் எகோரிக்கு அருகே உட்கார்ந்து கொண்டிருந்தது. எங்கு நோக்கினும் மலர்கள், ஒரு மந்திரத் தோட்டத்தைப் போல சுவர்களினின்றும் மேசையினின்றும் கூட வளர்ந்து கொண்டிருந்தன. மூடியில் அடர்ந்த பிடரிமயிருடன் கூடிய வலிமையான சிங்கம் ஒன்றை வரைந்தான். எதிரிகளின் இதயங்களுக்குள்ளாக அது அச்சத்தை ஏற்படுத்தும், ஆனால் நண் பர்களைக் கண்டு அது முறுவலித்து, மலர்ந்த மலரை நுனியில் கொண்ட தனது வாலை அலைக்கும்.



சீதனத்துக்கான பெரிய பெட்டியின் பக்கங்கள் எகோரி கேள் விப்பட்டிருந்த எல்லாவகையான அயல்நாட்டுப் பிராணிகளுடன் உயிர்பெற்றுத் திகழ்ந்தன. அவன் வரைந்தது வளைந்த அலகுடன் கூடிய ஒரு பெரிய கிளி, ஒரு சிங்கத்துடன் சண்டையிட்ட நெற்றியில் கூர்மையான கொம்புடன் குதிரை, சொர்க்கத்தின் அரசன் பெருமை மிக்க வலிமையான கழுகு, கடலின் அரசி ஸ்டிராடிம் பறவை எல் லாம். ஸ்டிராடிம் பறவை கடலில் வாழ்கிறது. அது ஒரு கப்பலைப் பார்க்குந்தோறும் தனது இறக்கைகளை அடித்து கடலைக் கலக்க, அதனது மாலுமிகளுடனும், சரக்குடனும் கப்பல் நீரில் ஆழ்ந்து மூழ்கிப் போகிறது.

மூடியில் துணிச்சல் மிக்க போர்வீரன் பல்கான் மந்திரப் பூக்

களுக்கும் புற்களுக்கும் மத்தியில் தனது வில்லையும் அம்பையும் ஏந்தி பாய்ந்து செல்கிறான். அவன் குதிரையின் கால்கள், வால், உடம்பு, ஒரு மனிதனின் நெஞ்சு, தலை, கைகள் பெற்றிருக்கிறான். அவன் வலிமையானவன், காற்று வேகத்தில் பாய்ந்து யாரேனும் எட்டிப் பிடிக்க முடியும், அவன் பிடிக்காவிட்டாலும், அவனது அம்பு பிடிக்கும்.

பெட்டியைத் திறக்க ஒரு திருடன் முயற்சி செய்யும் நிலையில், மூடியின் உட்புறம் உள்ள ஒரு கொடிய, எஃகு அலகுடன் கூடிய சிறகுகள் கொண்ட கிரிஃபோனின் கூர்மையான வளைநகங்களால் துண்டுதுண்டாகிப் போகக் கூடும் என்ற அச்சம் அவனை பெட்டியைக் கீழே போட்டு தலைதெறிக்க ஓடச் செய்யும்.

அவன் வேலை செய்கையில் நேரம் விரைவாகச் சென்றது. கிழவன் அஃபனாஸிக்கும் ஓக் தலையணைப் பெட்டி ஒன்றைச் செய்தான். இரும்புப் பாளங்களுடன் சுற்றப்பட்ட ஒரு சிறிய பெட்டி அது. இரவில் தலையணை போல அதன் மேல் தலையை வைத்துப் படுத்துக் கொள்ளுமாறு அதனது மூடி அமைந்திருந்தது. அதன் மீது எந்த காவல் விலங்குகளையும் எகோரி வரையவில்லை, ஏனெனில் கிழவன் அஃபனாஸியினுடைய தலை எந்த கிரிஃபோனைக் காட்டிலும் அவன் ‘செல்வத்தை’ நன்கு பாதுகாக்க முடியும்.

இந்த நேரம் முழுக்கவும் மாஷா தனது பெண் சிநேகிதிகளுடன் தனது சீதனத்தைத் தைத்துக் கொண்டிருந்தாள். தனது கணவனுக்காகவும் குழந்தைகளுக்காகவும் சட்டைகள் தைப்பதற்காக வெள்ளை லினென் துணியை அவள் எப்போதோ நெய்து விட்டாள், மேலும் அழகு படுத்துவதற்காகவும் அன்றாட உபயோகத்திற்காகவும் பின்னல் வேலைப்பாடு செய்த கைத்துண்டுகள் நிறையத் தயாரித்தாள். மலர்களும் சேவல்களும் கொண்டு பெரிய மேசை விரிப்புகள் கொஞ்சம் பின்னினாள். திருமண மேசையின் மேல் அவை ஒன்றன் மீது ஒன்றாகப் போடப்பட்டு, ஒவ்வொரு சுற்றுக்கும் பிறகு ஒன்றன் பின் ஒன்றாக எடுக்கப்படும், அப்போது தான் விருந்தினர்கள் மணமகளுடைய பின்னல் வேலைப்பாட்டைப் பாராட்ட முடியும்.



இப்போது அவள் செய்ய வேண்டி இருந்ததெல்லாம் எகோரியினுடைய திருமணச் சட்டையைப் பின்னல் வேலைகள் செய்து முடிப்பது தான். அது ஓர் அரசனுக்குப் பொருத்தமாக இருந்தது! கழுத்துப்பட்டை, மார்பு, விளிம்பு ஆகியவற்றில் செய்யப்பட்டிருந்த அற்புதமான பின்னல் வேலைப்பாடு எந்த மணமகனையும், எதற்கும் லாயக்கற்றவனையும் கூட, அரசனுக்குத் தகுதியானதாகக் காட்டும், எகோரியைப் பற்றி எதுவும் சொல்ல வேண்டியதில்லை.

பாட்டி அகுலீனாவும் அவளது அண்டைவீட்டுக்காரிகளும் ஒன்பது சுற்றுகளுக்குக் குறையாத திருமண விருந்து தயாரிப்பதில் முனைப்பாக ஈடுபட்டிருந்தார்கள். கிழவன் அஃபனாஸிக்கும் ஒரு வேலை கிடைத்தது. திருமணவிழா நிகழ்ச்சிகளுக்குத் தலைமையேற்கத் தனது

தைரியமுள்ள நண்பன் தாத்தா மிகேயை ஒப்புக் கொள்ளச் செய்யும் பொறுப்பு அவனுக்குத் தரப்பட்டிருந்தது. தீய ஆவிகளைப் போக்கக் கூடிய மந்திர சக்திகளை அக்கிழவன் பெற்றிருந்ததாகச் சொல்லப் பட்டது. அத்தகைய ஆள் ஒன்று அவர்களுக்குத் தேவைப்பட்டது, ஏனெனில் தீய சக்தியிடமிருந்து திருமண நிகழ்ச்சியைப் பாதுகாக்க வேண்டியிருந்தது.

ஆகவே, இறுதியில், கடுமையான குளிர்மிகுந்த பிப்ரவரியின் கடைசிச் சனிக்கிழமையில், திருமண நிகழ்ச்சிக்கு முதல் நாள், மாஷா வினுடைய 'கன்னிப் பெண்ணுக்குரிய அழகை' வெப்பமான நீராவிக் குளியல் வீட்டில் கழுவி விடவும், துயரமான பாடல்களை இசைக்கவும் அவளுடைய நெருங்கிய சிநேகிதிகள் வந்து சேர்ந்தார்கள். அப்போது எகோரியும் தனது மகிழ்ச்சிமிக்க நண்பர்களுடன் வந்தான். தன் மணமகளிடம் தலைவணங்கி வர்ணந்தீட்டப்பட்ட பரிசுகளை அளித் தான், அவளது சிநேகிதிகளுக்குக் கொட்டைகளும் இனிப்புப் பண்டங் களும் வழங்கினான்.

அருமையான பெட்டிகளை அப்பெண்கள் பார்த்த போது, இனிப்புப் பண்டங்களை எல்லாம் மறந்து விட்டு, புகழ்ச்சியாகப் பாராட்டினார்கள், எகோரியை வானளாவப் புகழ்ந்தார்கள்! மாஷா மகிழ்ச்சியடைந்து அவனைப்பற்றி பெருமையாகக் கருதி அங்கே நின் றாள், பிறகு அவனுக்குச் சட்டை வழங்கும் அவளது முறை வந் தது. இப்போது இளைஞர்களே பார்ப்பதற்காகச் சுற்றிலும் நெருங்கி நின்று அத்தகு ஓர் அழகை முறைத்துப் பார்த்தார்கள். மகிழ்ச்சியினால் எகோரி முகஞ்சிவந்து போனான்.

தலைவாயிலில் இருந்த கதவு தடால் என்று ஒலிக்க, கிழவன் அஃபனாஸி குளிரினின்றும் அறைக்குள்ளாக வந்தான்.

''நல்லது, பெண்களே, மணமகளுடைய வெண்பனி நிறக் கரங் களைப் பற்றி நீராவிக்குளியல் வீட்டிற்கு அழைத்துச் செல்லலாம். அதனை நல்லா சூடாக்கியிருக்கேன்!''

மாஷாவைச் சுற்றிலும் ஒரு வட்டமாகப் பெண்கள் கூடி, அவளை அழைத்துச் சென்ற போது புலம்பினார்கள், அவளோ ஒரு சோக இசையை வழக்கத்திற்கேற்ப இசைத்தாள்.

> வெந்நீரால் நீராட்ட என்னை யழைத்தனர்,
> மூன்று சிறிய பாதைகள் நெடுகிலே!

தெருவிற்குள்ளாக இளைஞர்கள் மகிழ்ச்சியோடு விரைந்து, தங் களுடைய நீராவிக்குளியல் வீட்டுக்கு ஆரவாரத்தோடு சென்றனர். அவர்களும் கூட குளிக்க இருந்தார்கள், மகிழ்ச்சியோடு தானே தவிர, துயரத்துடன் அன்று.

குளியலுக்குப் பிறகு மணமகளை உயரமான மெத்தைகளில் அமர்த்தி அவளது தலைமுடியைச் சீவத் தொடங்கினார்கள்.

''ஏன் நீ அழாமல் இருக்கிறாய்?'' என்று அவளது நெருங்கிய

தோழி துன்யாஷா அவளிடம் கேட்டாள்.

''நான் விரும்பவில்லை,'' மாஷா கிசுகிசுத்தாள். ''நான் தொடர்ந்து முயற்சி செய்றேன், ஆனா கண்ணீர் வரமாட்டேன் என்கிறது.''

''அது சரிவராது! உனது திருமண விழாவுக்கு முன்னர் நீ அவசியம் அழ வேண்டும். கொஞ்சம் வெங்காயத்தை உனது கண்களில் தேய்க்கிறேன்.''

சொல்லி முடிப்பதற்குள் செய்து முடித்தாள். மெத்தைகளின் மீது அமர்ந்திருந்த மணமகள் தனது வெங்காயக் கண்ணீர் விட்டு அழுது கொண்டிருந்தாள். ஆனால் அவை என்ன கண்ணீர்? ஒரு தாயாருடைய கண்ணீர், சலசலத்தோடும் நதியைப் போல, ஒரு மனைவியினுடைய கண்ணீர் தவழ்ந்து செல்கின்ற ஓடை போல, ஆனால் மணமகள் அழுகின்ற போது, அது பனி விழுவது போல இருக்கிறது. கதிரவன் எழுந்து அதனைக் காயச் செய்யும்.

ஆனால் அந்தக் காலையில், அவளுடைய தந்தையின் சவக்குழியில், மனப்பூர்வமாக அழுதாள்...

சர்ச்சுக்குப் போவதற்காக அவர்கள் தயாரித்துக் கொண்டிருந்த போது, இளம் பெண்கள் திரும்பவும் சோகக் கீதங்களை முழங்கினார்கள். நீண்ட வெண்ணிற திருமண ஆடையை அவர்கள் மாஷாவுக்கு அணிவித்தார்கள். அது முன்பகுதியிலும் கைப்பகுதிகளிலும் பின்னல் வேலை செய்யப்பட்டது. பளிச்சிடும் பூக்களுடன் வரையப்பட்ட சிவப்பு சரஃபானை அணிவித்தார்கள். சரஃபானுக்குக் கீழே, மறைவான பைக்குள் கேக் துண்டையும் சணல் கூளத்தையும் நலத்திற்காகவும், செல்வத்திற்காகவும், மகிழ்ச்சிக்காகவும் வைத்தார்கள்.



தெருவிலிருந்து மணிகளின் மகிழ்ச்சியான முழக்கங்கள் வந்தன. ஐந்து வர்ணம் பூசப்பட்ட ஸ்லெட்ஜ் வண்டிகளின் திருமணவிழா ஊர்வலம் முற்றத்திற்குள்ளாக ஓட்டி வரப்பட்டது. செம்புச் சேணம் பிரகாசமாகப் பளிச்சிட்டது, வர்ண நாடாக்களுடனும், சிறிய மணிகளுடனும் வளைநுகத்தடி ஒப்பனை செய்யப்பட்டிருந்தன.

மகிழ்ச்சிமிக்க கும்பல் ஒன்று ஸ்லெட்ஜ் வண்டிகளினின்றும் இறங்கி வீட்டிற்குள்ளாக நுழைந்தது. முதலாவதாக, இடுப்பைச் சுற்றி பின்னல் வேலைப்பாடு செய்த துண்டைக் கட்டியிருந்த திருமணச் சடங்கின் தலைவன் தாத்தா மிகேய் வீறாப்புடன் நடந்தான். அவனைத் தொடர்ந்து மணமகனும் விருந்தினர்களும் வந்தனர். அவர்கள் எல்லாரும் மணமகளிடம் தாழ வணங்கினர். பிறகு கிழவன் அஃபனாஸியிடம் தலையணைப் பெட்டியை ஒப்படைத்து, அவனிடமிருந்து புனிதக் கன்னியின் தெய்வ உருவத்தை எகோரி பெற்றுக் கொண்டான். அவர்கள் மேசையின் அருகே அமர்ந்து சற்று நேரம் பேசினார்கள், பிறகு பாட்டி அகுலீனா எழுந்து நின்று பேசி

னாள்: ''தயவு செய்து, அருமை விருந்தினர்களே, மணமகளுடைய தலைமுடியை வாரிவிட அநுமதியுங்கள்!''

மணமகளைச் சுற்றிலும் இளம் பெண்கள் நின்று, மணமகன் அவளைப் பார்க்க முடியாதவாறு செய்தனர், அவளுடைய நீண்ட கன்னிப் பெண்ணுக்குரிய பின்னலை அவிழ்த்து விட்டு, மாறாக இரண்டாகப் பின்னினர், திருமணமான பெண்கள் செய்யுமாறு அவற்றை ஒழுங்கு செய்தனர். பிறகு மகிழ்ச்சிமிக்க நிகழ்ச்சிகளின் தலைவன் பெரிய திருகிய மெழுகுவர்த்திகளை ஏற்றுமாறும், ஸ்லெட்ஜ் வண்டிகளில் ஏறுமாறும் அவர்களுக்கு உத்தரவிட்டான். எகோரியும் அவனது நண்பர்களும் சர்ச்சிற்கு குதிரைமீது ஏறிச் செல்வர்.

நிறைந்த கூச்சலுக்கும் கொக்கரிப்புக்கும் பிறகு ஒவ்வொருவரும் ஓர் இடத்தைக் கண்டு உட்கார்ந்து அமைதியான போது, நிகழ்ச்சிகளின் தலைவன் ஊர்வலத்தைச் சுற்றி மூன்று முறை பயபக்தியுடன் நடந்து, திருமணவிழாவைக் காக்க மந்திர உச்சரிப்பை முனங்கினான்:

''போற்றுவோம், துணிச்சல்மிக்க ஜியார்ஜே! உனது வெண் குதிரையின் மீது ஏறி, உனது நீண்ட வேலை எடுத்துக் கொள், என்னையும் முழுக் கூட்டத்தையும் சுற்றிவா! பூமியிலிருந்து வானத்திற்கு ஒரு வெண்கற்சுவர் கட்டு! சிவப்புப் பிசாசிடமிருந்து, சாபத்திற்காளான பிசாசிடமிருந்து, மூன்று பல் பிசாசிடமிருந்து, ஒற்றைக் கண் பிசாசிடமிருந்து எங்களைப் பாதுகா! எங்களுக்கு எதிராக அவை தங்களது கைகளை ஓங்காதிருக்கட்டும், வாய்களைத் திறக்காதிருக்கட்டும், எனது திருமண விழாவை அவதூறு போசாதிருக்கட்டும், கெடுக்காதிருக்கட்டும்!''

பிறகு மகிழ்ச்சிமிக்க ஊர்வலம் துணிச்சல்மிக்க ஜியார்ஜால் பாதுகாக்கப்பட்டுச் சிறிய மரத்தாலான சர்ச்சை நோக்கி அச்சமின்றி சென்றது. வர்ணந்தீட்டப்பட்ட பெட்டிகளுக்குள் இருந்த மேசை விரிப்புகளின் முனைகள் காற்றில் மகிழ்ச்சியோடு அலைந்ததினால் மணமகள் பெற்றிருந்த அருமையான சீதனத்தை ஒவ்வொருவராலும் பார்க்க முடிந்தது.

சர்ச்சடங்கு முடிந்த பிறகு, மூன்று குதிரைகள் பூட்டிய ஸ்லெட்ஜ் வண்டிகள் விருந்து நடைபெற இருந்த எகோரியின் வீட்டை நோக்கிப் பாய்ந்து சென்றன. இப்போது அவர்கள் எல்லாரும் மகிழ்ச்சிப் பாடல்கள் பாடிக் கொண்டிருந்தனர். கவலைப்பட நேரமில்லை, மகிழ்ச்சியோடு தேறலையும் பீரையும் அருந்த நேரம் வந்தது.

எகோரியும் மாஷாவும் விழிகள் தாழ்ந்திருக்க, மேசையின் முன்னர் நாணமாக அமர்ந்து, வழக்கத்திற்கேற்ப உண்ணவும் குடிக்கவும் செய்யவில்லை. மூன்றாவது சுற்று முடிந்த பிறகு நிகழ்ச்சிகளின் தலைவன் இளம் ஜோடி குளிர்ச்சியான வைக்கோற் பரணுக்குத் தூங்க அழைத்துச் செல்லப்பட வேண்டும் என்று உத்தரவிட்



டான். விருந்து இரவு முழுக்கத் தொடர்ந்து நடந்தது, திருகிய மெழுகுவத்திகள் விடியும் வரை எரிந்தன.

விரைவான பறவைகளைப் போல ஆண்டுகள் ஒன்றுக்குப் பின் ஒன்றாகப் பறந்து சென்றன. அவர்களுக்கு இரு பெண் குழந்தைகள் பிறந்தனர். நல்ல குடிமக்களிடம் நடைபெற்ற எல்லாமே எகோரிக்கும் மாஷாவுக்கும் வந்திருந்தன.





அத்தியாயம் இரண்டு

கோடை வெயில் கொளுத்தியது. பார்லி தனது முள் மீசையை வெளியே விட்டிருந்தது, ரை கதிர்களை மணிகளுடன் கனமாக நிறைத்திருந்தது. வயல்களில் ஒரு தங்கக் கடல் அலைப்புற்றது, அலைகளுக்கு மத்தியிலிருந்து ஒளிர்வுடைய பூக்கள் தங்களது நீலக் கண்களைச் சிமிட்டின. வயல்களுக்கு மேலாகப் விளைந்து முதிர்ந்த கதிர்களின் புத்தம் புது மணம் வீசியது. அத்தகைய அழகை வெட்டிச் சாய்ப்பது பரிதாபம். ஆனால் அறுவடைக்கு அது தான்

நேரம், ஏனெனில் மழையோ ஆலங்கட்டி மழையோ மொத்த அறுவடையையும் நாசம் செய்து விடலாம்.

ஓர் அதிகாலையில் வெண்ணிறத் தலைக்குட்டையணிந்து அரிவாள்களுடன் பெண்கள் வெளியே சென்று அறுவடை செய்யத் தொடங்கினார்கள். முதலாவது கதிர்க்கட்டுகள் சிறிய கூடாரங்களைப் போல நிமிர்ந்து நின்றன, குழந்தைகள் பின்தொடர்ந்து சென்று, தரையில் கிடந்த எல்லாக் கதிர்களையும் ஒன்று விடாமல் பொறுக்கினார்கள்.

புழுக்கமான வெப்பம் அவர்களது கண்களுக்குள்ளாக வியர்வை ஓடவைத்தது, அவர்களுடைய முதுகுகள் மரமரத்துப் போயின. இருந்தன, ஆனால் ஓய்வெடுக்க நேரமே இல்லை — மாலைக்குள்ளாக அறுவடையை முடித்தாக வேண்டும். தங்களுடைய சொந்தப் பகுதிகளில் அறுவடையை முடித்தவர்கள், தங்களது அக்கம்பக்கத்தவர்களுக்கு உதவ, மாலை வாக்கில் மொத்த வயலும் கதிர்க்கட்டுகளுடன் புள்ளியிடப்பட்டன.

பெண்கள் முதுகுகளை நிமிர்த்தி, புல்லால் அரிவாள்களைத் துடைத்தார்கள், மேலும் அறுவடை செய்யப்பட்ட வயலிலே உருளத் தொடங்கினார்கள்.

''அரிதாள் கட்டை, அரிதாள் கட்டை!'' என்று அவர்கள் கத்தினார்கள், ''எனது வலிமையைத் திரும்பத் தா! அடித்துக் கோதுவதற்காகவும், சூட்டடிப்புக்காகவும், நூல் நூற்பதற்காகவும்!''

பாட்டி அகுலீனா முதலாவது கதிர்க்கட்டை வீட்டிற்குள்ளாக எடுத்துச் சென்று கண்டிப்போடு உத்தரவிட்டாள்: ''வீட்டிற்கு முதலாவது கதிர்க்கட்டு, மூட்டைப்பூச்சிகளும் கரப்பான்பூச்சிகளும் போய்த் தொலையட்டும்!''



மறுநாள் படலைக்கு வெளியே ஏதோ சிரிப்பையும் சப்தத்தையும் எகோரி கேட்டான். படலை வாயிலைத் திறந்தான், அங்கே புல்வெளியில் நடனமாடிக் கொண்டும், கூஸ்லீ எனப்படும் தந்திக் கருவியை மீட்டிக் கொண்டும் உரக்கக் கத்திக் கொண்டும் இருந்த சிவப்புச் சட்டை அணிந்த ஒரு விநோதமான மனிதனைச் சுற்றி மக்கள் கூட்டம் வட்டமாக உருவாகி இருந்தது.

''தயங்கியிருக்க வேண்டாம், வெட்கப்பட வேண்டாம்! மக்களே, உங்களுக்குத் தேவை என்ன வாங்கிக் கொள்வீர்! எல்லாமே இருக்கின்றன. உண்ணவும் பருகவும் முடியாத அளவுக்கு!'' என்றன்.

''அது ஊர்சுற்றும் சில்லறை வியாபாரியா?'' என்று வியந்து கூறிய மாஷா படலைக்கு வெளியே விரைய, அவளைத் தொடர்ந்து பெண்களும் பாட்டியும் சென்றனர். எகோரியும் ஒரு பார்வையிடச் சென்றான். ஊர்சுற்றும் சில்லறை வியாபாரிகளை அவர்கள் அடிக்கடி பார்த்ததில்லை.

செம்பட்டையான முடி கொண்ட சில்லறை வியாபாரி, தனது பலதரப்பட்ட வியாபாரப் பொருள்களைப் பெட்டிகளினின்றும்

எடுத்து மேலே வைத்து, வந்து வாங்குமாறு கூட்டத்தை வலியுறுத்திக் கொண்டிருந்தான்:

''மீனாலும் மாட்டிறைச்சியாலும் யார் களைப்புற்றுப் போனால், இதோ அவருக்கு இனிப்புச் சேவல்கள் இருக்கின்றன! யார் கடித்தாலும் தூங்கிப் போவீர், விழித்து எழுந்தா இன்னும் கேட்பீர்!''

கூட்டத்தினர் சிரித்து அவனது வியாபாரப் பொருள்களை உற்றுப் பார்த்தனர். குமிழ்மணிகளுக்காகவும், மோதிரங்களுக்காகவும், கைக் குட்டைகளுக்காகவும் பெண்கள் முண்டியடித்துக் கொண்டிருந்தனர், அதே வேளையிலேயே ஆண்கள் கண்டிப்பாகப் புதைமிதியடிகளைப் போட்டுப் பார்த்தனர்.

சிலர் பணத்திற்கு மாற்றாக வியாபாரப் பொருள்களை வாங்கினர், மற்றவர்கள் ஒரு டஜன் முட்டைகள் அல்லது காய்ந்த காளான்களுக்கு மாற்றாக வாங்கினர். சில்லறை வியாபாரி எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டான். அவனது நீண்ட பயணத்திலே வெங்காயங்கூட பயனுள்ளதாக இருக்கும்.

''அருமையான வேலைக்காகத் தூரிகைகள் உன்னிடம் இருக்கா, நல்லவரே?'' என்று எகோரி அமைதியாகக் கேட்டான்.

''அவற்றை எதுக்காக நீ விரும்புறாய்? அப்படியானா நீ உருவச்சிலை வர்ணந்தீட்டுபவனா? உன்னுடைய வேலையை என்னிடம் காட்டு, இளைஞனே. சந்தைக்காக ஏதாவது நான் எடுத்துக் கொள்ளலாம்.''

வேடிக்கையான ஆசாமியை எகோரி வீட்டிற்குள்ளாக அழைத்துச் சென்று அவனிடம் எல்லாவற்றையும் காட்டினான்: பூவேலைப்பாடு செய்யப்பட்ட நூற்புக் கருவிகள், செதுக்கப்பட்ட தட்டுகள், பிரம்புப் பின்னல் செய்யப்பட்ட பெட்டிகள் மற்றும் பூவேலைப்பாடு செய்யப்பட்ட மரப்பட்டைப் பேழைகள்.

''இது போன்ற வேலையை முன்னாலே ஒருபோதும் நான் பாத்ததில்லை, இளைஞனே,'' என்றான். ''இதுபோல உட்காட்டில் மறைத்து வைப்பது உனக்குப் பாவம். நீ தலைநகரத்திற்குச் சென்று ஜாருக்காக வேலை செய்ய வேண்டும். மாஸ்கோவில் ஏற்பட்ட பயங்கரத் தீ விபத்துப் பற்றி நீ கேள்விப்பட்டிருக்கலாம், இல்லையா? தீ பயங்கரமாக இருந்தது, பலகைகள் படபடவென்ற ஓசையோட வானத்திலே பறந்தன, மணிக்கூண்டுகளிலிருந்து மணிகள் நழுவிக் கீழே விழுந்துச்சு. நகரத்தைத் திரும்பக் கட்டுறதுக்கும், முன்னர் இருந்ததை விட மேலும் அழகானதாக ஆக்குறதுக்கும் நாடு பூராவும் கலைஞர்களை இப்ப வரவழைச்சுக் கொண்டிருக்கிருக்காங்க.''

''மாஸ்கோ கைவினைஞர்களுடன் என்னை எப்படி ஒப்பிடுறது?'' குழப்பத்தில் மூழ்கியவனாய் எகோரி கேட்டான். ''வெறுமனே வெட்கம்.''

''மாஸ்கோவில் சில உயர்ந்த கலைஞர்கள் இருக்காங்க என்பது உண்மை. அத்தகையவர்களை உலகில் வேறெங்கும் காண முடியாது.

ஓராண்டுக்கோ இரண்டாண்டுக்கோ அவர்களிடமிருந்து கற்றுக் கொள், நீ வெட்கத்தைத் தூக்கி எறிவாய். உன்னை அருமையான கலைஞரான மூத்த நிகதீமிடம் அழைத்துச் செல்றேன். மகா தியொனீஸியின் மாணவராக இருந்தவர் அவர். உனக்கும் கூட அவர் கற்பிக்கக் கடவுள் அருள் செய்வார்.''

அவன் தொடர்ந்து எகோரியைச் சரிக்கட்ட முயல, பாட்டி அகுலீனா குறுக்கிடாது இருக்க முடியவில்லை.

''முட்டாள்தனம் செய்து கொண்டிருப்பது பற்றி நீ என்ன நினைக்கிறே! எங்க குடும்பத்தை ரட்சிப்பவனை இது போல மயக்கி வசப்படுத்தி எங்கே கொண்டு போகிறே? வீட்டில் அவன் போதுமான வேலை வச்சிருக்கலையா? அவன் எங்கே போக? ஏன் அவன் போகணும்? அவனுக்குக் கவனிச்சுக்கிற குடும்பமும் நிலம்புலமும் இருக்கு, உன்னைப் போல அல்ல, நீ ஓர் ஊர்சுற்றி!''

அவனுக்குச் சரியான அதட்டுக் கொடுத்தாள், ஆனால் இரவுக்குத் தங்கிக் கொள்ள விட்டாள். அந்த மாலை முழுக்க மாஷா ஒரு வார்த்தைக் கூட பேசவில்லை, வெறுமனே எகோரியை வருத்தத் தோடு உற்றுப்பார்த்தாள்.

இரவு முழுக்க எகோரி உலர்ந்த புல் பரணில் புரண்டும் திரும்பியும் கிடந்தான். மாஸ்கோவிலிருந்து வந்த உருவச்சிலைகளை அவன் சர்ச்சில் பார்த்து அடிக்கடி பெருமூச்சு விட்டிருக்கிறான், ஏனெனில் அவனுக்கு அது போலத் திறமை கிடையாது.

மறுநாள் காலை, ரொட்டியும் புத்தம் புது பாலும் கொண்டு காலை உணவை அவர்கள் முடித்துக் கொண்டிருந்த போது, எகோரி எழுந்து நின்று சொன்னான்:

''என்னை மன்னிச்சுருங்க, பாட்டி, மாஷா எனது மகள்களே. மாஸ்கோ செல்றதுக்கு நான் தீர்மானிச்சுட்டேன். இதற்கு மேலும் கரண்டிகளுக்கும் பெட்டிகளுக்கும் பூவேலைப்பாட்டுடன் வர்ணந் தீட்டுவதற்கு என்னால் முடியாது. எனக்குள்ளாக ஒரு வித்தியாசமான சக்தியை நான் உணர்றேன். உருவச்சிலைகளுக்கு வர்ணந்தீட்டுபவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள விரும்புகிறேன்.''

அப்பாவிப் பெண்கள் வாய் பிளந்து அழத் தொடங்கினார்கள். ஆனால் அவர்களுடைய கண்ணீருக்கு எந்தப் பயனுமில்லை.

சில்லறை வியாபாரி சிரித்து, எகோரியை விரைவுபடுத்தினான்.

''துயரப்பட வேண்டாம், இளைஞனே! பெண்களிடத்தில் எப் போதுமே இப்படித்தான். கண்ணீரில்லாமல் அவர்களாலே எதுவும் செய்ய முடியாது.''

ஆகவே அவனுடைய சடங்கத்தில், ஒரு வட்ட ரொட்டி, கொஞ்சம் வெள்ளரிக் காய், நன்கு வேகவைத்த முட்டை இவற்றுடன் ஒரு தூய சட்டையை வைத்தார்கள். எகோரி தாழப் பணிந்து வணங்கி அவர்களிடமிருந்து விடைபெற்றுக் கொண்டான்.

வெண்ணிறத் தூசி படிந்த சாலைகள் வழியாக, கடினமான



அரிதாள் கட்டை கொண்ட வயல்களின் குறுக்காக, உயர்ந்த நீலப் புற்களின் ஊடாகச் செல்கையில் விரைந்து ஓடும் பளிங்கு போன்ற தெளிந்த ஆறுகளின் அழகைப் பாராட்டினார்கள்.

மாஸ்கோவுக்கு எவ்வளவு அருகே நெருங்கினார்களோ அவ்வளவு அதிகமான ஆட்களை வழியில் சந்தித்தார்கள். சிலர் வியாபாரப் பொருள்களை விற்கவும், சிலர் வாங்கவும், மேலும் சிலர் தங்களது நல்வாய்ப்பைத் தேடவும் போய்க் கொண்டிருந்தார்கள்.

மாஸ்கோவுக்குச் சற்று வெளியே இரவைக் கழிக்க நதிக்கரையில் தங்க அவர்கள் தீர்மானித்தார்கள். இரவில் நகரத்திற்குள்ளாக மக்களைக் காவல்காரர்கள் விட மாட்டார்கள். நெருப்பு மூட்டினார்கள், எகோரி படுத்து அமைதியாக கருண்ட வானத்தைக் கூர்ந்து நோக்கினான், பிரம்மாண்டமான, விநோத நகரத்தால் அச்சுறுத்தப்பட்டான். ஆனால் விடிந்ததும், மாஸ்கோ அமைந்திருந்த குன்றை அவன் பார்த்த போது அவனது இதயம் உரக்கவும் மகிழ்ச்சியுடனும் அடித்தது. அங்கே அழகான, கம்பீரமான நகரமிருந்தது, காலைச் சூரியனில் அதனது பொன்னாலான தூபிகள் மின்னின! சர்க்கரை போல வெள்ளையான சர்ச்சுகள் இளஞ்சிவப்பு மேகங்களைத் தொட்டன, அவற்றைச் சுற்றியிருந்தது கூரிய முனை கொண்ட கோபுரங்களுடன் இருந்த உயரமான ஒரு சுவர்தான்.

கட்டை வண்டிகளின் சக்கரங்களால் உறுமிய மாஸ்கோ நதியின் குறுக்காக இருந்த அகன்ற மரப்பாலத்தை அவர்கள் கடந்து சென்றார்கள். கரையோரத்திலே கோணிகளாலும் பீப்பாய்களாலும் பாரமேற்றப்பட்டிருந்த நூற்றுக்கணக்கான சிறிய படகுகள் இருந்தன. பாலத்திற்கு அப்பால் மக்கள் நெருக்கத்தால் இருளாகக் காணப்பட்டது. நடந்து போனவர்கள், குதிரை மீது சென்றவர்கள், பயணி வண்டிகள் இவற்றால் நிறைந்து இருந்தது. அத்தகைய ஒரு கூட்டத்தை எகோரி ஒருபோதும் பார்த்ததில்லை. ஆரவாரம், சீழ்க்கையொலி, சாட்டைகளின் விளாசல் ஓசைகள் மற்றும் குதிரைகளின் கனைப்பொலிகள்! புகையில் வாட்டிய மீனின் மணமானது மூக்கை நிறைத்தது. வாடிக்கையாளர்களைத் தங்களுடைய தட்டுகளுக்கு வஞ்சகமாகக் கவர்வதற்கு வியாபாரிகள் ஒருவருக்கொருவர் மேம்படப் போட்டியிட்டுக் கொண்டிருந்தார்கள். தட்டுகளில் விற்கப்பட்ட பொருள்களில் என்னதான் இல்லை!

''கண நேரத்திற்கு இங்கே நில், இளைஞனே,'' என்று கிளர்ச்சியுற்று சில்லறை வியாபாரி கூறினான். ''விலை கேட்கிறதுக்குச் சற்று விரும்புறேன்.'' கும்பலுக்குள்ளாக அவன் மறைந்து போனான்.

எகோரி அப்பால் சென்று நகரின் கற்சுவர் அருகே காத்திருந்தான். அருகே மகிழ்ச்சியுடைய, நன்கு பருத்த தாடியில்லாத இளைஞன் ஒருவன் இருப்பதைக் கண்டான். தனக்கு முன்னே முழுக்க உருவச் சிலைகளைப் பரப்பி இருந்தான். ''நான் ஒரு பார்வை பார்க்கலாம்,'' என்று எகோரி நினைத்தான். திடீரென்று பனி போல வெள்ளை

முடியுடன் கூடிய கிழவர் ஒருவர் பிதுங்கிக் கொண்டு முன்னே வந்தார். அவர் சிறிய உருவத்துடன், சுரித்தும், மிக மெலிந்தும் இருந்தார். ஓர் உருவச்சிலையைத் தேர்ந்தெடுத்தார், பிறகு மற்றொன்றை, அப்புறம் மூன்றாவதை, அவற்றிற்கு வர்ணந்தீட்டி இருந்த இளைஞனைக் கடிந்துரைக்கத் தொடங்கினார்.

''புறச்சமயத்தவனே, அருவருப்பான அறிவிலியே! கிறிஸ்துவுக்கும் கன்னி மேரிக்கும் இது போல எப்படி உன்னால வர்ணந்தீட்ட முடிந்தது? கைகளோ, கால்களோ இல்லாமல், முண்டமும் தலையும் மட்டும். கண்களும் வாயும் எங்கே? அவற்றின் இடத்தில் நீ வெறுமனே புள்ளிகள் வைத்திருக்கிறாய்! இது போலக் காணப்படும் யாரை யாவது நீ சந்தித்தால், பயத்தால் செத்துப் போவாய்!''

''இதை நீங்க விரும்பலேன்னா எடுக்க வேண்டாம்!'' அந்த ஆசாமி சிரித்தான். ''மற்ற ஆட்கள் எடுத்துக் கொள்வாங்க.''

''ஆமாம், அவங்க எடுத்துக் கொள்வாங்க!'' என்று கோபத்துடன் கிழவர் கத்தினார். ''உன்னுடைய வெறுக்கத்தக்க உருவச்சிலைகளுடன் அவங்க குடியிருப்பிடங்களைக் கறைப்படுத்துவாங்க!''

''அவங்க செய்யட்டும், முட்டாள்கள்,'' என்று இளைஞன் இளித்தான். ''இதன் மூலமாகத்தான் நாங்கள் வாழவும், உண்ணவும் செய்கிறோம்.''

''உன்னுடைய வயிறை நிரப்பிக் கொள்றதுக்காக வேறு தொழில்கள் இருக்கு. ஒவ்வொருத்தனும் உருவச்சிலைகளுக்கு வர்ணந்தீட்டுறவனாக முடியாது! உன்னுடைய உபயோகமற்ற பலகைகளை மூட்டை கட்டி உனது வழியைப் பார்!''

இக்கணத்தில் வர்ணந்தீட்டுபவனின் முகஞ்சிவந்தது. அவன் நிமிர்ந்து நின்று, கிழவருடைய வெண்ணிறத் தாடியைப் பற்றிப் பிடித்து, கோபமாக அவரைக் குலுக்கத் தொடங்கினான்.

எகோரியினுடைய குருதி நாளங்கள் புடைத்தன. ஒரு கிழவர் மீது கைகளைப் போடுவதா! அந்த மட்டியை அவ்வளவு வலுவாக எகோரி உலுக்கவே அது அவனுடைய பற்களைச் சலசலக்க வைத்தது. ''கிழவரைப் போக விடு,'' என்றான், ''இல்லாட்டா மூனு நாளைக்கு உன்னுடைய தலைவீங்கிப் போற மாதிரி செம்மையாக் கொடுப்பேன்.''

''இது ஒரு சூழ்ச்சி, ஒருத்தனுக்கு எதிரா இரண்டு பேர்!'' இளைஞன் புலம்பினான். ஆனால் தனது பொருள்களை அவசரமாக ஒன்று சேர்த்துக் கொண்டு புறப்பட்டான்.

கிழவர் சிரித்து, தனது தாடியை வருடினார்.

''ஏறக்குறைய எனது அழகை வேரோடு பிடுங்கிட்டான், மட்டிப் பயல். அவன் உருவத்திலே பெரியவன், ஆனா மூளை சிறுத்தவன், அப்படித்தான். உருவச்சிலைகளுக்கு வர்ணந்தீட்டுறதுக்குப் பதிலாக அவன் அடிக்கட்டைகளைப் பிடுங்கக் கூடும். அவனைத் தவிர்த்தமைக் காக உனக்கு நன்றி, என் நண்பனே. நீ யார்?''

''நான் நாட்டுப்புறத்திலிருந்து வருகிறேன், தாத்தா. என் பெயர் எகோரி.''

''எதற்காக மாஸ்கோவிற்கு வந்திருக்கிறாய், வியாபாரத்திற் காகவா மனமகிழ்ச்சிக்காகவா?''

''உருவச்சிலைகளுக்கு வர்ணந்தீட்டுறதைக் கற்க விரும்புறேன். மூத்தவர் நிகதீமை நான் தேடிக்கிட்டிருக்கேன். அவரைப் பத்தி நீங்க கேள்விப்பட்டிருக்கீகளா?''

''அப்படித்தான், நான் கேட்டிருக்கிறேன்! கூரிய நாக்கு, மிளகு இதயம், பூண்டு ஆன்மா கொண்ட அச்சந்தருகிற கிழவர் அவர். தனது பயிற்சியாளர்களுக்கு அவர் கடுஞ்சோதனையான நேரத்தைத் தருவார். மோசமாக வேலை செய்வதைப் பார்த்தால், சிங்கத்தைப் போலக் கர்ஜித்து காதுகளைத் தலையிலிருந்து வெட்டிவிடுவார்.''

''அதே விலங்கு!'' என்று எகோரி வியந்தான்.

''ஆகா, அவர் ஓர் உண்மையான விலங்கு,'' என்று கிழவர் தலை யசைத்தார். ''யாராவது நேரத்தில் வேலை செய்யலேன்னா, கிழவர் அவனை இரண்டாக வளைத்து, முடிச்சுப் போட்டு ஆத்துக்குளே வீசி எறிவார். அது போல ஒருத்தரிடம் நீ போவியா?''

''ஆமா, போவேன்,'' என்று எகோரி உறுதியாகச் சொன்னான். ''நரகத்திலே கூட மக்கள் வசிக்கிறாங்க, ஆகவே ஒருவகையில் நான் சமாளித்துக் கொள்வேன்.''

''சரி, அந்த வகையில்,'' என்றார் கிழவர், ''நான் அதே நிகதீமாக இருப்பேன். மின்னல் வெளிச்சத்திற்குத் தாரா வெறிப்பது போல எதற்காக என் மீது வெறித்துப் பார்க்கிறாய்? நீ என்னைப் பார்க்கிற போது உனது முதுகெலும்பு குளிர்ந்து போகும், அப்படியா?'' அவர் சிரிக்கத் தொடங்கினார். ''சோம்பேறித்தனமான, திறமையற்றவர் களைப் பற்றி நான் சொன்னதை மனசிலே இருத்திக் கொள், இளைஞனே. அம்மாதிரி வகையை நான் விரும்பலே. ஆனா நீ கஷ்டப்பட்டு முயன்றா, நான் வைத்திருக்கும் எல்லா ரகசியங்களை யும் உனக்குத் தருவேன். அவற்றை என்னோட கல்லறைக்கு எடுத்துச் செல்ல மாட்டேன்.''

டிங்! டாங்! தடித்த மணியோசை மாஸ்கோவினுடைய பிரதான மணிக்கூண்டிலிருந்து கனமாகத் தரையில் விழுந்து நகரத்திற்கு மேலாக மெதுவாக மிதந்தது. அதே நேரத்தில் எல்லாப் பக்கங்களி லிருந்தும் பெரியதும் சிறியதுமான நூற்றுக்கணக்கான மணிகளின் மகிழ்ச்சிமிக்க மணியோசைகள் ஒரு சேர வந்து நகரத்தை நிறைத் தன.

கிழவர் மகிழ்ச்சியுடன் தனது கண்களைச் சுரித்தார், மேலும் எகோரியோ, ஒலிகளைப் பார்க்க முயற்சி செய்து கொண்டிருந்தது போல, பரவசமுற்று மேற்புறமாக நோக்கினான்.

''அது போதும். வா, எகோரி. இந்தத் தெய்விக இசையை காலங் காலத்திற்கும் கேட்க முடியும். எனது ஆசிரியர் தியொனீஸி செய்த

உருவச்சிலை ஒன்றை உனக்குக் காட்டுறேன். ஒவ்வொரு முறையும் விழாவுக்குச் செல்றது போல அவரது உருவச்சிலைகளைக் காணச் செல்கிறேன். அதற்கு ஏதோ ஏற்பட்டு விடுமோ என்று நான் அந்தளவு அஞ்சுறேன்... மாஸ்கோ தீயால் அழிக்கப்பட்ட போது, துயரத்தால் நான் இறந்து போயிருவேன்னு நினைச்சேன். அருமையான அத்தனை அழகும் எரிஞ்சு சாம்பலாப் போச்சு! அது இருந்ததை ருஷ்யாவில் எவரும் ஒருபோதும் அறிய மாட்டாங்க. சிறிய பகுதி தப்பிப்பிழைத்தது ஓர் அதிசயந்தான்.''

பண்டைய புராணக்கதைகளில் வரும் ருஷ்ய மாவீரனைப் போல வல்லமையும் பெருமையும் கொண்ட அஸம்ஷன் கதீட்ரல் வரை அவர்கள் நடந்து சென்றார்கள். நுழைவாயிலில் கருப்பு மேலங்கி அணிந்த ஓர் இளம் துறவி நின்றான்.

''நீங்க மிகவும் முன்னாலே வந்துட்டீங்க, நல்லவர்களே,'' என்றான். ''சற்று பிந்தி வாருங்கள்.''

''ஜாரினுடைய பட்டயம் பெற்ற உருவச்சிலை வர்ணந்தீட்டுபவன் நான்,'' என்றார் நிகதீம் உறுதியாக. ''இது என்னுடைய பயிற்சியாளன்.''

துறவி மரியாதையோடு தலை வணங்கி ஒதுங்கி நின்றான்.

கதீட்ரலில் உள்ளே அத்தகைய கம்பீரமான அமைதியும், உயரமும், பெருமையும் குடிக்கொண்டிருந்ததால், எகோரி பயத்தாலும் துடிதுடிப்பாலும் ஆட்கொள்ளப்பட்டான். ''இந்த அழகு,'' அவன் சிந்தித்தான், ''உண்மையில் மனிதக் கைகளால் செய்யப்பட்டதுதானா, தேவலோகத்துத் தேவதைகளால் இல்லையா?''

மேற்கூரைவரை சுவர்க்கோலங்களால் தீட்டப்பட்ட சுவர்களிலும் தூண்களிலும் ஆயிரக்கணக்கான மெழுகுவத்திகள் வெளிச்சத்தைப் பாய்ச்சின. தெய்வச்சிலைகள் வைக்கப்பட்டிருந்த திரைத்தட்டி பொன்னுடனும் வர்ணங்களுடனும் மின்னியது.

''இதோ தியொனீஸியினுடைய உருவச்சிலை இருக்கிறது,'' என்றும் நிகதீம் கிசுகிசுத்தார். ''இதைக் கூர்ந்து பார் — அவரது மக்களுக்கான பெரும் அன்பையும் இரக்கத்தையும் கற்றுக் கொள். அத்தகு நுட்பமான வர்ணங்களை அவர் எங்ஙனம் நினைத்துப் பார்த்திருக்க முடியும்? மேலும், கோடு எவ்வளவு அழுத்தமாகவும் சுத்தமாகவும் இருக்கிறது, பார், ஒரு பாடலைப் போல... ஏன் மௌனம்?'' பேசுவதற்கு மிகவும் கிளர்ச்சியுற்ற எகோரியை அவர் உற்றுப்பார்த்தார்.

''நீ தான் •என்ன செய்ய முடியும்?'' கிழவர் எச்சரிக்கையோடு கேட்டார்.

''என்னால் எதுவும் செய்ய முடியாது என்பதை இப்போது காண்கிறேன்...''

''சரிதான், இளைஞனே,'' நிகதீம் முறுவலித்தார். ''தங்களாலே எல்லாத்தையும் செய்ய முடியும்னு அறிவிலிகள் மட்டுமே சிந்திப்பாங்க. ஓர் உண்மையான கலைஞன் தான் சரியாகச் செய்ய

லேன்னுதான் எப்பவும் பயப்படுவான். நான் கூட தூரிகைகளை எடுக்காமல், தியொனீஸிக்காக வர்ணங்களைக் கலக்க பத்து ஆண்டு கள் செலவிட்டேன். எனது வயசான காலத்திலே தான் தெய்வச் சிலைகளுக்கான உருவரைகளை வரையத் தொடங்கினேன். இன்னும், நேரம் செல்லணும். குழுவினர் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.''

அவர்கள் வெளியே சதுக்கத்திற்குள் சென்றார்கள். அமைதியான கதீட்ரலை அடுத்து, அங்கே முன்னை விட அதிகம் கூச்சலும் இரைச்சலும் உள்ளதாகக் காணப்பட்டது. அவர்களை நோக்கி தாடி வைத்த ஆட்கள் கூட்டத்தினரை மகிழ்விக்க இரு கரடிகளைச் சங்கிலிகளால் கட்டி இழுத்து வந்தார்கள். கரடிகள் உறுமிக் கொண்டும் பின்னுக்கு இழுத்துக் கொண்டும் நின்றன, மேலும் அவற்றினுடைய காவற்காரர்கள் கஞ்சிராக்களால் ஒலி எழுப்பிக் கொண்டும், குழல்களை ஊதிக் கொண்டும், வேடிக்கையைக் கவனிக்கு மாறு கூட்டத்தினரிடம் கூச்சலிட்டுக் கொண்டும் இருந்தார்கள்.

குதிரைகள் கரடிகளின் மணத்தால் குறட்டை விட்டு, பின்னுக்கு இழுத்து, ஊற வைத்த ஆப்பிள் பீப்பாய்களைக் கவிழ்த்தன. வியாபாரி கள் வண்டிக்காரர்களிடமும், வண்டிக்காரர்கள் குதிரைகளிடமும் கத்தினார்கள். அதே நேரம் ஜாரினுடைய ஆட்கள் குதிரைகளில் வந்து கூட்டத்தினரின் வழியாக நுழைய முயன்று ஈயநுனி கொண்ட சாட்டைகளால் கூட்டத்தின் ஊடாக தங்களுக்கு ஒரு பாதை அமைத்தார்கள்.

''கிராம வாழ்க்கைக்குப் பிறகு உன்னைப் பயப்பட வைக்கிறதா?'' என்று நிகதீம் சிரித்தார்.

ஒரு பக்கத்தெருவுக்கு அவர்கள் திரும்பினார்கள். இங்கு குறை வான ஆட்களே இருந்தார்கள், ஆனால் அதிகமான நொடிகளும் துளைகளும் இருந்தன. கலங்கிய குட்டைகளின் குறுக்காக மரப் பலகைகள் போடப்பட்டிருந்தன, அவை இல்லாத இடங்களில் வண்டிகள் சேற்றில் ஆழ அமிழ்ந்தன. கனமான, இறுக்கமாகத் தாழ்ப்பாளிடப்பட்ட படலைகளுடன் பைன் காடு போல மரக்கழி களால் ஆன வேலிகள் வலமும் இடமும் இருந்தன. ஒவ்வொரு வீடும் தனது அண்டைய வீடுகளினின்றும் ஒரு கோட்டை போலத் தனித்து வேலியிடப்பட்டிருந்தது. பொதுவான வேலிகளே கிடையாது, ஏனெனில் வடிநீர்க்கால்களாகப் பயன்பட்ட குறுகிய பாதைகள் முற்றங்களுக்கு இடையே சென்றன.

''அந்த வீடுகள் எவ்வளவு விசித்திரமானவை,'' என்று எகோரி வியந்தான். ''அவை அவ்வளவு உயரமாகவும் குறுகலாகவும் இருக்கின் றன, அவற்றில் நெருக்கம் இருக்க வேண்டும். அவைகளுக்கு அரு கே என்னுடைய வீடு ஒரு மாளிகை போலக் காணப்படும்!'' கூரைக் குச் சற்றுக் கீழாக பிளப்பு போன்ற சன்னல்கள் மைக்காவினால் மூடப்பட்டிருந்தன. வேலிக்கு உள்ளாக இருந்த நிலத்தின் பரப்பு காய்கறித் தோட்டத்திற்கு மட்டுமே போதுமானதாக இருந்தது.



''வீடுவாசல்களில் நாங்கள் இதுபோல ஒருத்தரை ஒருத்தர் பிரிந்திருக்குமாறு வேலியிட மாட்டோம். பரந்த இடம் உங்களுக்குக் கிடையாது,'' என்று எகோரி தயக்கத்தோடு சொன்னான்.

''சந்தேகமின்றி, அது எங்கிருந்து வரக் கூடும்? இங்கு எத்தனை மக்கள் வசிக்கிறாங்க என்று உனக்குத் தெரியுமா? இரண்டு லட்சத் திற்கும் மேலே,'' என்று நிகதீம் பெருமையோடு சொன்னார்.

''அப்படியா!'' என்று எகோரி வியந்தான். ''எவ்வளவு அதிகம்!''

மேலும் ஒரு சில திருப்பங்களுக்குப் பிறகு, அண்மையில் கட்டப் பட்ட ஒரு புதிய சர்ச் அருகே இறுதியாக நின்றனர். தேவதைக் கதை மாளிகை போல அது ஆபரணங்களால் மூடப்பட்டிருந்தது. சுவர்கள் வெள்ளைக் கல் செதுக்கு வேலைப்பாட்டால் மேற்பூச்சிடப்பட் டிருந்தன, தூண்கள் முறுக்கி நின்றன, மேலும் ஐந்து பிரகாசமான நீலநிறத் தூபிகள் பொன்நிற நட்சத்திரங்களுடன் மின்னின.

''அதைத்தான் நாம் அலங்கரிக்கப் போகிறோம்,'' என்று நிகதீம் பாசத்தோடு சொன்னார்.

''நல்ல கிழவர்,'' என்று எகோரி நினைத்தான். ''தன்னைப் பத்தி அவர் கடூரமான விலங்குன்னு சொன்னது சரியில்லாதது.''

இருந்தபோதிலும், சர்ச்சின் வாயிற்படியை அவர்கள் தாண்டிய உடனே அருமையான கிழவர் முற்றிலுமாக மாற்றமடைந்தார். அவரது அடர்ந்த புருவங்கள் புடைத்தன, கண்கள் கோபமாய் அழன்றன, மேலும் ஒரு பெஞ்சின் மீது அமைதியாக உட்கார்ந்து எதையோ தின்பதற்கு வைத்திருந்த ஆட்களிடம் விரைந்து சென்று அவர்களைத் திட்டத் தொடங்கினார்.

''என்ன செய்து கொண்டிருக்கீங்க, புறச்சமயிக் கூட்டத்தினரே? உங்களோட விருந்தினால சர்ச்சை ஏன் கறைப்படுத்துறீங்க? இங்கே சத்திரமா? கடவுள் உங்களைத் தண்டிப்பார், சற்று பொறுங்க.''

''ஒரு வேளை நாங்க இந்தத் தண்டனையிலிருந்து தப்பிப்போம்,'' சூழ்ச்சியான தோற்றங்கொண்ட மிரோன் இளித்தான். ''ஒரு வயிறு குறைவான நினைவாற்றலைப் பெற்றிருக்கு. அதை நிரப்பாத வரை அது வேலை செய்ய விடாது.''

''உடலுக்கு எது பிரியமானதோ அது ஆன்மாவுக்குத் தீமை யானது,'' என்று நிகதீம் கண்டிப்போடு சொன்னார். ''உருவச் சிலைக்கு வர்ணந்தீட்டும் ஒருத்தனை இன்று சதுக்கத்தில் பார்த்தேன். தெய்வலோகத்துத் தேவதைகளுக்குப் பதிலா, அவனைப் போலப் பெருந்தீனியர்களை வர்ணந்தீட்டுறான். அவனோட நான் சண் டைபோட்டேன். நன்றி, எகோரி எனக்கு உதவினான். கேள், லுகா! உன்னுடைய புத்தகத்திலே எகோரியைச் 'சோற்றுக்கு வேலை செய்பவன்' என்பதாகக் குறித்துக் கொள், பிறகு நாம் பார்ப்போம்.''

'' 'சோற்றுக்கு வேலை செய்பவன்' என்றால் என்ன?'' எகோரி கேட்டான்.

''அதன் அருத்தம் நீ உன் வேலைக்காக உணவு பெறுவாய் என்பது,''

வழுக்கைத்தலை லுகா கடுமையாகப் பதிலளித்தான். ''ஆனா வேலை இருக்கும் போது மட்டுந்தான். வேலை இல்லாம போகிற போது, உணவில்லாது போகும். அவனுக்காக நான் என்ன வேலை கொடுப் பது, பெரியவர் நிகதீம்?''

''ஆக, அவன் கிராமத்திலிருந்து வந்திருப்பதனாலே, மரத்திடம் விருப்பம் கொண்டிருக்க வேண்டும். முதலில் அவன் உருவச்சிலைப் பலகைகளைத் தயாரிக்கட்டும். அவ்வாறு குறித்துக் கொள். மிரோன், நீ அவனுக்குக் கற்றுக் கொடு. வாங்க, இளைஞர்களே, நாம் வேலையைத் தொடங்கலாம். ஒரு வாய்ச்சி எடுத்துக் கொள், எகோரி. மூலையில் கொஞ்சம் பலகைகளை எடுத்துக் கொள், அவற்றில் மூடிச்சுகள் இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு, அவை வெள்ளையாகும் வரை இழை.''

எகோரி தனது சட்டைக் கைகளைச் சுருட்டிவிட்டுக் கொண்டு, ஒரு கூர்மையான வாய்ச்சியை இரு கைகளிலும் எடுத்து, ஒரு பைன் பலகையிலிருந்து முதலாவது பட்டையை நீக்கிய உடனேயே மரப் பிசின், காடு வாசனை வரவே வீட்டில் இருப்பது போல உணர்ந்தான். சங்கிலியில் கட்டப்பட்ட கரடிகள், கோபங்கொண்ட ஜாரினுடைய காவலர்கள், முழு இரைச்சல் மிக்க நகரம் ஆகியன நழுவிச் சென்றன.

தன்னால் முடிந்தளவுக்கு அவன் முயன்றான், தானாகவே வெட்கப்படப் பயந்தான். மேலும் சோம்பலாக இருந்ததில் அவன் கைகள் களைத்துப் போயின. மாலை வாக்கில் ஏறத்தாழ பலகைகள் முழுதுமே இழைக்கப்பட்டு விட்டன.

''ஏன் இத்தகைய அவசரம்?'' மிரோன் முணுமுணுத்தான். ''உலகத்திலுள்ள எல்லா வேலையையும் உன்னால் செய்ய முடியாது, அது உனக்குச் செல்வத்தைக் கொண்டு வராது, கூனலை மட்டுமே கொண்டுவரும். இளைஞனே, அவசரப்படாதே. எவ்வளவு சீக்கிரம் நாம் முடிக்கிறோமோ, அவ்வளவு சீக்கிரம் நம்ம கழுத்துகளைப் பிடிச்சுத் தள்ளுவாங்க. பிறகு நீ எங்கே போவாய்?''

''வேறு விதமாக என்னால் முடியாது. செய்வதற்கு வேறு என்ன இருக்கிறது என்று எனக்குச் சொல்.''

''ஹூம், பேதையே,'' பெருமூச்சு விட்டான் மிரோன். ''உனது தொழிற்கருவிகளை அப்பால் வை, நாம கொஞ்சம் தூங்கப் போக லாம். விரும்பினால் சீவலைக் கூட்டிப் பெருக்கு.''



எகோரி சர்ச்சைப் பெருக்கிக் கொண்டிருந்த வேளையில், குழுவின் எஞ்சியோர் வீடு சென்றார்கள். பெரியவர் நிகதீம் மட்டுமே இருண்ட காலியான சர்ச்சில் தங்கியிருந்தார். கவனிக்கப்படாதவாறு மூலை யில் எகோரி சப்பணமிட்டு தரையில் உட்கார்ந்தான். போவதற்கு அவனுக்கு எந்த இடமுமில்லை.

மூத்தவர் ஒரு மெழுகுவத்தியை ஏற்றி, கற்சுவர் பரப்புக்கு முன்னர் சிந்தனைவயப்பட்டபடி நின்றார். நீண்ட நேரத்திற்கு அதை உற்றுப் பார்த்தார். சூடான மெழுகு சொட்டுச் சொட்டாக அவர் கைமேல்

விழுந்தது, ஆனால் அவர் பொருட்படுத்தவில்லை. திடீரென்று மெழுகுவத்தியை உயர்த்தி, எதையோ அவர் வரைந்து கொண் டிருந்தது மாதிரி, சுடர்விடுகின்ற ஒரு தூரிகை போல அதைச் சுவருக்கு முன்னால் அலைத்தார்.

சிறு தீநாக்குத் துடித்தது, சுவருக்கு மேலாக நகர்ந்து சென்றது. எதோ ஒரு புனிதச் செயல் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருந்தது, இருட்டினின்றும் கட்புலனாகாத சுவர்க்கோலம் தோன்றிக் கொண் டிருந்தது. சில சுவர்களில் கிழவர் அமைதியாகவும், சிந்தனையுடனும், மற்ற இடங்களில் மகிழ்ச்சியுடனும், புன்முறுவல் செய்தவாறும் வரைந் தார். ஆனால் மிகப் பெரிய சுவரின் அருகே அவர் நடந்து சென்ற போது, முற்றிலும் மாற்றம் அடைந்தார். கடுமையாகவும், தீர் மானமாகவும் அங்கே நின்று கொண்டு, அவரது கண்கள் சீற்றத்துடன் அழன்று கொண்டிருக்க, தீ நிறைந்த மின்னல் போலக் கொழுந்து விட்ட மெழுகுவத்தியால் யாரையோ கருணையில்லாமல் தாக் கினார்.

அவ்வாறு நெருப்பினால் எல்லாச் சுவர்களையும் நிகதீம் ‘வரைந் தார்’, இருபது மெழுகுவத்திகளைப் பயன்படுத்திய அவர் காலை வாக்கில்தான் எகோரியை எதிர்ப்பட்டார். அத்தகைய நடுக்கத்தால் அப்பாவிக் கிழவர் மெழுகுவத்தித் துண்டைக் கீழே போட்டுவிட்டார்.

‘‘பயப்பட வேண்டாம், பெரியவர் நிகதீம், அது நானே தான்,’’ என்று எகோரி குழப்பத்தில் சொன்னான். ‘‘நான் இங்கேதான் இருந்தேங்கிறதை உடனடியாக உங்களிடம் சொல்லாததற்காக என் னை மன்னிச்சுருங்க. உங்களுக்குத் தொல்லைதர நான் விரும்பலே.’’

‘‘அடேயப்பா, அட சனியனே!’’ என்று கிழவர் கோபமாக வியந் தார். ‘‘நடுக்கத்தாலே எனது கால்கள் நிலைகுலைந்தன. இரவு ஆந்தை போல ஒளிந்துகொண்டு!’’

வயதான ஆட்கள் போல அவர் முணுமுணுத்துக் கொண்டிருந்து, பின்னர் அமைதியாகிப் போனார்.

‘‘இந்தக் கற்பாறையில் இரவு முழுக்க நீ உட்கார்ந்திருக்க எங்ஙனம் முடியும்?’’

‘‘ஆனால் அது மிகவும் ஆர்வமூட்டுறதா இருந்துச்சு!’’ என்று எகோரி உணர்ச்சிவயப்பட்டுப் பேசினான்.

‘‘அப்படியா? என்னுடைய வயசான காலத்தில் நானே ஒரு மாணவனைத் தேர்ந்தெடுத்துக் கொண்டது போலக் காணப்படுது,’’ என்று நிகதீம் சோர்வாக முணுமுணுத்து, சுவர் அருகே உட்கார்ந்து சீக்கிரமே தூங்கிப் போய்விட்டார்.

* * *

அன்று இரவு முதல் எகோரியைத் தன்னுடன் வசிப்பதற்குத் தனது தனித்த சிறிய மர வீட்டிற்கு நிகதீம் கூட்டிச் சென்றார். தனது ஆயுள்



முழுக்க இதைத் தவிர வேறு எதையும் சம்பாதித்திராத, இரும்புப் பாளங்களால் கட்டப்பட்ட பெட்டியில் மிகவும் புகழ்பெற்ற மாஸ்கோ, ப்ஸ்கோவியன் மற்றும் நோவ்கராத்தியன் உருவச்சிலைகளின் வரைபடப் படிகளுடன் கூடிய சில கறுத்துப் போன தாள்கள் இருந்தன. அங்கே கூட, அடியில், மற்றுமொரு அபூர்வப் பொருள் இருந்தது, தோலினால் கட்டப்பட்ட மரத்தாலான மூடியில் ஒரு பெரிய கையெழுத்துப் புத்தகம் இருந்தது.

ஒவ்வொரு மாலையும் வேலைக்குப் பிறகு நிகதீம் தனது கைகளைக் கழுவி மெழுகுவத்தி ஏற்றினார், பிறகு புத்தகத்தைக் கவனமாக வெளியே எடுத்து, பொறுமையோடு எகோரிக்குப் படிக்கக் கற்பித்தார். புத்தகம் மிகவும் மகிழ்விக்கிற ஒன்றாக, முற்றிலும் அசாதாரணமான சக்தியும் பேராண்மையும் கொண்ட துணிச்சல் மிக்க இளவரசன் போவாவைப் பற்றி இருந்தது. தன்னந்தனியனாக அவனால் முப்பதனாயிரம் வீரர்களைக் கொல்ல முடியும்! எத்தனை அற்புதங்கள் அவனுக்கு ஏற்பட்டிருந்தன!



வெதுவெதுப்பான அடுப்புப் பெஞ்சின் மீது கிடந்த பெரியவர் நிகதீம் சீக்கிரமே தூங்கிப் போனார், ஆனால் எகோரியால் புத்தகத்தைக் கீழே வைக்க முடியவில்லை.

''அரசர் மர்கொப்ரூன், நாற்பதனாயிரம் ஆட்கள் கொண்ட ஒரு படையைத் திரட்டி போவாவைக் கொல்லுமாறு உத்தரவிட்டார், ஆனால் அவர்களோ பயந்து போய்ச் சொன்னார்கள்: 'மேன்மைதங்கிய அரசர் மர்கொப்ரூன் அவர்களே! எங்களால் போவாவைப் பிடிக்க முடியாது, எங்களது உயிர்களை மட்டுமே இழப்போம். ஆனால் நீங்கள் பல்கான் என்ற வலிமையுடைய பெருவீரனைப் பெற்றிருக்கிறீர்கள். அவன் நாயின் கால்களை உடையவன், ஆனால் இடுப்புக்கு மேலே அவன் ஒரு மனிதன். ஏழு பர்லாங் தாவு அடி எடுத்து வைக்கிறான். அவனால் போவாவை எட்டிப் பிடித்துக் கைப்பற்ற முடியும். ஆனால் பல்கான் முப்பது பூட்டுகளுக்கும் முப்பது பாலங்களுக்கும் அப்பால் ஒரு சிறைக்கிடங்கில் கிடக்கிறான்.'

''பல்கானைச் சிறைக்கிடங்கிலிருந்து விடுவித்து போவாவைத் தொடர்ந்து போக அவனை அனுப்புமாறு அரசன் மர்கொப்ரூன் கட்டளையிட்டார். பல்கான் ஏழு பர்லாங் தாவடி எட்டில் செல்லத் தொடங்கினான்.''

எகோரியினுடைய கண்கள் மூடிக் கொண்டிருந்தன. அவனுடைய தலையானது மேசை மீது இருந்த புத்தகத்தை நோக்கி அடிக்கடி கவிழ்ந்து கொண்டிருந்தது, கடைசியில் அது மோதி பலத்த ஓசையெழுப்பவே நிகதீம் குதித்தெழுந்தார்.

''ஏய், இரவு ஆந்தையே, என்ன சேட்டை பண்ணிக் கொண்டிருக்கிறாய்? படுக்கப் போ, அல்லது நாளை முழுக்கத் தூங்கிவிழுந்து கொண்டிருப்பாய், இமைகளைச் சிமிட்டிக் கொண்டிருப்பாய். அப்போது எந்தக் கருணையையும் எதிர்பார்க்காதே!''

‘‘ஒரு நிமிடத்திலே, பெரியவர் நிகதீம். சிறிது மட்டுமே பாக்கி இருக்கு.’’ முன்தாழ்வாரத்திற்கு ஓடிச் சென்று, குளிர்ந்த இலையுதிர் கால மழை தனது முகத்தில் விழுமாறு செய்து, வீட்டிற்குள்ளாக நடுக்கத்துடன் விரைந்து திரும்பி மீண்டும் படிக்கத் தொடங்கினான்.

‘‘போவா வாளை எடுத்துக் கொண்டு, தனது நம்பிக்கைக்குரிய போர்க்குதிரையில் சேணம் இல்லாது ஏறி, வலிமையுடைய பெரு வீரன் பல்கானைச் சந்திப்பதற்காகப் புறப்பட்டான். வலிமையுடைய போர்வீரர் இருவரும் சந்தித்தார்கள், போவா பல்கானைக் குத்தி, தனது வாளை வீசியதும் அது அவனது கையை விட்டுப் பறந்து தரையில் பாதி புதையுண்டது. பிறகு பல்கான் கதாயுதத்தால் போவாவைத் தாக்கியதும் போவா தனது குதிரையினின்றும் உணர் வற்றுத் தரையில் வீழ்ந்தான். பல்கான் போவாவினுடைய குதிரையில் ஏறினான், ஆனால் போவாவினுடைய நம்பிக்கைக்குரிய போர்க் குதிரை பல்கானைப் பார்த்ததும், தனது பற்களில் கடிவாளத்தைக் கவ்விக்கொண்டு, செடிகள், புதர்கள் மற்றும் காடுகளின் வழியாகக் கால்களின் சதை உரிந்து எலும்பு தெரியும் வரை பாய்ந்து சென்றது. மூன்று மணி நேரம் போவா செத்தது போலக் கிடந்தான், பிறகு எதுவும் நடக்காதது போல எழுந்து, தன் மனைவி த்ருஷேவ்னாவின் கூடாரத்திற்குச் சென்று படுக்கையில் சாய்ந்தான்.’’



மேலும் எகோரி, போவாவைப் போல, மூன்று மணி நேரத்திற்குக் கட்டை போலத் தூங்கி, காலையில் எதுவுமே நிகழாதது போலக் குதித்து எழுந்து, நிகதீமுக்கு முன்னதாகச் சர்ச்சுக்குச் செல்வான். ஆகவே எகோரியை ‘இரண்டாக வளைத்து, முடிச்சுப் போட’ வேண்டிய அவசியம் நிகதீமுக்கு ஒருபோதும் ஏற்படவில்லை. மாறாக, அடிக்கடி அவனைப் பாராட்டி, பல ரகசியங்களை அவனுக்கு வெளிப்படுத்தினார்.

எடுத்துக்காட்டாக, ஒருநாள் பலகைகளை ஒன்று சேர்ப்பதற்கு எகோரி பயன்படுத்திய பசை தீர்ந்து போனது. அவர்களால் வேலை செய்ய முடியாது. என்ன செய்திருக்கப்பட வேண்டும்? பிறகு நிகதீம் சொன்னார்: ‘‘அது ஒரு பெரிய தொல்லை அன்று. கசாப்புக் காரனிடம் ஓடிச் சென்று புத்தம்புது ரத்தத்தை மட்கலத்திலே பெற்று அத்துடன் சுண்ணாம்பைக் கல. அருமையான பசையாக இருக்கும்.’’

பசைதடவிய எல்லாப் பலகைகளும் காய்ந்து போன போது, உடனடியாக வர்ணந்தீட்டப்படவில்லை, ஆனால் அவற்றின் மீது மட்டிப்பூச்சின் சில அடுக்குகள் வைத்தார்கள். மட்டிப்பூச்சுத் தயாரிப் பதற்காக எகோரி மூன்று கோணிச் சுதையைப் பொடியாக்கி, பின் னர் அந்தப் பொடியை ஒளி ஊடுருவும் மீன்பசையுடன் கலந்து, ஒரு மரக்கொத்துக் கரண்டியால் பலகைகளின் மேலாக முழுக்கவும் மெல்லியதாகப் பரத்தினான். ஓர் அடுக்குக் காய்ந்த உடனேயே அவன் மற்றொன்றை வைத்து, ஐந்து வரை இம்மாதிரி வைத்தான்.

அடுத்துச் சற்று முரட்டுக் கித்தானால் பலகைகள் மெத்தென்று வெள்ளையாகும் வரை மெருகிட்டான்.

மினுமினுக்கிற வெள்ளைப் பலகைகள் சுவர் நெடுகிலும் நாண முற்று நின்று, அவற்றில் யார் வரையப்பட விருக்கிறார்கள் என்பதை எதிர்பார்த்தன. அவற்றில் யார் இருக்கப் போகிறார்கள் என்பதை இப்போது அறிந்த ஒரே நபர் — பெரியவர் நிகதீம் தான்.

''ஆக, இளைஞர்களே,'' ஒரு நாள் பயபக்தியுடன் அவர் அறிவித்தார். ''நாளை நாம் வர்ணந்திட்டத் தொடங்குவோம். ஆகவே நீங்க எல்லாரும் இன்று அவசியம் நீராவிக்குளியல் எடுத்துக் கொண்டு, உங்களுடைய பாவங்களைக் கழுவி, நாளைக்குச் சுத்தமா அணிந்து கொண்டு வரணும்.''


நிகதீமுடைய குளியல் வீடு எப்போதோ பழமையினால் துண்டாக விழுந்துவிட்டது, ஆகவே அவரும் எகோரியும் லுகாவினுடையற்குச் சென்றார்கள். அவனது மனைவி ஆற்றிலிருந்து நல்ல சுவையுடைய நீர் கொண்டுவந்து, ஒரு பெரிய கொதிகலத்தில் ஊற்றி அடுப்பை நளினமாகவும், வெப்பமாகவும் மூட்டினாள். அடுப்புக்குக் குழாய் இல்லை, ஆகவே திறந்த கதவின் வழியாகப் புகை முற்றத்திற்குச் சென்றது. புகைக்கரியினால் சுவர்களும் கூரையும் முழுவதும் கறுப்பாயின, ஆனால் நீராவிக்குளியல் வீடு விரைவாக வெப்பமடைந்து, நீண்ட நேரம் வெப்பம் தங்கியிருக்குமாறு செய்தது.

நீராவி மிகவும் வெப்பமாக இருந்த போது ஆட்கள் முதலில் உள்ளே சென்றார்கள். முகப்பறையில் லுகாவும் எகோரியும் ஆடைகளைந்து இருந்த போது, நிகதீம் கணநேரத்தில் தனது ஆடைகளைக் களைந்து வாட்டுகின்ற வெப்பத்திற்குள்ளாகச் சென்றார். அறையை மேலும் வெப்பமாக்க சிவக்கக் காய்ந்த கற்களின் மீது அவர் நீரை வாரிவிடவும் செய்தார். பிர்ச் குச்சி விளக்குமாறிலிருந்து வந்த காட்டு மணம் அவ்வளவு இதமாக இருந்தது, அதைச் சுவாசித்தால் வெளியே விட விருப்பம் வராது.

''வா, எகோரி, விளக்குமாறினால் எனக்குச் சரியான அடிகொடு,'' என நிகதீம் தூண்டி, நீராவி அந்தளவு வெப்பமாக இருந்த, வறுத்த உருளைக்கிழங்கைப் போல ஒருவர் உணரக்கூடிய மேல்தட்டுக்குத் தாவிச் சென்றார்.

''வா!'' அவர் குத்திப் பேசினார். ''பயப்பட வேணாம்! ஒரு விளக்குமாறால் நீ என்னைக் கொல்லமாட்டாய்! நான் ஒரு ஈயன்று.''

''நீங்க ஈயில்லேங்கிறதை நான் பார்க்க முடியும்,'' எகோரி பல் இளித்தான். ''ஈ உங்களைவிடத் தடிப்பானது.'' பிறகு அவன் தனக்குச் சொல்லப்பட்டது போலச் செய்தான், அந்தளவு நிகதீமுக்கு அடி கொடுத்ததால், தட்டை விட்டுக் கிழவரால் சிரமத்துடன் ஊர்ந்து போக முடிந்தது. வியர்வை அவர் உடம்பினின்று உருண்டோட, புலம்பிப் பெருமூச்சு விட்டார். ஆனால் சொர்க்க ஆப்பிள்களை விருந்துண்டது போல மகிழ்வுமிக்க புன்னகை செய்தார்.



''கடந்த குளிர்காலத்தில் இங்கு டச்சுக்காரன் யாகொப் எப்படி நீராவிக்குளியல் எடுத்துக்கிட்டான் என்பதை நினைத்துப்பார், லுகா? எப்படி வர்ணந்தீட்டுவது என்பதை நமக்குக் கற்பிக்கிறதுக்காக வந்தவன். இன்று நீ எனக்குத் தந்தது போல, எகோரி, அவனைப் பெஞ்சின் மீது கிடத்தி ஒரு விளக்குமாறினால் முதுகில் விளாசினேன். ஆனா அவன் ஒரு பன்றி போலக் கிறீச்சிட்டு, பெஞ்சை விட்டுக் கீழே உருண்டு, பைத்தியம் போல ஏசினான்! 'நான் அந்நியன்!' என்றான். 'என் மீது கையை நீ உயர்த்தக் கூடாது! கிளைகளால் எதற்காக ஏங்கிட்டே நீ சண்டை போட்டுக் கொண்டிருக்கே, கிழவனே? நான் நல்லா வர்ணந்தீட்டுறேன், இல்லையா? உங்களையே விளாசிக் கொள்ளுங்க, நீங்க குற்றம் செய்திருந்தால், காட்டுமிராண்டிகளே! உங்களைச் சாத்தான் கொண்டுபோக!' ''

''கவனிங்க!'' எகோரி திடீரென்று சொன்னான். ''மூலையில் ஒரு தவளை இருக்கிறது!''

''அது கோடைக்காலம் முழுக்க இங்கே வசித்து வந்திருக்கிறது,'' லுகா முறுவலித்தான். ''அத்தகைய சேட்டைக்காரன். குளியல் வீட்டைச் சூடாக்கிய உடனேயே அது தோன்றும். எங்கிருந்தோ முழுதும் கறுப்பா வந்து மகிழ்ச்சியால் கத்துகிறது. எந்த வெப்பத்திற்கும் பயப்படுறதில்லை!''

''வா, எகோரி, கொஞ்சம் சூடாக்கு, என்னுடைய காதுகள் குளிர்ச்சியாகிக் கொண்டு வருது!'' நிகதீம் சொன்னார்.

எகோரி ஒரு குவளை குவாசை* பழுக்கக் காய்ந்த கற்களின் மீது தெளித்தான், பிறகு சுத்தமான சட்டைகள் அணிந்து புத்துணர்ச்சியோடு தோட்டத்தின் வழியாக வீட்டிற்குச் சென்றார்கள். இப்போது பெண்கள் 'தங்களை விளாசிக் கொள்ளும்' முறை வந்தது.

* * *

மறுநாள் குழுவினர் அனைவரும் சுத்தமாகவும் பயபக்தியாகவும் சர்ச்சிற்கு வந்து சேர்ந்தனர். பழைய ருஷ்யாவில் எப்போதுமே பயங்கரப் போருக்கும் முக்கியப் பணிக்கும் மக்கள் இப்படித்தான் சென்றார்கள்.

''கடவுள் நம்மோடு இருப்பாராக,'' என்ற நிகதீம் பகட்டுடன் தானாகவே சிலுவை வைத்துக்கொண்டார். ''புனிதர் நிகோலாவை நான் வரையத் தொடங்குவேன். லுகாவும் எகோரியும் இந்த வரைபடப்படிகளை உருப்பதிவு மாற்றீடு செய்யட்டும், மீதமுள்ளவர்களுக்கு என்ன செய்வதென்று தெரியும்.''

ஒரு பெரிய பலகையை நிகதீமுக்கு முன்னர் வைத்தனர். மெல்லிய

---

* குவாஸ் — ரை ரொட்டியிலிருந்து தயாரிக்கப்படும் ஒருவகை பானம். (ப-ர்.)

தூரிகையை அவர் சிவப்பு வர்ணத்திற்குள்ளாக முக்கி, காற்றில் அதை அலைத்தார், மனத்தால் தன்னைத் தயாராக்கிக் கொண் டிருந்தார், பிறகு புனிதர் நிகோலாவின் உருவரையை ஒரு தனித்த நேர்த்தியான கோடால் உறுதியோடு வரையத் தொடங்கினார். ஏன் நிகோலா முதலாவதாக? ஏனெனில் சர்ச் அவருக்காக அர்ப் பணம் செய்யப்பட்டிருந்தது.

வர்ணந்தீட்டிக் கொண்டே புனிதர் நிகோலாவைப் பற்றி நிகதீம் கூறினார்.

வரைபடப்படியை மாற்றுகின்ற இந்தப் புதிய பணியை எப்படிச் செய்வது என லுகா காட்டுகையில் எகோரி செவிமடுத்தான். தனது அரிய பெட்டியிலிருந்து நிகதீம் கொண்டுவந்திருந்த இறக்கை கொண்ட ஆர்க்ஏஞ்சல் மிஹயீலின் பெரிய வரைபடப்படி ஒன்றை அவர்கள் எடுத்து, மட்டிப்பூச்சிட்ட பலகையின் மீது அதை வைத்து, மூலை களைக் கவனமாக ஒட்டினார்கள்.

வரைபடப்படி எடுப்பது இப்படித்தான் நடந்தது. முதலாவதாக வெள்ளைப்பூண்டின் சாறு, வரைபடப்படி எடுக்கப்பட வேண்டிய உருவச்சிலையின் வெளிவரைகளுக்கு மேலாகப் பூசப்பட்டது. சாறு காய்வதற்கு முன்பு, சிலையின் மீது ஒரு துண்டுத்தாள் வைத்து அழுத்தப்பட்டு, நீண்ட நேரத்திற்கு, தாளின் மீது வெள்ளைப்பூண்டு கோடுகளை ஏற்படுத்தும் வரை, வெதுவெதுப்பான உள்ளங்கையால் அது மெதுவாகத் தேய்க்கப்பட்டது. பிறகு அந்தத் தாள் ஒட்டுக்கம் பளத் துண்டின் மீது போடப்பட்டு, கோடுகள் நெடுகிலும் ஒரு குண்டூசியால் புள்ளிகள் அடிக்கடி குத்தப்பட்டன, ஏனெனில் அந்தத் தாளை வெளிச்சத்திற்கு முன்னர் காட்டிய போது, சித்திரம் முழு வதும் நுண்ணிய குண்டூசித் துளைகளில் அடங்கியிருந்தது.



பிறகு லுகாவும் எகோரியும் கருப்புக் கரிக்கட்டைத் தூள் கொண்ட ஒரு சிறிய துணிப்பையை ஆளுக்கொன்று எடுத்து, அவற்றால் வரைபடப்படியைத் தட்டத் தொடங்கினார்கள். கரிக்கட் டைத் தூள் குண்டூசித் துளைகளின் வழியாகச் சென்று வெண்ணிற மட்டிப்பூச்சு மீது படிந்தது, மற்றும் வரைபடப்படி கவனமாக அகற் றப்பட்ட போது, பலகையின் மீது புள்ளிகளால் ஆன இறக்கை கொண்ட ஏஞ்சலின் அருமையான உருவரை எஞ்சி நின்றது.

''இப்போது ஓர் ஊசி எடுத்து புள்ளிகள் நெடுகிலும் உருவரையைக் கீறு,'' என்றான் லுகா. ''பாரு, உன்னுடைய சட்டைக் கையினால் கட்டைக்கரி அழுக்குத்தடம் ஏற்படுத்தாதே.''

கீறத் தொடங்கிய எகோரி கரிக்கட்டைத் தூசி அழுக்குத் தடம் ஏற்படுத்தும் என்ற பயம் காரணமாக மூச்சுவிடவும் துணிவற்று இருந்தான்.

பார்த்துப் போக நிகதீம் வந்தார்.

''பலகை வரை சென்று மட்டிப் பூச்சைக் கீறாது பார்,'' என்றார். ''நல்ல உருவரையைச் செய்திருக்கிறாய், ஏஞ்சலே போல, அருமை

யாகவும் துணிச்சலாகவும். கடவுளுக்குக் கூட அவர் பயந்ததில்லை, தெரியுமா உனக்கு?''

''எவ்வாறு?'' என்று வியப்பில் ஆழ்ந்தவனாக எகோரி கேட்டான்.

''விஷயம், அது அப்படித்தான்,'' என்று நிகதீம் தொடங்கினார். ''கடவுள் ஆர்க்ஏஞ்சல் மிஹயீலைத் தன்னிடம் அழைத்துச் சொன்னார்: 'கீழே பூமிக்குப் பறந்து போய், அங்கே இன்னமாதிரி பாவத்திற்குரிய அந்த மனிதனின் ஆன்மாவைக் கொண்டுவா.' ஆகவே மிஹயீல் கீழே பறந்து சென்று, அந்த மனிதன் எட்டுக் குழந்தைகள் பெற்றிருந்ததைக் கண்டார். அந்த மனிதனுக்காக இரக்கப்பட்டுச் சொன்னார்: 'அவனது ஆன்மாவை நான் எப்படி எடுக்க முடியும், தேவரே, ஏனெனில் அவனுக்குச் சிறு குழந்தைகள் இருக்கின்றனர்? அவர்கள் பட்டினி கிடந்து சாவார்கள்!' 'எனக்குக் கீழ்ப்படிய மறுத்தால்,' என்று கடவுள் கோபமாகப் பேசினார், 'நீ பூமியில் வாழ வேண்டும்!' மிஹயீலினுடைய தங்க வாளையும், இறக்கைகளையும் அவர் எடுத்துக்கொண்டு மூன்று ஆண்டுகளுக்கு அவர் பூமியில் வசிக்குமாறு செய்தார்.''

''அப்படியா,'' என்று எகோரி நினைத்தான். ''திருத்தொண்டர்கள் எல்லாரும் ஏழைக்கு உதவ முயல்கிறார்கள், ஆனால் பணக்காரர்கள் இன்னமும் பூமியில் ஏழையை விட சுகமாக வாழ்கிறார்கள்.''

* * *

இப்போது தங்க இலை வர்ணந்தீட்டுபவர்களின் முறை வந்தது. உருவச்சிலையில் தங்கத்தால் மூடப்பட வேண்டிய இடங்கள் முதலில் சிவப்பு வர்ணத்தால் பூசப்பட்டன, ஏனெனில் அது தங்கத்தின் வழியாக மின்னும். பிறகு ஈரமான வர்ணத்தின் மீது மிகவும் கவனமாக மெல்லிய தங்க இலைகள், விரல்களால் அன்று, முயலினுடைய உள்ளங்கையுடன் வைக்கப்பட்டால் விரல்களோடு தங்கம் ஒட்டிக் கொள்வதில்லை.

மெதுவான, சள்ளைபிடித்த இவ்வெலை பரபரப்பை விரும்பவில்லை. மேலும் டிசம்பர் வரை இந்தப் பணியில் ஈடுபட்டிருந்தார்கள். புனித வர்வாராவின் நாளன்று கடுமையான உறைபனி விழுந்தது. அன்று மாலை ஒரு பெரிய பொட்டலத்துடன் தடுமாறியபடி நிகதீம் வீடு வந்தார். அவரது மூக்குச் சிவந்தும், மீசையில் பனித்துளிகள் விழுந்தும் காணப்பட்டன, குளிரினால் நடுங்கிக் கொண்டிருந்தார்.

''வர்வாரா உறையச் செய்யும் போது, காதுகளும் மூக்குகளும் பத்திரம்!'' என்று அவர் சிரித்தார். ''உனக்கு ஓர் ஆட்டுத்தோல் கோட்டு கொண்டு வந்திருக்கிறேன், எகோரி. உன்னை உறைந்து போக விட முடியாது. அதனால் நீ எனக்கு எந்தப் பயனும் இல்லை! இதோ, அளவுக்காகப் போட்டுப்பார்.''

''உங்க அக்கறைக்கு நன்றி, பெரியவர் நிகதீம்,'' கிழவருடைய

அக்கறையால் எகோரி நெகிழ்ந்து போனான். ''நான் இதை மறக்க மாட்டேன். இந்தக் கோட்டை எங்கே வாங்கினீங்க?''

''அண்மையில் வசிக்கின்ற ஒரு விதவையிடமிருந்து. அவளோட கணவன் போன வாரம் கசையாலடித்துக் கொல்லப்பட்டான்.''

''எதற்காக?''

''அவனுடைய சிறு பையன் படலைக்கு வெளியே வீதிக்குள்ளாக ஓடிய போது ஜாரினுடைய ஆட்களில் ஒருத்தன் குடிவெறியில் ஸ்லெட்ஜ் வண்டியை ஓட்டிக்கொண்டு வந்தான். பக்கவாட்டில் திருப்புறதுக்குப் பதிலா, தனது குதிரையை நேராகப் பையன் மீது ஓட்டினான், அதாவது பையனை ஒரு நாய் போலக் கருதி வேடிக் கைக்காகச் செய்திருக்கிறான். பையனுடைய அப்பா முற்றத்தில் மரக்கட்டை வெட்டிக்கொண்டிருந்தபடி எல்லாத்தையும் பார்த் தான். கோடரியை எடுத்து வேலிக்கு மேலாக அந்த மனிதனை நோக்கி வீசினான். பின்பகுதி அவனது முதுகில் தாக்கியது.''

''அது அவனைக் கொன்று விட்டதா?''

''இல்லை, வெறுமனே அவனை வடுப்படுத்தியது. ஆனா அதற் காகப் பையனுடைய அப்பாவைக் கசையாலடித்துக் கொன்னாங்க... அவன் நல்ல மனிதனாக இருந்தான். மூனு சிறிய குழந்தைகளோட அவனது விதவை இப்போ என்ன செய்வாள்? கொஞ்சம் பணமும் சிறிது மாவும் அவளுக்குக் கொடுத்தேன், இந்தக் கோட்டை அவள் உனக்குத் தந்தாள், நல்ல ஆன்மா. இதை அணிந்து கொள், வெறுக் காதே.''

* * *



தங்க இலை வர்ணந்தீட்டுபவர்கள் தங்களது பணியை முடித்து விட்டிருந்த போது, வர்ணந்தீட்ட நேரம் வந்தது. வர்ணக் கலவை யாளர்கள் கைப்பிடிகள் அற்ற மரக்கரண்டிகளில் தங்களது விரல் களால் வர்ணங்களைக் குழைத்து, அவற்றை முட்டை மஞ்சள் கருவுடனும் குவாசுடனும் கலக்கத் தொடங்கினார்கள்.

வர்ணந்தீட்டுகையில் எகோரி வியப்புற்றுப் போனான். அதற் குள்ளிருந்து ஏதோ ஒரு புதிரான ஒளி மின்னுவது போலக் காணப் பட்டது.

''அற்புதம், எகோரி!'' பெரியவர் நிகதீம் அவனைப் பாராட் டினார். ''இதைப் பார், மிரோன், வா. அதிலிருந்து கற்றுக்கொள், நீ அந்தளவுக்குச் செய்யவில்லை.''

''ஆக என்ன?'' மிரோன் பல் இளித்தான். ''அது எந்த வேறுபாடும் காட்டவில்லை. வளைந்த கோடுகளுக்கு மேலாகத் தீட்டவும், மெரு கெண்ணெயுடன் மூடவும் முடியும்.''

''என்னால் உன்னைப் புரிஞ்சுக்க முடியவில்லை, மிரோன். எதற் காக வாழ்ந்து கொண்டிருக்கிறாய்?'' என்று நிகதீம் அமைதியாகப்

பேசினார். ''உனக்கும் மகிழ்ச்சியில்லை மற்றவர்களுக்கும் இன்ப மில்லை. சர்ச்சிற்கு வரக்கூடிய சாதாரண மக்களுக்குப் படிக்கவோ எழுதவோ முடியாது, பார்க்க மட்டுமே முடியும். உன்னுடைய வளைந்த முகங்களைப் பார்க்க அவர்கள் விரும்புவார்களா? நீ கடினமாக முயல வேண்டும், உனது வேலை பற்றி நீ வெட்கப்படக் கூடாது.''

எகோரியோ அத்தனை கடுமையாக முயன்று உழைத்தான், மேலும், இந்தப் புதிய கலையின் ரகசியங்களை அறிந்து கொண்டதனால் அவன் முற்றிலும் மெலிந்து போனான். சில நேரங்களில் அவனை வீட்டை விட்டு வெளியே நிகதீம் அநேகமாக இழுக்க வேண்டி நேரிட்டது. ''வெளியே போய், நீயாகவே மகிழ், இளைஞனே. இன்று திருவிழா. மக்கள் எவ்வளவு மகிழ்ச்சியா இருக்காங்கன்னு பார்.''

''இல்லை,'' எகோரி பெருமூச்சு விட்டான். ''எனக்காக வீட்டில் என் மனைவியும் குழந்தைகளும் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கும் போது, எனக்கு என்ன மகிழ்ச்சி? நானில்லாமல் அவர்கள் எப்படி இருக்காங்களோ, உண்பதற்குத் தேவையானதைப் பெற்றிருக்காங்களோ, அவர்களை யாரேனும் புண்படுத்திவிடவில்லையோ? அவர்களுக்காக ஒரு பரிசு கொண்டு செல்லக் கூட யாருமில்லை...''

''ஏப்ரல் 'பனி எரிப்பு' வரவும், உனது சில்லறை வியாபாரி நண்பனுடன் ஏதாவது அனுப்பி வைப்போம். மேலும், கடவுள் கருணை காட்டினால், கோடை இறுதிக்குள்ளாக நாம் வேலையை முடித்தால், நீயாகவே வீட்டிற்குச் செல்ல முடியும்.''

''உண்மையாகவா?!'' எகோரி மகிழ்ச்சியோடு வியப்புற்றான்.

''நிச்சயமாக உண்மை,'' நிகதீம் வருத்தத்தோடு பதிலளித்தார். ''ஆனால் நீ திரும்பி வருவாயா, மகனே? இப்போது நீ இல்லாமல் நான் கையற்றது போல உள்ளேன். எனது சொந்த மகன், விளதீமிர், ஏழு ஆண்டுகளுக்கு முன்னால் கிராமத்துச் சர்ச்சில் ஜாரினுடைய ஆட்களால் சிரச்சேதம் செய்யப்பட்டான், ஏனெனில் அதை அவர்கள் சூறையாடுவதை அவன் தடுக்க முயன்றான். அவனுங் கூட உருவச்சிலை வர்ணந்தீட்டுறவன் தான்... அதோ அவனுடைய இடத்தை எடுத்துக் கொள்வதற்காகக் கடவுள் உன்னை எனக்கு அனுப்பினார்... எதற்காகக் கண்ணைச் சிமிட்டுகிறாய்? அடுப்படியை நீ கூர்ந்து பார்ப்பது நல்லது, ஏற்கெனவே குளிர்ந்து விட்டது. கொஞ்சம் விறகாவது உன்னால் எடுத்துவர முடியவில்லை என்றால் உன்னை இங்கு வைத்துக் கொண்டிருப்பதில் என்ன பயன்?''

கிழவர் அந்தளவு படிப்படியாகக் கிளர்ச்சியுற்றார், அடுப்புப் பெஞ்சின் மீது பாதி இரவை முணுமுணுப்பதிலும், குறுகுறுப்பதிலும் கழித்தார்.

* * *

முகம் தீட்டுபவர்கள் ஏற்கெனவே தங்களுடைய வேலையைச் சர்ச்சில் தொடங்கி விட்டனர். முகங்களையும் கைகளையும் வர்ணந் தீட்டுவது, மிகுந்த திறமை, கூரிய கண், நிதானமான கை தேவைப் படும் மிகவும் சிரமமான கட்டம். அறிவோடும் அழகோடும் முகங்கள் பிரகாசிக்க வேண்டும், அத்தகையது தூய இதயங்கொண்ட கலைஞன் ஒருவனால் மட்டுமே வர்ணந்தீட்டப்பட முடியும்.

புனித பரஸ்கேவாவின் முகத்திற்கு வர்ணந்தீட்டிய போது நிகதீம் அமைதியாகப் பேசினார்:

''பெண் மெலிவானவள், ஆனால் அவளது காதல் வலிமையானது. எந்தச் சக்தியாலும் அவளது விசுவாசத்தை உடைக்க முடியாது. ஒரு நாள் பரஸ்கேவாவுடைய பிணம் இருந்த நகரமானது ஸர்ஸேனியன் நாடோடி இனத்தவரால் முற்றுகையிடப்பட்டது. அவர்கள் நிறையப் பேர் இருந்தார்கள், நகரமக்களோ மிகக் குறைவு, எனவே முத்தி பற்றி எவரும் சிந்திக்கவில்லை.

''ஸர்ஸேனியன் அரசன் நகரத்திற்குள்ளாக நுழைந்து, பரஸ் கேவாவுடைய புனித பிணத்தைத் தன்னோடு எடுத்துச் செல்லத் தீர்மானித்தான். அப்போதுதான் அவளுடைய பெரும் விசுவாசம் வெளித்தெரிந்தது.

''முப்பது குதிரைகள் அவளுடைய சவப்பெட்டியை இழுக்க முயன்றன, ஆனால் அது நகரவில்லை. அவ்வளவு பயனற்றக் காரியத்தைக் கண்ட அரசன் சொன்னான்: 'உங்களுடைய புனித பெண்ணின் எடைக்கு வேண்டிய தங்கம் எனக்குக் கொண்டுவாருங் கள், அவளை இங்கேயே நான் விட்டு விடுவேன்.'

''தங்களிடமிருந்த எல்லாத் தங்கத்தையும் நகரமக்கள் கொண்டு வந்து, ஒரு தட்டில் பிணத்தையும், மறு தட்டில் தங்கத்தையும் வைத்து திராசில் நிறுக்கத் தொடங்கினார்கள். ஆனால் தங்கம் சமநிலையில் இல்லாமல் சாய்ந்து கொண்டே போனது. தங்கத்தில் ஓரளவு எடுத்தார்கள், ஆனால் இன்னமும் அது திராசில் சாய்ந்து நின்றது! ஆகவே கடைசியில் பதினைந்து தங்கக் காசுகள் மட்டும் இருக்கும் வரைத் தொடர்ந்து எடுத்துக் கொண்டே இருந்தார்கள். அதனால் அவர்கள் முற்றுகையாளர்களுக்குப் பணம் கொடுத்த தோடு கொள்ளையினின்றும் காப்பாற்றினார்கள்.

''ஆகா, என்ன அருமையான கதை! உருவச்சிலையின் ஓரங்களின் நெடுகிலும் பரஸ்கேவாவின் வாழ்க்கையிலிருந்து காட்சிகளை வரைய முயல், எகோரி. பிறகு அதைப் பார்க்கக்கூடிய எவரும் ஒரு புத்தகத் தில் உள்ளது போல அவளைப் பற்றிப் படிக்க முடியும்.''

எகோரி தீர எண்ணிப்பார்த்தான். எத்தகைய கடினமான பணி யை நிகதீம் அவனுக்குத் தந்துவிட்டார்! மேலும், அதை அவர் தந்துவிட்டால், எகோரியால் அதைச் செய்ய முடியும் என்று நம்பி னார்.

முதலாவதாக, உருவச்சிலை ஓரங்களைப் பதினாறு சதுரங்களாகப்

பிரித்தான். பிறகு இடது மேற்பக்க மூலையிலிருந்து ஆரம்பித்து, சதுரங்களில் பரஸ்கேவாவினுடைய வாழ்க்கைக் கதையை அவன் வரையத் தொடங்கினான். அது மிக நுண்ணிய, சிக்கலான சித்திரம், தனது அருமையான தூரிகையை அவன் பயன்படுத்தினான். ஸர் ஸேனியர்கள் நகரத்திற்குள்ளாக உடைத்துக் கொண்டு வந்த நிகழ்ச்சிக்கு அவன் வந்த போது, வீடுவாசல்களில் இருந்த வீடுகள் எப்படி எரிக்கப்பட்டன, தீ சுவாலைகளிலும் புகையிலும் மக்கள் அச்சமுற்று வெளியேறியது எப்படி, நாடோடி இனத்தினர் குதிரை களால் மக்களை எப்படி மிதித்துத் துவைத்தனர், கொடுவாள்களால் அவர்களை எப்படித் துன்பத்திற்கு ஆட்படுத்தினர் என்பதை நினைவு கூர்ந்தான். உள்ளது மாதிரியே எல்லாவற்றையும் அவன் நினைத்துப் பார்த்தான். அது போலவே அவன் வரைந்தான்.

கலைஞர்கள் அவனைச் சுற்றிலும் நின்றனர், நிகதீம் சிந்தனை யோடு தனது தாடியைத் தடவிவிட்டார்.

''நீ அதைக் கற்பனை செய்து விட்டாய், எகோரி,'' என்றார். ''புனிதர்களுடைய வாழ்க்கைக் கதைகளில் அதுபோல எதுவுமே இல்லை.''

''எதார்த்தத்தில் எப்படி இருந்ததோ அது போல இருக்கி றது,'' என்று எகோரி அமைதியாக, ஆனால் உறுதியுடன் பதிலளித் தான்.

''ஆமாம், அதை என்னால் காண முடிகிறது, ஏனெனில் நிகழ்ச்சியை நீ பார்த்தது போலவே வரைந்திருக்கிறாய். ஆனால் சர்ச் அத்தகைய விநயமின்மையை விரும்புவதில்லை. பழைய மரபுகளின் படி எல்லாம் இருக்க வேண்டும் என்று சமய குருக்கள் கோருகிறார்கள். நமக்குச் செம்மையாகக் கிடைத்தது, இளைஞர்களே! ஆனால், எதையாவது புதிதாக வரையாமல், எல்லா நேரத்திலும் வரைபடப்படியிலிருந்து குருட்டுத்தனமாகப் பிரதி மட்டுமே எடுத்தால், நாம் என்ன மாதிரி யான கலைஞர்களாக இருப்போம்?.. எப்படிப் பார்த்தாலும், சர்ச்சு கள் எல்லாம் வித்தியாசமானவை, இல்லையா? ஒன்று போல இருக்கக் கூடிய மற்றொன்று ஒருபோதும் இருக்காது. ஒரே மாதிரி யான உருவச்சிலைகளாக அவற்றை அலங்கரிப்பது நமக்கு ஒரு பாவ மாக இருக்கும்.''

''நீங்க பயப்படலையா?'' எச்சரிக்கை மிகுந்த லுகா கேட்டான். ''சமயபேதிகள் எத்தனை பேர் உயிருடன் கொளுத்தப்பட்டார்கள் என்பதை நீங்க கேள்விப்பட்டிருக்கீங்களா?''

''ஆமாம், நான் கேள்விப்பட்டிருக்கேன்,'' நிகதீம் அமைதியாகப் பதிலளித்தார். ''ஆனா முதலாவது புத்தகங்களை அச்சிட்டவரான இவான் ஃபியோதரவைத் தொடவில்லை. ஆகவே அந்த ஆபத் திலிருந்து நம்மைத் தடுத்துக் கொள்ளலாம்.''

அக்கணத்தில் கதவு அகலத்திறந்து, கிழிந்த சட்டை அணிந்த ஒரு மனிதன் விரைந்து உள்ளே வந்தான். அவனது தலையில் குருதி

இருந்தது, கண்களில் நடுக்கம் இருந்தது, செத்தவனைப் போல வெளிறிப் போயிருந்தான்.

''என்னைக் காப்பாத்துங்கள், நல்லவர்களே,'' என்று கரகரப் பாக மூச்சுத்திணறினான். ''என்னை ஒளித்து வையுங்கள், கடவுளின் அன்புக்காக!''

''நீ யார்?'' நிகதீம் கண்டிப்போடு கேட்டார். ''நீ இரவுத் திருடனில்லையே?''

''நான் திருடனில்லே. ஜாரினுடைய ஆட்கள் என்னைப் பின் தொடர்ந்து வாராங்க!''

உண்மையாகவே தெருவில் குதிரைகளின் குளம்பொலிகளும் ஆட்கள் கத்துவதும் கேட்டன.

''உன்னை எங்கே வைக்க முடியும்?'' கிளர்ச்சியோடு நிகதீம் கத்தினார். ''இங்கே ஒளிவதற்கு எந்த இடமும் இல்லை!''

எகோரி அந்த மனிதனுடைய கையைப் பற்றி, வேலைக்கான பொருள்கள் குவிந்து கிடந்த மூலைக்கு அவனை விரைவாக இழுத்துச் சென்றான்.

''உன் கண்களை மூடு, சீக்கிரம்!'' என்று அவன் கட்டளையிட்டு, கைநிறையச் சுண்ணாம்பை வாரி எடுத்து அவனை அடையாளங் காண முடியாது போகும் வரை அவனது முகத்திலும், உடையிலும் அதைத் தெளித்தான்.

''இதோ பட்டை,'' என எகோரி அவனை அவசரப் படுத்தினான். ''அதை வெள்ளையடித்துக் கொண்டிருப்பது போல சுவருக்கு மேலாகத் தேய்ச்சுக்கிட்டிரு.''

ஜாரினுடைய ஆட்கள் ஏற்கெனவே திறந்த கதவின் வழியே உள்ளே நுழைந்து விட்டிருந்தார்கள்.

''நில்லுங்க, புறச்சமயிகளே!'' என்று நிகதீம், கவிமாடத்திற்குக் கீழிருந்து எதிரொலிக்கின்ற அளவுக்கு உரக்கக் கத்தினார். ''ஆயுந் தரித்து இந்தப் புனித இடத்திற்குள் நுழைய எவ்வளவு துணிச்சல் உங்களுக்கு! சபிக்கப் போகிறேன்!''

''நிறுத்து, கிழட்டுப் பிண்டமே! உன் வாயை மூடு!'' அவர்கள் எதிர்த்துச் சொன்னார்கள், ஆனால் எப்படியிருந்தாலும் பின்னுக்கு நகர்ந்தார்கள். ''அந்தப் புறங்காட்டியை எங்கே ஒளித்து வைத்திருக்கிறாய் என்பதை எங்களிடம் சொல்.''

''எந்தப் புறங்காட்டியையும் நான் காணவில்லை. அவன் இங்கே எங்கே ஒளிய முடியும்? இந்தச் சர்ச்சில் இரகசிய அறைகளோ நில வறைகளோ கிடையாது.''

''அவன் எங்கே போய்த் தொலைந்தானோ?'' பொறுப்பில் இருந்த இளம் இராணுவவீரன் நம்பவில்லை.

''எனக்குத் தெரியாது, என்னால் சொல்ல முடியாது. அது உங்களுடைய பொறுப்பு, இளைஞர்களே. எங்களுக்குரியதே நிறைய இருக்கிறது.''

‘‘ஆமாம், உங்களது பொறுப்புகளை நான் காண முடிகிறது. சுவர்கள் வெறுமையாக இருக்கின்றன, ஆனால் நீங்கள் வர்ணத்தில் நிரப்பிவிட்டீர்கள்!’’ புறங்காட்டியைச் சுட்டிக்காட்டி தலைமைக் காவல்காரன் நகைத்தான்.

‘‘அந்த மரமண்டையை எப்போதோ களைந்தெறியக் கருதிக் கொண்டிருக்கிறேன்,’’ நிகதீம் கோபமாகச் சொன்னார். ‘‘ஆனால் அது போன்ற ஒரு மட்டி யாருக்குத் தேவை? ஒருவேளை நீங்க அவனைக் கூட்டிப் போகலாம்?’’

‘‘உள்ளபடியே எங்களிடமுள்ள மரமண்டைகளோடு என்ன செய்வதென்று தெரியவில்லை!’’ காவல்காரர்கள் கொக்கரித்தபடி, சர்ச்சை விட்டு ஓடினார்கள்.

நிகதீம் ஆற்றலின்றி பெஞ்சின் மீது சாய்ந்தார்.

‘‘அந்த ஆபத்திலிருந்து நம்மைத் தடுத்துக் கொண்டது போலக் காணப்படுது,’’ என்றார். ‘‘கிழட்டு நரிபோல நீ ஒரு தந்திரமாவன், எகோரி! அதைப் பற்றி நான் ஒருபோதும் சிந்திக்கவே இல்லை. அதோ அங்கே, நல்லவனே! இங்கே வா! பயப்பட வேணாம், பட்டையைக் கீழே போடு. அந்த ஓநாய்கள் எதுக்காக உன்னைப் பின் தொடர்ந்தன என்பதைச் சொல். நீ என்ன செய்தாய்?’’

‘‘நான் செய்ததெல்லாம் நோவ்கரதில் ஒரு பிரபுவுடைய செயல் முகவராக வேலை செய்து கொண்டிருந்தான்,’’ என்று அந்த மனிதன் பதிலளித்தான், உடல் முழுக்க நடுங்கிக் கொண்டிருக்க, அவனுடைய கண்கள் அங்குமிங்கும் அலைந்தன. ‘‘திருவிழாவிற்காக எங்களிடம் ஜார் தான் தன்னுடைய துப்பாக்கி வீரர்களுடனும், பிரபுகளுடனும், ஆள்களுடனும் வந்தார். சிலுவைகளுடனும், அற்புதங்கள் புரியும் உருவச்சிலைகளுடனும் ஆர்ச்பிஷப் பீமென் அவரைச் சந்தித்தார். ஆனால் சிலுவை வரை ஜார் போகவில்லை. மாறாகப் பெருங் கோபத்தோடு அவர் பீமெனைத் திட்டத் தொடங்கினார். ‘நீ, சண்டாளனே, உனது கைகளில் சிலுவையல்ல, ஆனால் ஒரு கூர்மையான வாளை வைத்திருக்கிறாய், அந்த வாளினால் எனது இதயத்தைக் குத்திக் கிழி, மேலும் நமது அரசை லிதுவேனியா அரசரிடம் ஒப்படைக்க விரும்புகிறாய். இது முதற்கொண்டு நீ பிஷப் இல்லை, ஆனால் ஓர் ஓநாய், ஒரு கொள்ளைக்காரன், ஒரு நாசகாரன்!’

‘‘எல்லாச் சர்ச்சுகளையும் கொள்ளையடித்து, கஜானாவையும், அற்புதங்கள் புரியும் பண்டைய கிரேக்க உருவச்சிலைகளையும், தங்கத்தாலான சமய உடுப்புகளையும், மணிகளையும் கூட எடுக்க அவர் நேரடியாகக் கட்டளையிட்டார். பிறகு அவர் விசாரணை செய்ய ஆரம்பித்து நோவ்கரதின் பிரபுகள், அவர்களுடைய மனைவிகள் குழந்தைகளுடன் அவருக்கு முன் கொண்டுவரப்பட்டு சித்திரவதை செய்யப்பட வேண்டும் என உத்தரவிட்டார். இன்றைய நாள் வரையில் அவர்களுடைய அழுகுரல்களை நான் கேட்க

முடிகிறது. விலங்குகள்! அருவருப்பான விலங்குகள்!'' செயல்முகவருடைய குரல் கிறீச்சிடும் அளவுக்கு உயர்ந்து, பயங்கரமாகத் தேம்பி அழுதான். வெறி பிடித்தது போல, தரையில் விழுந்து சுற்றிலும் உருண்டான். கலைஞர்கள் அச்சத்தால் கல்லாய் விறைத்துப் போனார்கள்.

''தண்ணீரைக் குடி, அருமை நண்பனே,'' கதறி அழுதார் நிகதீம். ''ஏன் உன்னை நீயே இந்தளவு வேதனைப்படுத்திக் கொள்கிறாய், என் மகனே?''

அவர்கள் அவனுக்குக் கொஞ்சம் தண்ணீர் கொடுத்தார்கள், ஆனால் அவனுடைய கைகள் அந்தளவு பயங்கரமாக நடுங்கிக் கொண்டிருந்ததால், அதைத் தனது வாய் வரை கூட அவனால் உயர்த்த முடியாது, சட்டையில் சிந்தி விட்டான்.

''பிறகு ஜார் உயிரோடு எஞ்சிய அனைவரையும் தனக்கு முன்னால் கொண்டுவரச்சொல்லி, அவர்களைப் பார்த்துச் சாந்தமாகப் பேசினார்: 'சிந்திய எல்லா ரத்தமும் துரோகி பீமெனின் தலையில் விழும். நீங்கள் எதைப் பற்றியும் புலம்பாது நன்றியுடன் வாழுங்கள்.' மேலும் அவர்களை எல்லாம் அவர் போகவிட்டார், ஆனால் பீமெனையும் பாதிரியார்களையும், என்னைப் போல வெறுப்புக்குரியவர்கள் அனைவரையும் பிடித்து மாஸ்கோவுக்குக் கொண்டுவந்து, தலைகளைச் சீவ, மற்றவர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாகக் கட்டளையிட்டார். ஆனால் ஏதோ அதிசயத்தால் நான் தப்பித்தேன்...''

அந்த அற்ப ஆத்மா தனது பயங்கரமான கதையை முடித்து, கைகளால் தலையைப் பற்றி, அமைதியானான்.

''இப்போது நீ எங்கே போவாய், நண்பனே?'' நிகதீம் அவனைத் தழுவினார்.

''வோல்காவுக்கு அப்பாலுள்ள ஸ்டெப்பிக்கு நான் விரைந்து போவேன்,'' துயரமாக அம்மனிதன் பதிலளித்தான். ''அனைத்து ருஷ்யாவிலுமிருந்து புறங்காட்டிகள் அங்கே தஞ்சம் அடைந்திருப்பதாக நான் கேள்விப்பட்டேன்.''

ஒவ்வொரு கலைஞர்களும் தங்களால் முடிந்த அளவுக்கு அவனுக்காகச் சிறிது உணவும் உடையும் கொடுத்தார்கள். அவன் அவர்களுக்குத் தலை வணங்கி இரவுக்குள்ளாக நடந்து சென்றான்.

* * *

உருவச்சிலைகளில் முகங்களை அவர்கள் வர்ணந்தீட்டி முடித்துவிட்டார்கள். இப்போது அவை விளக்கமாகத் தெரியுமாறு செய்ய வேண்டி இருந்தது. முன்பிதுங்கிக் கொண்டிருந்த எல்லாப் பாகங்களும்: தாடைகளும், முகக்கட்டைகளும், நெற்றிகளும், விரல் நுனிகளும், துணி மடிப்புகளும் மெல்லிய வெண்ணிறக் கோடுகளால் புள்ளிகளிடப்பட்டன, தட்டையான பலகைகள் ஆழங்கொண்டவை



யாயின. கடைசி முறையாக நிகதீம் எல்லாவற்றையும் கவனமாகச் சோதித்து, தேவையான திருத்தங்கள் செய்தார், பிறகு தானாகவே சிலுவை வைத்துக்கொண்டு சொன்னார்: ''அவ்வளவுதான், இளைஞர் களே. கடவுளுடைய உதவியால் திரைத்தட்டியை நாம் முடித்து விட்டோம். நமக்கு வெட்கப்படுவதற்கு எதுவும் இல்லை, ஹூம்? இப்போது உருவச்சிலைகள் மெருகெண்ணெய் பூசப்பட வேண்டும். நீ, எகோரி, என்னுடன் வா.''

பிரகாரத்தில் இருந்த ஒரு கொட்டகைக்கு அவனை அழைத்துச் சென்று கதவைத் தாழ்ப்பாளிட்டார், பிறகு உடுப்பிலிருந்து ஒரு சிறிய கித்தான் பையை எடுத்தார்.

''என்ன அது, பெரியவர் நிகதீம்?''

''எனது அருமை மாணவனாகிய உனக்கு மட்டுமே இந்த ரகசியத் தைச் சொல்லப் போகிறேன்,'' என்று கிழவர் கிசுகிசுத்தார். ''ஆனால் சிலுவையின் மீது சத்தியம் செய், இந்த ரகசியத்தை உன்னுடன் கல்லறைக்கு எடுத்துச்செல்ல மாட்டாய் என்றும், ஆனால் மற் றொரு கலைஞனுக்கு இதை வழங்குவாய் என்றும்.''

''நான் சத்தியம் செய்கிறேன்,'' சிலுவையை முத்தமிட்டு பயபக்தி யோடு எகோரி சொன்னான்.

நிகதீம் பையைக் கட்டவிழ்த்து, மேசையின் மீது ஏதோ சிறிய மஞ்சள் நிறக் கற்களைக் கொட்டினார்.

''இது அம்பர், ஓர் இரத்தினக் கல்,'' என்று கிசுகிசுத்தார். ''ஓர் உரலில் வைத்துப் பொடி செய்து அதை மெருகெண்ணெய்யுடன் கல. அது மெருகெண்ணெய்யை மின்னச் செய்யும்.''

எகோரி இவ்வாறாகச் செய்தான். கற்களைப் பொடியாக்கி அந்த மினுமினுக்கும் பொடியை மெருகெண்ணெய்யில் தூவினான். தங்கச் சுவாலைகள் அதில் ஒளிவிடத் தொடங்கின போலக் காணப்பட்டது!

அவர்கள் சர்ச்சுக்குத் திரும்பச் சென்று, மேசைகளின் மீது கிடந்த எல்லா உருவச்சிலைகளையும் இந்த ரகசிய மெருகெண்ணெய்யின் கணமான அடுக்கால் மூடினார்கள். பளபளப்பான மெருகெண் ணெய்க்குக் கீழாக வர்ணங்கள் நூறு மடங்கு பிரகாசமாக மின்னின, அதற்குள்ளாகச் சூரிய ஒளி பளிச்சிட்டது போல!

சுற்றிலும் நின்ற கலைஞர்கள் அமைதியாக உருவச்சிலைகளைப் பார்த்து மகிழ்ந்தார்கள்.

''ஏன் இவ்வளவு அமைதியாக இருக்கிறீர்கள்?'' என்று நிகதீம் கேட்டார். ''அவற்றிற்குப் பிரியாவிடை சொல்லிக் கொண்டிருக் கிறீர்களா? அது சரி, இப்போது நமது உருவச்சிலைகள் தங்களது சொந்த வாழ்க்கையைத் தொடங்குகின்றன. நான் அவற்றுக்கு பிரியாவிடை கொடுக்கிறேன், எனது குழந்தைகளைப் போல. ஒரே ஆறுதல், இந்த அழகு மக்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும். இப் போது, லுகா, கலைஞர்களுக்குக் கொஞ்சம் மகிழ்ச்சி தருவதற்கு இது தான் நேரம். ஆறு மாதங்களுக்கான அவர்களுடைய ஊதியத்தை

அவர்களுக்குக் கொடு, ஒவ்வொருவரது வேலைக்கும் ஏற்ப.''

லுகா ஒவ்வொருவரையும் சரக்கறைக்குள்ளாகக் கூட்டிச் சென்றான், யார் என்ன செய்தார்கள் என்பதைக் குறித்து வைத்திருக்கின்ற கனத்த பேரேடு ஒன்றை வெளியே எடுத்து, சம்பளம் கொடுக்கத் தொடங்கினான். பயிற்சியாளர்கள் ஒரு பூட்* ரை மாவும் ஓட்சும் பெற்றார்கள். கலைஞர்கள் இரண்டு பூட் மாவும், இரண்டு பீப்பாய்ப் பீரும், ஒரு பீப்பாய்த் தேனும் பெற்றார்கள். மிகவும் திறமை பெற்றக் கலைஞர்கள் கூடுதலாக அரை பூட் உப்புப் பெற்றார்கள். அவர்களிடையே எகோரி இருந்தான்.

* * *

தங்களுடைய பண்ணை வீடுகளுக்குச் சென்று உதவும் காய்கறித் தோட்டத்தை உழவும், வீட்டைப் பழுதுதிருத்தவும், தங்களது குடும்பத்துடன் வெறுமனே நேரத்தைச் செலவிடவும் ஆட்கள் எல்லாருக்கும் நிகதீம் மூன்று நாள் ஓய்வு கொடுத்தார். அதே வேளை அவர் ஆற்றலின்றி படுக்கையில் விழுந்தார். இப்போது நிறைவேற்றப் பட்ட வேலை அவருடைய எல்லா வலிமையையும் உறிஞ்சிக் கொண்டது போல இருந்தது, அவரது களைப்புற்ற ஆன்மா மட்டுமே எஞ்சி நின்றது.



செய்ய எதுவுமன்றி சோர்வுற்ற எகோரி, காட்டின் புத்தம் புது காற்றைச் சுவாசிக்க ஆற்றுக்கு அப்பால் சென்றான்.

மாஸ்கோ நதிக்கு அப்பால் எத்தனை பசுமையான அமைதி! வான உச்சிவரை பெரும் அமைதி உலகத்தை நிறைத்து நின்றது. வெகு தொலைவுக்கு அப்பால் விரிந்த நகரம் தனது சுவர்களுடனும், வேலிகளுடனும், கட்டுறுதி வாய்ந்த நுழைவாயில்களுடனும் பின்னே விலகியது. வெறியும் குருதித் தாகமும் கொண்ட ஜார், ஒருபோதும் இருந்ததில்லை என்பது போலப் போய்விட்டார், கவலைக்கிடமான சிந்தனைகளும் போய்விட்டன.

எகோரி தன்னந்தனிமையில் நீல வெளியில் நின்று, குழந்தைப் பருவத்தில் மட்டுமே இருக்கக் கூடிய எளிமையான மகிழ்ச்சியை உணர்ந்தான்.

அங்குமிங்கும் சூரிய ஒளிக் கீற்றுத் தெரிந்த குன்றுகளில் பிரகாசமான மஞ்சள் நிற பூக்கள் இருந்தன. புத்தம் புது பசும் இலைகளுடன் இருந்த பிர்ச் மரங்கள் தொலைவில் குழந்தைகளுடைய சுருள்முடித் தலைகளைப் போலக் காணப்பட்டன.

திடீரென்று உயரே வானத்தில் கணீரென்ற ஓடை சலசலத்ததைப் போல சத்தத்தை எகோரி கேட்டான். காட்டு வெளிக்குள்ளாக ஓடி மேலே உற்றுப்பார்த்தான்: நீலவானின் குறுக்காக வெண்

* பூட் — 36 பவுண்டுள்ள ருஷ்ய எடையளவு. (ப-ர்.)

மேகங்களுக்குக் கீழே அன்னப் பறவைகள் மாஸ்கோ பக்கமிருந்து நீங்கிக் கொண்டிருந்தன! அவற்றினுடைய கனத்த வெண்ணிற இறக்கைகள் ஏற்கெனவே அவனுடைய தலைக்கு மேலாக அடித்துக் கொண்டிருந்தன, கடைசியில் சென்ற ஓர் அன்னம் தலையைத் திருப்பி, எகோரியைப் பார்த்து ஒரு நண்பனைப் போல அவனுக்குக் கத்தியது.

தனது அன்புக்குரிய வீடுவாசல்களுக்கு அவற்றோடு பறந்து செல்ல அவன் எவ்வளவு ஏங்கினான்! அங்கே பாட்டியும், மனைவியும் குழந்தைகளும் மற்றும் ஆண்பூனை திரென்தியும் அவனுக்காகக் காத்துக் கொண்டிருந்தனர், அங்கே அவனது குழந்தைப் பருவத்திலிருந்து விரும்பிய பூக்களும், நறு மணமுள்ள கசகசாப் பூக்களும் பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்தன; அங்கே வெதுவெதுப்பான இரவுகளில் ஆற்றில் கடற்கன்னிகள் நீரைச் சலசலக்க வைத்தனர், ஒரு நொண்டிப் பூதம் பைன் மரக்காட்டில் பொந்தில் புலம்பியது. வீட்டில் அடுப்புக்குப் பின்னே ஒரு சிறிய வீட்டுப் பூதம் வசித்தது, இரவுகளில் சேட்டை பண்ணி கரண்டிகளையும், நூற்புக்கதிர்களையும் மறைத்து வைக்கும், அதைப் பிடித்து மேசைக் காலைச் சுற்றி தாடியைத் திருகவில்லை என்றால் அவற்றை ஒருபோதும் திருப்பித் தராது.



மேலும் பேத்கா எனும் சேவல் எத்தகையது! அது ஒருபோதும் வேலியில் கூவாது, கூரையில் மட்டுமே. உத்தரத்தின் நுனி விளிம்பில் நின்று முழு பலத்துடன் கூவும், பிறகு தனது பெரிய இறக்கைகளை விரித்து ஒரு கழுகைப் போலத் தரைக்குப் பறக்கும், அதனுடைய பச்சை மற்றும் சிவப்புச் சிறகுகளுடன் சூரிய ஒளியில், புராணத்தில் வரும் சீரின் பறவை போல மினுமினுக்கும். ஒருவேளை அதுவே கூட உண்மையில் ஒரு சீரின் பறவையாக இருந்து, ஒரு மந்திர உச்சரிப்பால் சேவலாக மாறியிருக்கலாம்?

வீடுவாசல்கள், எனது அருமை வீடுவாசல்கள்!

* * *

வெள்ளை அன்னங்களைப் பார்த்த அன்றே மாஸ்கோவை விட்டு நீங்கி வீட்டுக்குச் செல்வதென்று எகோரி தீர்மானித்தான். ஆனால் முதலில் அவர்கள் சர்ச் சுவர்களில் ஓவியங்களால் வர்ணந்தீட்ட வேண்டியிருந்தது. இடையில் •வேலையை நிறுத்துவது கூடாது, நிகதீமையும் மற்றவர்களையும் கைவிட முடியாது.

லுகாவுடன் பயிற்சியாளர்கள், வியாபார மையங்களில் வேலைக்குத் தேவையான எல்லாவற்றையும் வாங்கி முற்றத்திற்கு வண்டியில் கொண்டுவந்து விட்டார்கள். மேலும் பத்தாண்டுக் காலப் பழமை மிக்க சுண்ணாம்பை 150 பீப்பாய்களில், அப்பால் தொலைவிலுள்ள ரஸ்தோவ் வியாபாரிகள் விநியோகம் செய்திருந்தார்கள்.

உரிய நேரத்தில், ஐந்து வாரங்களுக்கு முன்னமேயே, அவர்கள் மென் சணலை ஊறப் போட்டு, நாரிழைகளாக இடித்துப் போட்டிருந் தார்கள், இப்போது அதைக் கொத்துகளாக மடக்கி சிறிதாக நறுக்கினார்கள். சுண்ணாம்பு மட்டிப்பூச்சு சணல் இல்லாது வெடிக் கும்.

அதே நேரத்தில் முற்றத்தில் பெரிய குழிகளில் அவர்கள் சுண் ணாம்பை நீருடனும் மணலுடனும் மென்சணலுடனும் கலந்து, அதை ஒவ்வொரு நாளும் மர மண்வாரியால் கலக்கினார்கள்.

நிகதீம் கலைஞர்களுக்கிடையே வேலையைப் பங்கீடு செய்தார்.

''மிரோன்! கிரீஷ்காவையும், அந்திரியூஷ்காவையும் அழைத்துக் கொண்டு குவிமாடம் வரை சாரக்கட்டு போடு. அது வலுவா இருக் கிறதான்னு பார்த்துக் கொள். யாராவது கீழே விழுந்தால் எந்தக் கருணையும் எதிர்பார்க்காதே.''

''அவர் சொல்வதைக் கேளுங்கள்,'' மிரோன் முணுமுணுத்தான். ''உள்ளபடியே நான் வேலையை இரண்டாக்கிக் கொண்டு செல் கிறேன், அவரோ இன்னும் அதிகம் எதிர்பார்க்கிறார்.''

''எகோரி, நீ, இஸ்தோமா மற்றும் நிகீஃபருடன் மர ஆணிகளை எடுத்துக் கொள், ஒவ்வொன்னுக்கும் நன்கு இடைவெளி விட்டு செங்கல்களுக்கு இடையே அறை. கொண்டைகள் சுவரிலிருந்து இரண்டு விரல் அளவுக்கு இருக்குமாறு உறுதிப்படுத்திக் கொள்.''

''ஏன் அது, இஸ்தோமா?'' எகோரி அமைதியாகக் கேட்டான்.

''ஏனெனில் சுவரை விட்டு மட்டிப்பூச்சி கீழே வரக் கூடாது.''

கடைசியாக ஒரு வாரத்திற்குப் பிறகு, குழிகளில் மட்டிப்பூச்சி தயாரான போது, குவிமாடம் வரை சாரக்கட்டு கட்டி முடிந்த போது, குளியல் வீட்டில் தங்களுடைய பாவங்கள் அனைத்தையும் கழுவிவிட்டுச் சர்ச்சுக்குத் தூய ஆடைகளுடன் வருமாறு நிகதீம் திரும்பவும் அவர்களுக்குக் கட்டளையிட்டார்.

காலையில், அவர்கள் எல்லாரும் சர்ச்சில் கூடியிருந்த போது, நிகதீம் ஒரு பிரார்த்தனை கூறி, அவர்களிடம் பயபக்தியோடு பேசி னார்: ''இப்போது, கடவுளுடைய உதவியால், மட்டிப்பூச்சியை வைக்கத் தொடங்குங்கள். முதலில் நீரால் சுவரைக் கழுவ மறந்துற வேணாம், அல்லது அது ஒட்டிக் கொள்ளாது.''

ஆகவே கலைஞர்கள் சுவரை உச்சியிலிருந்து அகப்பைகளால் நீரை ஊற்றிக் கழுவத் தொடங்கி, மட்டிப்பூச்சியைக் கனத்த அடுக்காக வைத்து, இரும்புக் கொத்துக் கரண்டிகளால் அதை நன்கு பளபளப்பாக்கினார்கள். முதலாவது அடுக்குக் காய்ந்த போது, வர்ணம் கலக்கப்பட வேண்டும் என்று நிகதீம் கட்டளையிட் டார்.

அவர்கள் காய்ந்த வர்ணங்களை நீருடனும், முட்டை மஞ்சள் கருவுடனும் பெரிய வழவழப்பான கற்களின் மீது வைத்துக் கலந்து பலமணி நேரங்களுக்குக் குழைத்தார்கள்.





மூன்றாம் நாள் நிகதீம் குவிமாடத்தின் உச்சிக்குள்ளாக ஏறிக் கத்தினார்: ''மட்டிப்பூச்சு மூன்று தொட்டிகளை இங்கே மேலே கொண்டுவாங்க! மேலும் ஒழுங்கா நடந்து வாங்க, ஏனென்றால் மிரோன் போட்ட சாரக்கட்டு ஆட்டம் போடுகிறது.''

''அது ஒழுங்காத்தானே தொங்குகிறது!'' மிரோன் எதிர்த்து பேசினான்.

''பசு மீது வைத்த சேணத்தைப் போல,'' லுகா கோபமாக முறுமுறுத்தான். ''நீ ஒதுங்கிக் கொள்.''

கனத்த தொட்டிகளை அவர்கள் உச்சிக்கு இழுத்தார்கள்.

''இரண்டாவது அடுக்கை மெல்லியதாக வைய்யுங்கள், எனது உயரத்தைப் போல இரு மடங்கு, மேற்கொண்டு வேண்டாம்.''

''ஏன் அத்தனை சிறியதாக?'' எகோரி வியப்புற்றான்.

''ஏனென்றால் அது இன்னமும் ஈரமாக இருக்கும் போது தான் அதன் மீது வர்ணந்தீட்ட முடியும். வர்ணம் சுண்ணாம்புடன் சேர்ந்து அங்கே எப்போதுமே நிலைக்கும். ஆகவே உன்னால் எவ்வளவு வர்ணந்தீட்ட முடியுமோ அவ்வளவு மட்டிப்பூச்சியை வை. நீ காய்ந்த மட்டிப்பூச்சியின் மீது வர்ணந்தீட்டினால், எல்லாமே கீழே விழுந்துவிடும்.''

அவர்கள் குவிமாடத்தை மட்டிப்பூச்சியால் மூடி ஆட்டுத் தோலால் துலக்கமாகப் பளபளப்பாக்கியவுடனேயே, நிகதீம் வரையத் தொடங்கினார். துணிச்சலாகவும், விரைவாகவும் கிறிஸ்துவின் முகத்தின் வெளிவரையறையை ஒரே மெல்லிய கோடால் சிவப்பு வர்ணத்தால் வரைந்தார்.

''வெளிவரையறையைக் கத்தியால் சுரண்டு, எகோரி. தூண் போல நிற்காதே, அது காய்ந்து போகும்! பகல் உணவுக்குள்ளாக அது வர்ணந்தீட்டப்பட வேண்டும்,'' நிகதீம் விரைவுபடுத்தினார்.

எகோரி அப்பமாவைப் போல மென்மையான மட்டிப்பூச்சில் ஓவியத்தின் நெடுகிலும் கோடுகளை வெட்டினான், அதே வேளை நிகதீம் முகத்திற்காகவும் கைகளுக்காகவும் பச்சைப் பழுப்பு வர்ணாத்தைக் கலந்தார்.

''முகம் மிகவும் கும்மென்று போய்விடாதா?'' எகோரி எச்சரிக்கையோடு கேட்டான்.

''பிறகு நான் அதைக் காவியாலும் வெள்ளையாலும் வெளிச்சமாக்குவேன்! சுவரோவியத்தில் எப்பொழுதுமே நீ கருமையிலிருந்து வெளிச்சத்திற்குப் போக வேண்டும் என்பதை நினைவில் கொள். உண்மையான வாழ்க்கையில் உள்ளது போல இருந்தால் மட்டுமே,'' ஒரு பெருமூச்சுவிட்டு அவர் மேலும் சொன்னார், ''கருத்தது குறைவாகவும், பிரகாசமானது அதிகமாகவும் இருக்கும். நோவ்கரத்திற்கு ஜார் செய்ததை என்னால் மறக்க முடியாது. நாகரிகமற்ற நாடோடிகள் கூட அவ்வளவு கடூரமானவர்கள் அன்று.''

இந்த வாக்கியத்தின் கீழாகக் கோடு வரைவது போல அவர்

கடைசி முறையாகத் தூரிகையை அலைத்து பக்கத்தில் நகர்ந்தார். சுவரிலிருந்து எகோரியை நோக்கி அத்தகைய பயங்கரமான கண்கள், கறுத்தும் ஆவேசமும் கொண்டவை, உற்றுப் பார்த்ததனால் அவன் குழப்பத்துடன் பின்னுக்கு நகர்ந்தான்.

* * *

அந்த வெப்பமான கோடை முழுக்கக் கலைஞர்கள் சர்ச்சின் உயர்ந்த குளுமையான சுவர்களையும், வளைவான மண்டப விமானங்களையும், மேல் வளைவுகளையும், மண்டபக் குவிகால்களையும் வர்ணந்தீட்டினார்கள்.

ஓர் இரவில் நிகதீம் மெழுகுவர்த்தியுடன் அவருக்கு மட்டுமே தெரிந்த, சுவர்க்கோலங்கள் வரைந்திருந்த சுவர்களில் நீல, வெளிர் சிவப்பு மற்றும் இளஞ்சிவப்பு உடுப்புகள் அணிந்த வருத்தந்தோய்ந்த தேவதைகள் தோன்றினார்கள். அவர்கள் தனித்து நிற்கவில்லை, ஆனால் அவர்களுடைய பாதுகாப்பின் கீழ் உழுத, விதைத்த, அறுத்த சாதாரண மக்களோடு இரண்டறக் கலந்திருந்தார்கள்.

பலிபீடத்திற்கு எதிரே இருந்த மிகப் பெரிய சுவரில், அந்த இரவில் ஒரு மெழுகுவத்தியினால் நிகதீம் யாரையோ சீற்றத்தோடு எங்கே தாக்கினாரோ, அங்கே 'கடைசித் தீர்ப்புக்' கருஞ்சிவப்பு நெருப்புடன் ஒளிவீசியது.

இந்தச் சுவரைப் பார்ப்பது பயங்கரமானதாக இருந்தது. கருப்புப் பிசாசுகள் இரும்புக் கொக்கிகளால் அச்சத்துடனும் வலியுடனும் அலறிக் கொண்டிருந்த பாவிகளைச் சைத்தானிடமே இழுத்து வந்தன. குருதிச்சிவப்பான முரட்டுக் கண்கள் கொண்ட சைத்தான் கூரிய வளைநகங்களால் அவர்களைப் பற்றிப் பிடித்துத் தனது குருதி படிந்த வாய்க்குள்ளாக வீசியதைக் கண்டதும் உடம்பு சில்லிட்டது.



எகோரியை மாஸ்கோவுக்கு அழைத்து வந்த சில்லறை வியாபாரி ஒருநாள் சர்ச்சுக்குள்ளாக வந்தான். ''தொல்லை வருவதற்கு முன்பே நான் வடக்கே போகிறேன்,'' என்றான். ''கிரீமியாவிலிருந்து வந்த அந்தத் தார்த்தாரியர்கள் திரும்பவும் மாஸ்கோ நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அடித்து விரட்டப்பட்டது ஒரு முறை அன்று, ஆனால் அவர்களுக்கு இன்னும் தேவைப்படுகிறது.''

''கேளுங்கள் இதை, கலைஞர்களே!'' கவலையோடு நிகதீம் கூறினார். ''நாம் விரைவாக வேலையை முடிப்போம். எந்த நேரத்திலும் சமய நம்பிக்கையற்றவர்கள் இங்கே வரலாம், பிறகு நாம் கூரிய கோடரிகளைச் சுழற்றிக் கொண்டிருப்போம், தூரிகைகளை அல்ல.''

இப்போது விடப்பட்டு இருந்ததெல்லாம் ஒளிவட்டத்திற்கு பொன் மெருகிடுவதும் ஆங்காங்கு எழுத்துகளைப் பொறிப்பதுந்தான்.

‘‘எகோரி!’’ சாரக்கட்டிலிருந்து நிகதீம் அழைத்தார். ‘‘மெருகெண்ணெய்யைச் சூடாக்கிக் காவியுடன் கல! தங்கத்தை நாம் வைக்கலாம்.’’

நாணயங்களிலிருந்து தங்க இழைகளை அவர்கள் உடைத்தார்கள், ஒவ்வொரு நாணயமும் நூறு வரை மெல்லிய இழைகளைத் தந்தது.



அந்தக் குழு மாலை வரை வேலை செய்து ஒளிவட்டங்களை மெருகெண்ணெய் வைத்து மூடி அதன் மீது தங்கத்தைப் பதித்தது. சுவர்களினின்றும் நூற்றுக் கணக்கான சிறிய சூரியன்கள் மின்னியது போல! ஆகவே சர்ச் பிரமாதமாகவும், நூற்றாண்டுகளுக்காகவும் கட்டப்பட்டது! பயபக்தியும் கம்பீரமும் மிக்கதாக, எனினும் யாரும் நெருங்கத் துணியாத கர்வமிக்க ஓர் இளவரசனைப் போல அன்று, ஆனால் எல்லாவற்றுக்கும் அன்பான ருஷ்ய இயற்கையைப் போல இருந்தது. ஒவ்வொருவருக்கான ஆறுதலையும், புத்திமதியின் மகிழ்ச்சி மிக்க வார்த்தைகளையும் அது பெற்றிருக்கிறது.

‘‘இப்போது நம்மைப் பார்ப்பதற்கு அந்திப்பொழுது கூட வந்து விட்டது,’’ நிகதீம் சோர்வோடு அறிவித்தார். ‘‘வேலையை நிறுத்தி விட்டுக் கீழே இறங்குங்கள், இளைஞர்களே.’’

‘‘உங்களைப் பற்றி என்ன?’’ லுகா கேட்டான்.

‘‘குவிமாடத்திற்குக் கீழிலிருந்து எல்லாவற்றையும் ஒரு தரம் கடைசி முறையாகப் பார்க்க விரும்புகிறேன்.’’

நிகதீம் எப்போது உயரே ஏறினாரோ அப்போது கதவு ஓசையின்றி திறந்தது, ஜாரினுடைய ஆவணப் பாதுகாப்பாளனான இவான் விஸ்கவாதி சர்ச்சுக்குள்ளாக ஊர்ந்து வந்தான்.

‘‘இப்போது இருண்ட இரவு அதுவாகவே வந்துவிட்டது,’’ தனது பற்களுக்கிடையே லுகா பேசினான். ‘‘அந்த ஆந்தை தனது வளைந்த அலகால் இணக்கமின்மையை மோப்பம் பிடிக்க ஆரம்பிக்கும்.’’

ஒரு வார்த்தையும் பேசாது, அங்கு யாருமே இல்லாதது போல, ஆவணப் பாதுகாப்பாளன் ஒவ்வொன்றையும் கவனமாக, விரைவாகவும் கள்ளத்தனமாகவும் பரிசீலிக்கத் தொடங்கி சுவரோவியங்களைத் தனது கோணியூசி போன்ற கண்களால் குத்தி ஊடுருவித் துளைத்தான். வாசனையைப் பின்தொடரும் ஒரு நாய் போலச் சுவரிலிருந்து சுவராகப் பாய்ந்து சென்று, தனக்குத் தானே வியக்கவும், சிலுவை வைத்துக்கொள்ளவும் செய்தான்.

‘‘ஓ, இது சரியில்லை, நீங்கள் சரியாகச் செய்யவில்லை!’’ புலம்பினான். ‘‘புறச்சமயிகளின் ஓர் உண்மையான கூடு இது! சைத்தான் தானே உங்களுடைய தூரிகைகளுக்கு வழிகாட்டியிருக்க வேண்டும்!’’

‘‘உனக்கு மூளைக் கோளாறா, பாதுகாப்பாளனே?’’ உயரே இருந்து நிகதீம் சத்தம் போடவே, அந்தளவு அச்சுறுத்துகின்ற வகையில் விஸ்கவாதி தலையை நடுக்கத்தோடு சுருக்கிக் கொண்டான். ‘‘எங்கே உன்னால் இணக்கமின்மையை இங்கு காண முடி

கிறது? உன் கண்களைத் தேய். அவற்றில் கோளுரைகளால் பூச்சி பறக்கிறது!''

''எங்கினும் ராசதுரோகத்தைக் காண்கிறேன்!'' ஆவணப் பாதுகாப்பாளன் கிறீச்சிட்டு, தனது கூரிய விரலால் சுவர்களைக் கோபத்தோடு குத்தத் தொடங்கினான். *''இங்கே! இங்கே! இதோ இங்கே! புனிதர்கள் சாதாரண மக்களுக்கு அருகே நின்று கொண்டிருக்கிறார்கள், சமமானவர்களைப் போல, சாதாரண மக்கள் வணங்குவதற்குப் பதிலாக அவர்களுக்கு முன்னால் தங்களது வேலை செய்து கொண்டு இருக்கிறார்கள். இங்கே பாருங்கள்! அறுவடை செய்யும் இந்தப் பெண்ணுடைய சட்டைக் கைகள் முழங்கை வரை சுருட்டி விட்டிருக்கின்றன. அது வெட்கக்கேடானது! நீங்கள் விதிகளுக்கு ஏற்ப வரையவில்லை!''*

''அத்தகைய நாணமுள்ளவனே. பெண்ணினுடைய முழங்கையைப் பார்க்க வெட்கப்படுகிறாய்!'' உயரேயிருந்து நிகதீம் இடிமுழக்கம் செய்தார். *''அத்தகைய 'விதி அறிஞர்' களிடமிருந்து வந்ததனால், எனது ஆசிரியர் தியொனீஸி வடக்கே ஃபெரபோந்த் துறவிமடத்திற்குத் தப்பி ஓடினார், உங்களுடைய தடையாணைகளால் அவரது கைகளுக்கு நீங்கள் விலங்கிடாததற்காக.''*

ஆனால் ஆவணப் பாதுகாப்பாளன் அவர் சொன்னதைக் கேட்காது, இன்னும் முரட்டுத்தனமாகக் கூச்சல் போட்டுக் கொண்டிருந்தான்.

திடீரென்று திரும்பி, 'கடைசித் தீர்ப்பைப்' பார்த்த அவன், ஒரு பாம்பைப் பார்த்தவனைப் போல எகிறிப் பாய்ந்தான்! அவனுடைய கண்கள் வீங்கின, கைகளை அலைத்து, பற்களில்லாத வாயை ஓசையின்றி திறந்தான், வார்த்தைகள் தொண்டையில் சிக்கிக் கொண்டன.

''சைத்தானுடைய வாய்க்குள்ளாக யாரை எறிந்திருக்கிறாய், போக்கிரி?!'' கம்மியக் குரலில் கத்தினான். *''ஜாரை! ஜாரே இருக்கிறார்!!! ராசத்துரோகம்!''*

ஆவணப் பாதுகாப்பாளன் தூரிகைகள் வைக்கப்பட்டு இருந்த மேசைக்கு விரைந்து போய், மிகப் பெரிய ஒன்றை எடுத்து, புகைக்கரி இருந்த பானையில் முக்கி எடுத்து, இத்தூரிகையைக் கையில் எடுத்து ஒரு கொடுவாள் போலச் சுழற்றி, 'கடைசித் தீர்ப்பை' நோக்கி ஓடினான்.

சுவரை நெருங்க இன்னும் இரண்டு எட்டுகளே இருக்க, கருப்புத் தூரிகையை ஏற்கெனவே ஓங்கி இருந்தான்.

''நிறுத்து!'' சீற்றங்கொண்ட குரல் உயரத்திலிருந்து முழங்கியது. *''துணிவுகொள்ளாதே!''* அக்கணத்தில் மேலே குவிமாடத்திலிருந்து ஏதோ கிறீச்சிட்டது, உடைந்த பலகைத் துண்டுகள் கீழே விழுந்தன, அதைத் தொடர்ந்து கற்தரையின் மீது நிகதீம் தடாலென்ற ஓசையுடன் விழுந்தார்.



இதெல்லாம் அத்தனை விரைவாக இருக்கவே, ஆவணப் பாதுகாப் பாளனுடைய கையைப் பற்றியிருந்த எகோரி என்ன நடந்தது என் பதைப் புரிந்து கொள்ளவில்லை. நிகதீமுடைய வாயிலிருந்து குருதி வடிவதையும், கிழவருடைய கையற்ற, ஆதரவற்ற கண்களைப் பார்த்த போது என்ன அவலம் நடந்துவிட்டிருந்தது என்பதை அவன் புரிந்து கொண்டான்.

''சரியான நேரத்தில் நான் கீழே பறந்து வந்தேனா?'' நிகதீ முடைய செத்துக் கொண்டிருக்கும் உதடுகள் கிசுகிசுத்தன. ''சுவர் சேதமடையாமல் இருக்கிறதா?''

''ஆமாம், ஆமாம், பெரியவர் நிகதீம்,'' பற்று தலான குரலில் எகோரி பதிலளித்தான். கிழவரை மேலே தூக்கிவிட முயன்றான்.

''என்னைத் தொடாதே, மகனே!'' வேதனையோடு நிகதீம் கத்தினார். ''இங்கேயே என்னை விட்டுவிடு. எனக்கு இனி அதிகக் காலமில்லை...''

''ஆனால் இது எப்படி நடந்தது, பெரியவர் நிகதீம்?'' கண்ணீர்ப் பெருக்குடன் எகோரி கேட்டான்.

''நான் தண்டவாளங்களின் மீது சாய்ந்தேன், அவை வழி விட்டன... மிரோன் அவற்றை முறையாக அறையவில்லை...''

''சற்று பொறு, இழிஞனே!'' எகோரி துள்ளிக்குதித்து நின்றான். ''எங்கே இருக்கிறாய்?'' திகிலடைந்த மிரோனை தொண்டையில் பற்றிப் பிடித்தான்.

''என்னைப் போக விடு!!'' மிரோன் கரகரத்த குரலில் சொன் னான். ''நான் செத்துக் கொண்டிருக்கிறேன்!''

''அவனை விட்டுவிடு,'' நிகதீம் கிசுகிசுத்தார். ''ஏற்கெனவே அவன் மோசமாகி விட்டான்... ஒரு கலைஞனாகவில்லை என்றால், அவன் ஒரு மனிதனாக மாட்டான்... எங்கே அந்த ஆவணப் பாதுகாப் பாளன்?''

''ஓடிப்போய் விட்டான்,'' என்றான் லுகா. ''பெரும்பாலும் உயர் தலைமைகுருவிடம் சொல்லப் போயிருக்கலாம்.''

''சரி, கருணைமிகு கடவுள் எனது தலை ஜாரினுடைய வெட்டுக் கட்டையில் விழுமாறு என்னை விடவில்லை... எனக்காகத் துயர்பட வேண்டாம், இளைஞர்களே. சர்ச்சில் சாகின்ற நற்பேறு எல்லாருக் கும் கிடைப்பதில்லை... யாருக்கேனும் நான் மனத்தைப் புண்படுத் திருந்தால் என்னை மன்னியுங்கள்...''

கலைஞர்கள் தலைகுனிந்து, சட்டைக் கைகளால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டார்கள்.

''கீழே குனியுங்கள்,'' நிகதீமுடைய குரல் தெளிவற்று இப்போது வந்தது. ''உங்களுக்கு இதுதான் என்னுடைய கடைசி உத்தரவு... கடவுள் தந்த திறமையை உங்களில் யாரேனும் மறைத்து, மற்றவர் களுக்கு வழங்காமல் இருந்தால், அவன் மீளாச்சித்திரவதை தண்ட னைக்கு ஆளாவான்... நீ, எகோரி, என்னுடைய இடத்தை எடுத்

துக்கொள்...'' உடனே ஒரு நடுக்கம் அவர் உடம்பு முழுக்க ஏற்பட்டது, மேற்கொண்டு எதுவும் அவர் பேசவில்லை.

மறுநாள், தங்களுடைய பழங்கலைஞரை ஒரு சிறிய குறுகிய சவப்பெட்டியில் வைத்து, அவருடைய கடைசிசர்ச்சின் முற்றத்தில் அக்குழு அமைதியாக அடக்கம் செய்தது, பிறகு அவர்கள் மௌனமாகச் சென்று விட்டார்கள், முடிமன்னனுடைய 'கருணை'யிலிருந்து எவ்வளவு முடியுமோ அவ்வளவு தொலைவில்.





அத்தியாயம் மூன்று

எகோரி மாஸ்கோவை விட்டுப் புறப்பட்ட போது பிரகாசமான நிலவு வானத்தில் படிப்படியாகத் தேய்வுற்றுக் கொண்டிருந்தது. இடைவாருடன் கட்டிய எளிய இலேசான உடை அணிந்திருந்தான், நாய்களிடமிருந்தும் கொள்ளைக்காரர்களிடமிருந்தும் தற்காத்துக் கொள்ள ஒரு குச்சியையும், தனது முதுகில் ஒரு சடங்கத்தையும் எடுத்துச் சென்றான். தாஷாவுக்காகவும் அன்யாவுக்காகவும் ஒரு

வெள்ளைத் துணியில் சுற்றப்பட்ட இரு இனிப்புச் சேவல்களும் சிறுவன் வான்யாவுக்காக ஒரு சிவப்புக் குதிரையும் சடங்கத்தில் இருந்தன. தான் அப்பால் இருந்த வேளையில் உறுதியாக ஒரு மகன் பிறந்திருக்க வேண்டும். அதிலேயே பாட்டி அகுலீனாவுக்காக ஒரு தலைக்குட்டையும் இருந்தது, அவ்வளவு பிரகாசமானது அல்ல, மேலும் இதத்லைக்குட்டைக்குள்ளாக மாஷாவுக்கு ஒளிவிடுகின்ற கங்கினைப் போல ஒரு சிவப்புக் கல்லுடன் ஒரு வெள்ளி மோதிரம் இருந்தது. தனக்காக அவன் பெரியவர் நிகதீமுடைய ஒரு டஜன் தூரிகைகளை நினைவு கூர்வதற்காக எடுத்துச் சென்றான்.

எல்லாம் அவ்வளவுதான். கிழவன் அஃபனாஸி வழமையாகச் சொல்வது போல, மூன்று கோடைகள் வேலை செய்து மூன்று டர்னிப் கிழங்குகள் சம்பாதித்தான். எனினும் எகோரி ஒரு பெரும் செல்வத்தைத் தன்னுடன் எடுத்துக்கொண்டு போனான். அவனுடைய கரங்கள் ஒரு புதிய திறமையைக் கற்றுக்கொண்டுவிட்டன, அவனுடைய கண்கள் கூர்மையானதாகவும், மிகவும் நினைவாற்றல் மிக்கதாகவும் வளர்ந்திருந்தன, மேலும் அவனுடைய இதயத்தில் துணிவும் தன்நம்பிக்கையும் கூடியிருந்தது. எதையும் தான் தீர்மானித்தால் செய்ய முடியும் என்று அவன் உணர்ந்தான்.

ஓ, சுற்றிலும் எவ்வளவு பரப்பு! மாஸ்கோவில் எப்போதுமே எதாவது கண்ணிற்பட்டது: கற்சுவர்கள், கூர்மையான கம்பிவேலிகள், பிரபுக்களின் முதுகுகள் அல்லது முடமான பிச்சைக்காரர்கள். ஆனால் இங்கே, திறந்த வெளியில், தொடுவானத்திற்கு அப்பாலும் பார்க்க முடியும்.



எகோரி விரைந்து நடந்தான். விதைப்பதற்காக அவன் சுணங்கிவிட்டான், ஆனால் அறுவடைக்காகத் திரும்புவதற்கு அவசியம் முயல வேண்டும். சில நேரங்களில் இரவிலுங் கூட நடந்தான். ஓர் இரவு விநோதமான குழப்பம் அவனுக்கு நேர்ந்தது. செம்மையாக அடி கொடுக்கப்பட்டான். ஆண்களால் இருந்தால் பரவாயில்லை, ஆனால் அவ்வளவு வெட்கப்படும்படி பெண்களால்!

நடந்தது இதுதான். ஒரு வெதுவெதுப்பான கோடை இரவில், நள்ளிரவு வாக்கில், ஒரு கிராமத்தின் வெளிப்புறத்தை வந்தடைந்தான். நிலவைப் பார்த்து நாய்கள் சோர்வால் ஊளையிட்டன, அதைத் தவிர எங்கும் ஒரே அமைதி! பிறகு திடீரென்று ஒரு பயங்கரமான வெடியோசை, கூச்சல், புலம்பல் வெடித்தது.

''அது என்ன?'' எகோரி கிளர்ச்சியோடு சிந்தித்தான். ''சூனியக்காரிகள் நடுநிசிக்கூட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்களா?''

பிறகு கடைசி வீட்டிற்குப் பின்னிருந்து பெண்கள் கூட்டம் ஒன்று வெளியேறியது. அவர்களுடைய வெள்ளை உள்ளாடைகள் இருட்டில் மின்னின, தலைமுடி கீழே தொங்கிக் கொண்டிருக்க, வெறுங்கால்களோடு இருந்தார்கள். கத்திக்கொண்டும், அலறிக் கொண்டும், வாணலிகளையும், அடுப்பு மூடிகளையும், கதிர் அரிவாள்களையும்,





அரிவாள்களையும், கவைமுள்களையும் தங்களால் முடிந்த அளவுக்குப் பலமாக அடித்து ஒலி எழுப்பினார்கள்! எல்லாருக்கும் பின்னால் ஒரு கிழவி கனமான மரக் கலப்பையைத் தரையில் சீறல் விழுமாறு இழுத்துக் கொண்டு வந்தாள்.

''என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள், வெட்கமில்லாதவர் கள்?'' என்று எகோரி முகஞ்சுளித்தான்.

அக்கணத்தில் பெண்கள் அவனைப் பார்த்து விடவே எல்லாரு மாகச் சேர்ந்து கத்தினார்கள்: ''அதோ அங்கே, 'பசுச்சாவு'! அதை அடி, பெண்களே, சாக அடி, நமது கால்நடையை நாசமாக்காது!'' அப்பாவி எகோரியை அடுப்புக் கவைமுள்கள், வாணலிகள், அவனது சொந்தக் கம்பு இவற்றால் அடிக்கத் தொடங்கினார்கள், மேலும் சிலர் தலைமுடியைப் பிடித்து இழுத்தார்கள்!

''உங்களுக்கு என்ன வாயிற்று, பெண்களே? பைத்தியமாகிப் போய்விட்டீர்களா? நான் என்ன மாதிரி 'பசுச்சாவு'?'' எகோரி திமிறினான். ''வழிவிடுங்க!''

சடங்கத்தை ஒரு தலைக்கவசம் போலத் தலைக்கு மேலே மறைத்துக் கொண்டு, கூட்டத்தின் வழியாகத் தனது பாதையில் சண்டை போட்டுக் கொண்டு, மற்றொரு கையால் பெண்களைத் தள்ளிவிட்டுக் கொண்டு ஓட்டமெடுத்தான். அவனால் வேறு என்ன செய்ய முடியும்? பெண்ணும் பிசாசும் ஒன்றேதான். ஒன்றுமில்லாததற் காக அடித்துக்கொல்ல முடியும்.

அவனுக்குப் பின்னால் பெண்கள் வெற்றிப் பாடல் பாடித் தொடங்கினர்:

பசுச்சாவினை நாங்கள் உழுதோம்!
ஆழத்தில் நன்கே புதைத்தோம்!
குதிரைச்சாவையும் பசுச்சாவையும் புதைத்தோம்!
ஆடு, பன்றி, கோழிச் சாவினைப் புதைத்தோம்!

மீண்டும் ஒரு முறை கத்திக் கொண்டும், தட்டிக் கொண்டும், பாடிக் கொண்டும் கிராமத்தைச் சுற்றி வந்தார்கள்.

கிராமத்து ஆண்கள் அந்நிகழ்ச்சியைப் பற்றி அறிந்திருக்க வேண்டும், ஆகவே தங்களது படுக்கைகளிலே தங்கிவிட்டார்கள். பெண்கள் 'உழுது கொண்டிருக்கும்' போது யாரையும் சந்தித்தால் 'பசுச்சாவு' என அழைத்துச் செல்லப்பட்டு, கருணையின்றி அடிக்கப் படுவார்கள் என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள்.

ஆனால் இந்தப் பழக்கம் குறித்து எகோரிக்கு எதுவும் தெரியாது. ஆகவே காட்டின் அருகே இருந்த வைக்கோற் போரில் ஒளிந்து கொண்டு, மூலிகைச்செடி ஒன்றைத் தனது வீங்கிப் போன கண்ணுக்கு மேலாக அழுத்தி, உப்பிப் போன தலையைத் தேய்த்துக் கொண்டி ருந்தான். திரும்பவும் சுற்றிலும் அமைதியும் ஓசையின்மையும் நில வியது.

வைக்கோற் போருக்கு வெளியே தலையை வைத்து எகோரி நட்சத்திரங்களை உற்றுப்பார்த்துச் சந்தோஷம் அடைந்தான். கருப்பு விதானத்தின் மீது அரிய கல்களை வைத்துத் தைத்தது போல நட்சத்திரங்களுடன் முழு வானமும் மின்னிக்கொண்டிருந்தது.

''எங்கிருந்து அவை வருகின்றன? கடவுள் பழைய நிலவை நட்சத்திரங்களாகத் துகள் செய்துவிட்டார் என்பது உண்மையா?''

அதோ அவற்றில் ஒன்று திடீரென்று தனக்குப் பின்னே ஒரு வெண்ணிற ஒளிக்கோட்டை விட்டுச் சென்று மறைந்தது. வால்மீன் போரைக் குறிக்கும் என்று பாட்டி அகுலீனா சொல்வது வழக்கம்.

''இந்த முறை சகுனம் சரியாக இருந்தது,'' என்று எகோரி வியந்தான். ''அந்தப் பெண்கள் எனக்குச் செம்மையாகக் கொடுத் தார்கள்!''

இனிய மணம் கமழும் வெதுவெதுப்பான புல்லில் படுத்து அவன் தூங்கிப் போனான். மறுநாள் அதிகாலை, பனித்துளிகள் தரையின் மீது கிடக்க, அதிகாலைப் பனிமூட்டம் சூரியனிலிருந்து பள்ளத் தாக்கில் மறைந்துக் கொண்டிருந்த போது, அச்சுறுத்துகின்ற ஓசை கேட்டு விழித்தெழுந்தான்.

''அந்தப் பெண்கள் இன்னமுமா பசுச்சாவைப் புதைத்துக் கொண் டிருக்கிறார்கள்?''



கிராமத்தின் திசை நோக்கிப் பார்க்கையில், வீடுகள் தீப்பற்றி எரிவதை எகோரி கண்டான்! உதவி செய்ய வயல் வழியாகப் பாய்ந்து சென்றான், ஆனால் முதலாவது வீட்டை எப்போது அடைந்தானோ அப்போது அந்த நெருப்பு பொறியினால் ஏற்பட்டது அல்லவென்பதையும், குதிரை வீரர்கள் தீப்பந்தங்களைச் சுழற்றியதால் ஏற்பட்டது என்பதையும் உணர்ந்து கொண்டான்! ஆட்டு மந்தையில் ஓநாய்கள் போல, தொண்டையிலிருந்து கத்திக்கொண்டு முரட்டுத்தன மாகப் பாய்ந்து சென்றார்கள், அவர்களுடைய வளைந்த கொடு வாள்களால் வீடுகளை விட்டு வெளியே ஓடிவந்த அப்பாவி மக்களை வெட்டி வீழ்த்தினார்கள்.

எகோரியினுடைய குருதி கொதித்தது. ''நாசமாய்ப் போன விலங்குகள்! என்னுடைய அப்பாவுக்காகவும் அம்மாவுக்காகவும் நான் உங்களுக்குத் திருப்பித் தருவேன்!'' ஒரு குதிரையில் காட்டுப் பூனையைப் போல மின்னல் வேகத்தில் பாய்ந்து சென்றான், ஒரு கவர்க்கோலைப் பற்றிப் பிடித்து, எதிரி மீது முழு வீச்சோடு பாய்ச்சி, அவர்களில் ஒருவனை ஓர் எலியைப் போலக் குத்திக் கிழித்தான்.

''வாங்க!'' என்று கத்தினான். ''என்ன பார்க்கிறீங்க! கோடரி களை எடுத்து வெட்டிச்சாயுங்க, அந்தப் புறச்சமயிகளை!''

எத்தகைய ஒரு வீரன் தங்களுக்காகச் சண்டையிடுகிறான் என் பதைப் பார்க்கையில், ஆண்கள் துணிவு கொண்டு குதிரைகளினின்றும் அரிவாள்களாலும் கம்புகளாலும் குதிரையாட்களைக் கீழே இழுத்து வெட்டி வீழ்த்தத் தொடங்கினார்கள். மூர்க்கத்தனமாகப் போரிட்டு

எதிரிகளில் பாதிப் பேரைக் கொன்றார்கள், எஞ்சியவர்கள் குதிரைகளை விளாசி கிராமத்திற்கு வெளியே பாய்ந்து சென்றார்கள்.

மேலும், சண்டையின் பரபரப்பில் எகோரியும் கிராமத்து இரு இளைஞர்களும் அவர்களைப் பின்தொடர்ந்து குதிரைகளை ஓட்டிச் சென்றார்கள். திடீரென்று காட்டிற்கு அருகே அந்தக் குதிரையாட்கள் பிரிந்து இவர்களைச் சுற்றி வளைத்துக் கொண்டார்கள்.

''ஆகா, ருஷ்யனே! ஆக உன்னை முட்டாளாக்கி விட்டோம், இல்லையா?'' என்று தலைவன் ஏளனமாக இகழ்ந்தான், அதேவேளை மற்றவர்கள் மெதுவாக ஓட்டிவந்தவாறு, அவர்களது நெஞ்சுகளை நோக்கி அம்புகளைக் குறிவைத்தார்கள்.

''உனது கடவுளை வேண்டிக் கொள்! அவருடன் தேநீர் குடிக்கச் சீக்கிரமே போகப் போகிறாய்!''

எகோரி சீற்றத்துடன் குமுறினான்.

''அவ்வளவு சீக்கிரம் சிரிக்க வேண்டாம், கயவனே! ஒவ்வொரு புழுவுக்கும் ஒரு கூரிய கம்பு இருக்கிறது!'' என்று கத்தி, அவனை நோக்கி கவர்க்கோலை எறிந்தான். அவனுக்குத் தவறிப்போனது பாவம், தலைவனது முடிமழிக்கப்பட்ட தலையினின்றும் நரி வாலுடன் மென்மயிர்த் தொப்பியை மட்டுமே தள்ளிவிட்டான்.

சீற்றத்துடன் பற்களை வெளிக்காட்டினான் தலைவன்.

''ஆக, ருஷ்யன்! துணிவுள்ள ஒரு கரடி, இல்லையா?''



தனது சொந்த மொழியில் ஏதோ குரைத்தான். எகோரியையும் அவனது நண்பர்களையும் சுற்றிச் சுருக்குக் கயிறுகள் விர்ரென்று ஒலியெழுப்பிக் கொண்டு வந்தன. சேணங்களின்றும் அவர்களைத் திடீரெனக் கீழே இழுத்து முள்புதர்களுக்கும், கூரிய கற்களுக்கும் மேலாக இருண்ட காட்டின் மறுபுறத்திற்குச் சிறைப்படுத்தி இழுத்துச் சென்றார்கள்.

வியர்த்துக் கொட்டிய குதிரைகள் குருதி படிந்த கைதிகளை அவர்கள் எதிரி முகாமை அடைகின்ற வரை ஐந்து பர்லாங் தொலைவிற்கு இழுத்துச் சென்றன. பிறகு அவர்களைப் பிணைத்த சுருக்குக் கயிறுகளை எடுத்து, பிற கிராமங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட வேறு எழுபது கைதிகள் படுத்துக்கிடந்த தரையின் மீது தள்ளிவிட்டார்கள். எகோரி சுற்றுமுற்றும் பார்த்துத் திடுக்கிட்டான்.

தார்த்தாரியர்கள் கூட்டத்தால் ஸ்டெப்பி கருப்பாக இருந்தது, வெட்டுக்கிளிகளின் கூட்டத்தால் நிறைந்த நிலம் போல. சுற்றிலும் ஆயிரக்கணக்கான நெகிடிகள் எரிகின்றன, ஆயிரக்கணக்கான கொள்ளையிடப்பட்ட உடைமை நிறைந்த வண்டிகள் இருக்கின்றன, அச்சமுற்ற பசுக்கள் மற்றும் ஆடுகளின் மந்தைகள் வெட்டப்படுவதற்காகக் காத்துக்கொண்டிருக்கின்றன.

அந்தப் புழுக்கமான பகலும் இரவும் முழுக்க எகோரி ஸ்டெப்பி நடுவில் கிடந்தான். அவனுடைய சட்டை காய்ந்து போன குருதியால் இறுக்கமாகி காயங்களுடன் ஒட்டியது. கண்களுக்கு முன் சிவப்பு

வளையங்கள் சுழல அவ்வளவு வேதனை! அவனுக்கு அருகிலிருந்த ஆட்களில் சிலர் வேதனையால் பற்களை நெறித்துக்கொண்டார்கள், மற்ற சிலர் சீற்றத்தால் திட்டிக்கொண்டார்கள்.

''பரவாயில்லை, நண்பர்களே, கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள். நரகத்திலேயே மனிதனால் உயிர் பிழைக்க முடியும்,'' எகோரி அவர்களுக்கு ஆறுதல் சொன்னான், தனது வீங்கிப் போன உதடு களை நகர்த்தச் சிரமப்பட்டபடி.

திடீரென்று எகோரியைச் சிறைப்பிடித்த தலைவன் குதிரையில் விரைந்து வந்து காட்டுமிராண்டித்தனமாகக் கத்தினான்:

''ஏய், நரிகளே! எங்களுடைய ஆட்சியாளருக்குச் சேவை செய்ய விரும்புபவன் என்னைப் பின்தொடர். எஞ்சியவனின் புத்தியில்லாத தலைகள் வெட்டப்பட்டு, காய்வதற்காக மரமுளைகளில் வைக்கப் படும்!''

ஆட்கள் முகஞ்சுளித்தார்கள், எதுவும் பேசவில்லை. அவனைப் பின்தொடர்வதைக் காட்டிலும் அவர்கள் செத்து மடிவது நல்லது. ஆனால் எகோரி எழுந்து நின்று பேசினான்:

''உங்களுடைய ஆட்சியாளரிடம் என்னைக் கூட்டிச் செல். அவருக்கு நான் சேவை செய்வேன்.''

ஆட்கள் வாய்பிளந்தார்கள், தலைவன் அலட்சியத்தோடு அவனைப் பார்த்து அப்பால் அழைத்துச் சென்றான்.

முகாம் வழியாக நடந்து போய்க் கொண்டிருந்த போது, எல் லாவற்றையும் எகோரி கவனித்துக் கொண்டான், ஆடம்பரமான கூடாரம் ஒன்றை அவர்கள் அடைகின்ற நேரத்திற்குள்ளாக, ஒரு திட்டத்தை அவன் ஏற்கெனவே சிந்தித்து விட்டிருந்தான்.

கூடாரத்தின் முன்பாக ஓர் அருமையான பாரசீகக் கம்பளத்தின் மீது 'அகிலத்தின் ஆட்சியாளன்' தானே சப்பணமிட்டு உட்கார்ந்து, ஆட்டுக்காலை பேராவலுடன் விழுங்கிக் கொண்டிருந்தான். சிவந்து, உப்பிய முகத்துடன் ஒரு மாமிச மலை அவன்.

''ஆக, துணிவுமிக்க ருஷ்யனே, எனக்காக நீ சண்டையிடுவாயா?''

''எனது காயங்கள் ஆறிய பிறகு பார்க்கலாம்,'' என்று எகோரி பதிலளித்தான்.

''எதற்காக என்னிடம் வந்தாய்? சாவதில் முதலாவதாக இருக்க விரும்புகிறாயா?''

''நான் வந்ததற்குக் காரணமே நான் சாக விரும்பவில்லை என்பதற்காகத்தான். என்னை உயிரோடு விட்டால், உலகத்தில் வேறு எந்த அரசரும் பெற்றிராத பரிசு ஒன்றை உமக்கு அளிப்பேன்.''

ஆட்சியாளன் சிரிப்புடன் கர்ஜித்து, கொழுத்த தொந்தியைக் குலுக்கினான்.

''என்ன அது, பசுச் சாணமே?'' என்று கிறீச்சிட்டான். ''ஒரு வேளை உன்னுடைய தாடியைத் தர விரும்புகிறாயா? நான் எல்லா வற்றையும் பெற்றிருக்கிறேன்.''


''ஒரு பறவை போல உம்முடைய ஆட்சிப் பரப்பு முழுவதையும் வானத்திலிருந்து பார்க்க நீர் விரும்பவில்லையா?''

''ஐந்து சந்திரன்களுக்கு முன்னால் எனது ஆட்களைக் கீழே படுத்து தங்களுடைய உடல்களால் மலை ஒன்றை உருவாக்கும்படி கட்டளையிட்டேன். இந்த உயிருள்ள மலை மேல் எனது குதிரையில் சென்று, எனது தலை வானத்தை எட்டியது. ஆனாலும் கூட எனது எல்லை முழுதையும் நான் பார்க்கவில்லை.''

''நான் உம்மை உயரே, நட்சத்திரங்கள் வரை உயர்த்துவேன்.''

''அதை எப்படிச் செய்வாய், ஆட்டுத்தலையே?''

''ஓராயிரம் ஆட்டுத்தோல்களை எனக்குத் தரும்படி கட்டளையிடுவீர். அவற்றைக் கொண்டு நான் எனது ஆட்களுடன் ஒரு பெரிய பலூன் செய்து, நெருப்புக்கு மேலாக வெப்பக் காற்றினால் அதை நிரப்புவேன். வேறு எந்த மனிதனும் முன்னர் சென்றதைக் காட்டிலும் உயரமாக அது உம்மைத் தூக்கிச் செல்லும்.''



''ஆகா, ருஷ்யனே! உன்னுடைய ஆட்டுத்தலை உண்மையில் நன்றாகத்தான் சிந்தித்தது. நான் உனக்குத் தோல்கள் தருவேன். ஆனால் ஏழு நாள்களில் என்னை வானத்திற்கு உயர்த்தவில்லை என்றால், நீயாகவே அங்கே ஒரு கருப்புப் புகையாகப் பறந்து செல்வாய். உன்னையும் உனது ருஷ்யர்களையும் நான் எரிப்பேன்.''

எகோரி அவனுக்கு முன்னால் தாழப் பணிந்து, தானே திட்டிக் கொண்டு கூடாரத்தை விட்டு சென்றான். ''பிசாசு உன்னை குவாஸுடன் தின்னட்டும்,'' என்று நினைத்தான். ''தொப்பை வயிறு பறவையே.''

தனது பற்களை நெறித்துக் கொண்டு, சீழ்க்கைகளுக்கும், கிண்டல் சிரிப்புகளுக்கும், கசையடிகளின் வேதனையூட்டும் அடிகளுக்கும் ஊடே தனது சக நாட்டினரிடம் நடந்து சென்று, அவர்களில் ஒருவன் கோபத்தோடு கூறுவதைக் கேட்டான்:

''தோசையின் துண்டுக்காக உன்னையே விற்றுவிட்டாயா, யூதாஸ்? எனது கைகள் கட்டப்பட்டிருப்பது இரங்கத்தக்கது. பரவாயில்லை, எனது பற்களால் இன்று இரவே உன்னைக் கடித்துக் கொல்வேன்.''

''அது போதுமானது, முட்டாளே. பேசாதிரு,'' என்று எகோரி அமைதியாகப் பதிலளித்தான். ''கேளுங்கள், நண்பர்களே,'' என்று அவன் காவலர்கள் கேட்க முடியாதவாறு கிசுகிசுத்தான். ''ஒரு தந்திரம் பற்றிச் சிந்தித்திருக்கிறேன். அது நிறைவேறினால், நாம் விடுதலை பெறுவோம். ஆனால் எதைப் பற்றியும் கேட்க வேண்டாம், வெறுமனே நான் சொல்வது போலச் செய்யுங்கள்.''

ஆட்கள் எதுவும் பேசாது சிந்தித்தார்கள். பிறகு எகோரியோடு சிறைப்பட்ட ஒருவன் சொன்னான்:

''சண்டையில் அவனை நான் பார்த்திருக்கிறேன். அவன் கைவிட மாட்டான். என்ன செய்ய வேண்டும் என்பதை எங்களுக்குச் சொல்.''

மறுநாள் காலை, தொடுவானத்திற்கு மேலாகச் சூரியன் மருட்சியாக எட்டிப்பார்த்தவுடன் குதிரை வீரர்கள் ஆட்டுத் தோல்களின் முழு மலையையே சிறைப்பிடிக்கப்பட்டவர்கள் இருந்த இடத்திற்குக் கொண்டுவந்தார்கள்.

''இப்போது, சகோதரர்களே, வேலையை ஆரம்பியுங்கள்,'' என்று எகோரி சொன்னான். ''ஏழு நாள்கள் மட்டுமே நமக்கிருக்கின்றன. தமரூசிக்குப் பதிலாகக் கூர்மையான எலும்புகளையும், மெழுகிடப்பட்ட நூலுக்குப் பதிலாக தசைநார்களையும் எடுத்துக்கொண்டு தோல்களை ஒன்றாகத் தைத்திணையுங்கள், ஐந்து குறுக்காகவும், நூறு நீளவாக்கிலும், ஒருவகையான நீண்ட கம்பளத்தைப் போல.''

காவல்காரர்கள் அவர்களுடைய கைகளைச் சுற்றிக் கட்டியிருந்த கயிறுகளை வெட்டி விட, அவர்கள் தோல்களை ஒன்றாகத் தைக்கத் தொடங்கினார்கள். சோம்பேறித்தனமாக படுத்திருப்பதை விட எதுவும் நல்லதுதான். ஏதோ காரணத்திற்காக எகோரி ஒரு பசுவின் எலும்புக்கூட்டைத் தோல்களால் மூடிக் கொண்டிருந்தான்.

அவர்கள் உழைத்ததில் ஆறு நாள்கள் விரைவாகக் கடந்தன. காயங்களால் பத்து ஆட்கள் இறந்தார்கள், ஆனால் எஞ்சியவர்கள் தங்களது கடைசிச் சக்தி கொண்ட மட்டும் கடினமாகத் தைத்தார்கள்.

மாலை வாக்கில் 'அகிலத்தின் ஆட்சியாளன்' தானே கறைப்பட்டக் குதிரை ஒன்றில் காவலர்களுடன் விரைந்து ஓட்டி வந்தான்.

''ஏய், ருஷ்யனே! வேலை முடிந்து விட்டதா?''

''ஒப்புக்கொண்டது போல, நாளை முடித்து விடுவோம்,'' என்று எகோரி பதிலளித்தான்.

''ஜாக்கிரதை, இஞ்சித்தாடியே! என்னிடம் நெகிடி தயாராக இருக்கிறது.'' தனது குதிரையை விளாசி, ஸ்டெப்பிக்குள்ளாக விரைந்து ஓட்டினான்.

முதலாவது நட்சத்திரம் வானத்தில் மருட்சியாக மின்னிட, அடுத்ததும் வந்தது. அவர்களுடைய கடைசி இரவு வந்துவிட்டது.

''அது போதுமானது,'' என்றான் எகோரி. ''தைப்பதை நிறுத்துங்கள். இப்போது ஆட்டு மண்டையோடுகளையும் எலும்புகளையும் ஒன்று சேர்த்து அவற்றைத் தோல்களோடு கட்டுங்கள்.''

''அந்தக் குப்பை நமக்குத் தேவைப்படுவது எதற்காக?'' என்று ஆட்கள் கேட்டார்கள்.

''பொறுமையாக இருங்கள், சீக்கிரமே கண்டுகொள்வீர்கள்.''

ஆகவே ஸ்டெப்பியில் மண்டையோடுகளையும், எலும்புகளையும் அவர்கள் சேகரிக்கத் தொடங்கினார்கள். அவற்றால் தரை சிதறிக் கிடந்தது, ஏனெனில் நாடோடிப் போர்வீரர்கள் சாப்பிட விரும்பினார்கள். இதற்கிடையே எகோரி அவர்களுடைய மருத்துவரது வண்டிக்குப் பதுங்கிச் சென்று, அதிலிருந்து கொஞ்சம் கந்தகத்தையும் காய்ந்த மூலிகைச் செடிகளையும் திருடிக் கொண்டுவந்து விட்டான். பிறகு ஒரு பெரிய வெண்கலப் பாத்திரத்தில் நீர் ஊற்றி நெருப்புக்கு

மேலாக வைத்துச் சூடாக்கி, அதில் எல்லா மூலிகைச் செடிகளையும் போட்டு, ஸ்டெப்பி ஊமத்தஞ் செடியின் கொத்தையும் சேர்த்தான். பாத்திரத்தினின்றும் வெறியூட்டுகிற மணம் மிதந்து சென்று குதிரைகளைக் கனைக்க வைத்தது. மேலும் கிளர்ச்சி அடைந்த காவல்காரர்கள் குதித்து எழுந்து கத்தினார்கள்:

''ஏய், ருஷ்யனே! பீர் காய்ச்சிக் கொண்டிருக்கிறாயா?''

''ஓ, இல்லை,'' எகோரி பதிலளித்தான். ''நண்பர்களை வெதுவெதுப்பாக்கத் தேநீர்.''

''அதை இங்கே கொடு! நாங்கள் விறைப்பாக உறைந்து போய்விட்டோம். உனது நண்பர்கள் நாளை நெகிடியில் வெதுவெதுப்புப் பெறுவார்கள்.'' அவர்கள் பாத்திரத்தைப் பறித்துக் காலி செய்தார்கள். உடனேயே மயக்கம் ஊட்டும் தேநீர் வேலை செய்யத் தொடங்கியது. அவர்கள் ஈட்டிகளைக் கீழே போட்டு விட்டு, நினைவிழந்து தரையில் சாய்ந்தார்கள்.



எகோரி பாய்ந்தான், அவனுடைய கண்கள் மின்னின.

''வாருங்கள், சகோதரர்களே, புறப்படுவதற்கு இதுதான் நேரம். குதிரைகளைப் பிடித்து அவற்றை ஜோடிகளாக வரிசையில் நிறுத்துங்கள். பிறகு ஆட்டுத்தோல் கம்பளத்தை எடுத்து அதனால் குதிரைகளை மூடுங்கள். மேல் பக்கம் உரோமமாம் இருக்க வேண்டும்.''

''இதன் அருத்தம் என்ன, எகோரி?''

''அது ஒரு பயங்கரமான நெருப்பு சுவாசிக்கும் பறவைநாகத்தை ஏற்படுத்தும், அது நம்மைக் காக்கும்.''

ஆட்கள் உற்று நோக்கி, தரையை தொட்டு ஆடுகின்ற மூடிக்குக் கீழே இருந்த குதிரைகள், நூறு கால்களுடன் கூடிய ஒரு பறவை நாகம் போலக் காணப்பட்டது என்பதில் உறுதியானார்கள்!

''ஓ, எத்தனை பயங்கரம்!'' தாங்களாகவே சிலுவை வைத்துக் கொண்டார்கள். ''ஆனால் தலை எங்கே?''

எகோரி காய்ந்த புல்லின் குவியலைப் பக்கவாட்டில் தள்ளினான், அதற்குக் கீழே பல்லைக்காட்டிய ஒரு பெரிய பறவைநாகத்தினுடைய தலை இருந்தது. ஆட்கள் நடுக்கத்தோடு பின்னுக்கு நகர்ந்தார்கள். மிகவும் அண்மையில் பார்க்கையில், தாடைகளினின்றும் அஞ்சத்தக்கவாறு துருத்திக் கொண்டிருந்தது பற்களல்ல, ஆனால் ஆட்டுத் தோல்களால் மூடப்பட்ட ஒரு பசுமாட்டின் எலும்புக்கூட்டின் விலா எலும்புகளே என்பதைக் கண்டார்கள்.

''தலையை உயர்த்துங்கள், பயப்பட வேண்டாம்,'' என்று எகோரி அவர்களைத் துரிதப்படுத்தினான். ''இப்போது இதை முதலாவது ஜோடிக் குதிரைகளோடு கட்டு, பிறகு தோல்களுக்குக் கீழே ஊர்ந்து செல்லுங்கள், நான் சீட்டியடித்ததும் முழு பலத்துடன் குதிரைகளை விளாசி, முடிந்த அளவுக்குக் கத்துங்கள்.''

தோல்களுக்குக் கீழாகச் சென்று குதிரைகளினுடைய பிடரிமயிர்களை ஆட்கள் பிடித்துக் கொண்ட போது, நெருப்பிலிருந்து எகோரி

ஒரு தீவட்டி ஏற்றி பறவைநாகத்தினுடைய தலைக்குள்ளாக ஏறிக் கொண்டான்.

''ஆக, நண்பர்களே, பின்தங்காதீர்!'' அத்தனை பலமாக எகோரி சீட்டியடிக்கவே அவனுடைய குதிரை நடுக்கத்தால் பின்கால்களின் மீது நின்றது. அப்போது ஆட்கள் குதிரைகளை விளாசியதுடன் கொடிய விலங்குகளைப் போல ஊளையிட்டார்கள்.

அதே நேரத்தில் அவர்கள் பாய்ந்து சென்றார்கள்!

இரைச்சலினால் விழித்தெழுந்த எதிரி வீரர்கள் என்ன நடந்துவிட்டிருந்தது என்பதை அறியாது இருட்டுக்குள்ளாக உற்றுப்பார்த்தார்கள். அங்கே பயங்கரமான இரைச்சல் கேட்டது, ஏதோ அடித்து நொறுக்குவதால் தரை அதிர்வது மிகவும் நெருக்கமாக வந்து கொண்டிருந்தது. பிறகு திடீரென்று அஞ்சத்தக்க நெருப்பு சுவாசிக்கும் பறவைநாகத்தை தீச்சுவாலைகள் வெளிப்படுத்தின. பெரியதாகவும் ரோமம் கொண்டதாகவும் இருந்தது, அவர்களை நோக்கி நேராக வந்து கொண்டிருந்தது! அதனுடைய பயங்கரமான வாயிலிருந்து சுவாலைகளும் மஞ்சள் புகையும் வெளிப்பட்டன, கண்களிலிருந்தும் சிவப்புப் பொறிகள் சொரிந்தன, வெள்ளை எலும்புகளும் மண்டையோடுகளும் பக்கங்களில் கலகல ஒலி எழுப்பி, மேலும் குருதி உறையுமாறு வைப்பது போல அது கர்ஜித்தது.

அப்போது என்ன ஆரம்பித்தது! குதிரைகள் வெறிபிடித்து பயங்கரமாகக் கனைத்து, முகாமைச் சுற்றிலும் பாய்ந்தோடின. நடுக்கத்துடன் கூக்குரலிட்டுக் கொண்டும் தப்பிப்பிழைக்க ஏதோ முறையை வீணாக முயற்சி செய்து கொண்டும் வெறிபிடித்தது போல ஓடிக் கொண்டிருந்த எதிரிகளைக் குளம்புகளால் மிதித்துத்துவைத்தன.

''ஓட்டுங்க! ஓட்டுங்க!!'' எகோரி தீவிரமாகக் கத்தி, தீவட்டியின் மீது இன்னும் கொஞ்சம் கந்தகத்தைத் தூவினான். அது தான் பறவைநாகத்தினுடைய வாயிலிருந்து வெளியே சுவாலைகளையும், நெருப்புப் பொறிகளையும், மஞ்சள் புகையையும் வெளிவிட்டது.



நெருப்பு சுவாசிக்கும் பறவைநாகம் வீழ்ந்து விட்ட கூடாரங்களுக்கும் மிதிபட்ட நாடோடிகளுக்கும் மேலாகப் பாய்ந்து, ஊளையிட்டவாறு இரவுக்குள்ளாக மறைந்து போயிற்று.

வியர்த்துக் கொட்டிய குதிரைகள் படிப்படியாகக் கால் எட்டைக் குறைத்துக் கொண்டு இறுதியாக முற்றிலும் நின்றுவிட்டன. புழுக்கமான ஆட்டுத்தோல்களிலிருந்து ஆட்கள் தரையின் மீது விழுந்தார்கள். சிரித்து ஒருவரையொருவர் மகிழ்ச்சியால் கட்டித் தழுவிக் கொண்டார்கள், சிலர் அழவும் செய்தார்கள்.

''ஆனால் எங்கே எகோரி?''

அவர்கள் விரைந்தோடி பறவைநாகத்தினுடைய தலையைக் கீழே தள்ளிவிட்டார்கள். அங்கே கூனிப் போய், தனது தலையைப் பற்றியவாறு எகோரி அமர்ந்திருந்தான்.

''என்ன விஷயம், எகோரி?'' ஆட்கள் எச்சரிக்கையோடு கேட்டார்



கள். ''என்ன நடந்தது?'' முகத்திலிருந்து அவனது கைகளை அவர்கள் எடுத்து, நடுக்கத்துடன் பெருமூச்சு விட்டார்கள். கண்களைப் பார்க்க முடியாத அளவுக்கு அவனுடைய முகம் அவ்வளவு மோசமாக எரித்து விட்டிருந்தது.

''அன்புள்ள கன்னி மேரியே!'' ஆட்கள் தாங்களாகவே சிலுவை வைத்துக்கொண்டார்கள். ''என்ன துன்பம்! கந்தகம் கண்களில் பட்டிருக்க வேண்டும். உன்னுடைய கண்கள் இன்றி நீ என்ன செய்வாய்?''

''எனக்குத் தெரியாது...'' எகோரி உள்வாங்கிய குரலில் பதிலளித்தான். ''நீங்கள் வீட்டிற்கு ஓட்டிப் போங்கள். இல்லையென்றால் அவர்கள் நம்மைத் துரத்தி வருவார்கள்.''

''சரி, வீட்டுக்கு எப்படிப் போவாய்? உன்னை இப்படி விட்டுச் செல்வது சரியில்லை.''

ஆயினும் அவனுக்கு வழிகாட்ட யாரையேனும் கூட்டிக்கொள்ள அவர்கள் எவ்வளவு கடினமாக முயன்றார்கள் என்பது பொருட்டன்று, அவன் மறுத்துவிட்டான். ஆகவே அவர்கள் தங்களுடைய இரட்சகனைப் பணிந்து வணங்கி நன்றி சொன்னார்கள், அவனது முகத்தைப் பார்க்காமலிருக்க முயன்றபடி, பிறகு கனத்த இதயங்களுடன் குதிரைகளில் விரைந்து நீங்கினார்கள்.

எகோரி கடிவாளங்களை இலேசாகப் பற்றி, எங்கே என்று தெரியாமல் ஓட்டிச் சென்றான், வேதனையுடன் முனகிக் கொண்டிருந்து, சேணத்தில் அலைந்தான்.

''மாட்டேன்,'' என்று துயரத்தோடு சிந்தித்தான். ''நான் வீட்டுப் போய் நாள் முழுக்க பெஞ்சின் மீது உட்கார மாட்டேன், எல்லார்க்கும் ஒரு சுமை. மாஷாவும் குழந்தைகளும் இது போல என்னைப் பார்த்தால் நடுங்கிச் செத்துவிடுவார்கள். அவர்களுக்குச் சுமையாக இருப்பதைவிட கரடிகளுக்கோ ஓநாய்களுக்கோ உணவாவது நல்லது. குறைந்தது நான் கொஞ்சமேனும் பயனுள்ளதாக இருப்பேன்.''

குதிரை மென்மையாகக் கனைத்து நின்றது. குளுமையான தென்றலை எகோரி உணர்ந்து, அண்மையில் ஆறு ஓடுவது போலக் கேட்டான். குதிரையை விட்டுக் கீழிறங்கி அதை விலாப் பக்கத்தில் தட்டினான்.

''நீ போகலாம், குதிரையே! அல்லது கொடிய விலங்குகள் உன்னையும் கூடப் பிடித்து கொல்லும்...'' பிறகு அவன் முகங்கவிழ்ந்து ஈரமான புல்லில் விழுந்நு அங்கேயே மௌனமாயிருந்தான்...

அதே நேரத்தில் மாஷா நிம்மதியற்று இருந்தாள். கூண்டில் இருந்த பறவை போல வீட்டையே சுற்றி வந்து, நூற்கவோ தூங்கவோ அவளால் முடியவில்லை. எகோரிக்கு ஏதோ நேர்ந்து விட்டது என்பதை அவள் உள்ளம் உணர்ந்தது, ஏதோ அறியாத சக்தி அவளை வீட்டை விட்டு வெளியே இழுத்து வந்தது. அவள் இரவுக்குத் தாண்டிச் சென்றாள், மேலும் கால்கள் அவளை ஆற்றுக்குக் கொண்டு

சென்றன. கரை மீது அவள் ஓடினாள், இதயம் வேகமாக அடித்தது. மனக்கவலையோடு சுற்றிலும் உற்றுப்பார்க்கையில் எதிர் கரையில் பனிமூட்டத்தில் ஒரு கறுப்புக் குதிரையைக் கண்டாள். அது மாஷா வைப் பார்த்து மென்மையாகக் கனைத்தது, பிறகு அவளை அழைப்பது போல தலையை ஆட்டியது.

தன்னைக் குதிரை அழைப்பது நல்ல சகுனமில்லை என்பதை மாஷா உணர்ந்தாள். ஏனென்று அறியாதவாறு, பனிமூட்டம் சூழ்ந்த ஆற்றுக்குள்ளாக இறங்கி, மறு பக்கத்திற்கு நீந்திச்சென்றாள். தண் ணீரை விட்டு எப்போது அவள் வெளியே கால் வைத்தாளோ அப் போது தனது எகோரியைக் கண்டாள். அது வெறும் கற்பனைதான்! குதிரை பிறந்த மண்ணுக்கே அவனைக் கொண்டுவந்து விட்டது.

மாஷா கதறி அழுது, கணவனுக்கருகே முழங்காலிட்டு நின்றாள்.

''யார் அது?'' புல்லை விட்டுத் தனது தலையை எகோரி உயர்த் தினான்.

நடுக்கத்தோடு குதித்து நின்ற அவள், ஒரு பயங்கரமான கதறல் வெளிப்படாததற்காகக் கைகளால் தனது வாயைப் பொத்தினாள்.

''அது நான் தான்! நான் தான்!'' அவள் கிசுகிசுத்தாள். கண்ணீர் பெருக்கெடுக்கவே மற்றொரு வார்த்தை அவளால் பேச முடிய வில்லை.



எகோரி அப்பால் திரும்பினான். ''என்னை விட்டு விடு,'' என் றான். ''இது போல நான் உனக்கு எதற்காக?''

மாஷாவினுடைய எல்லாக் கண்ணீரும் காய்ந்து போயின.

''அப்படி என்றால் என்ன சொல்கிறாய்? என்னைத் தவிர, நீ யாருக்குத் தேவை? பாட்டி அகுலீனாவும் நானும் வசந்தத்திற்குள் ளாக உன்னைக் குணப்படுத்துவோம். அவளுக்குச் சில மந்திர உச்சரிப்புகளும், இரகசியப் புற்களும் தெரியும். அழகைப் பற்றி யார் கவலைப்படுவது, கண்கள் தான் முக்கியம். இளம் பெண்கள் உன் னைப் பார்த்து மகிழ்வது குறையலாம், ஆனால் நான் முன்னிலும் அதிகமாக உன்னை நேசிப்பேன்... ஆகவே எழுந்திரு, உன்னுடைய குதிரையின் மீது ஏறுவதற்கு உனக்கு நான் உதவி செய்கிறேன், ஹேய், ஹேய், நாம் போகலாம்!''

''அது ருஷ்யனைப் புரிந்துகொள்ளவில்லை.''

''அதனால் புரிந்துகொள்ள முடியாது போகலாம், ஆனால் ஒரு மனிதனைப் போலச் சிந்திக்கிறது. உன்னைக் கண்டுபிடிக்க அதுதான் உதவியது,'' குதிரையைப் பரிவோடு தடவிக் கொடுத்தபடியும், அதனது முகத்தில் முத்தமிட்டபடியும் மாஷா மென்மையாகக் கூறினாள்.

அவர்கள் நதியின் குறுக்காக நீந்திக் கடந்து கிராமத்திற்குப் புறப்பட்ட போது, வெளிச்சம் வரத் தொடங்கிக் கொண்டிருந்தது. நனைந்து போன குதிரை ஆவி விட்டுக்கொண்டும் குளிரால் நடுங்கிக் கொண்டும் இருந்தது, மேலும் மாஷா அதற்குப் பக்கத்தில் நெடு

கிலும் நடந்தாள். அவளது ஆடையிலிருந்து தண்ணீர் வழிந்தது, ஆனால் அவள் எதையும் கவனிக்கவில்லை. கணவனுடைய காலில் தன்னைத்தானே அழுத்திக் கொண்டு, கூனிப்போன அவனைப் பார்த்தாள். அவள் இளம் மணப்பெண்ணாக இருந்த நேரத்தை விட மிகவும் ஒளிமயமானதாக மகிழ்ச்சியுடன் அவளது கண்கள் மின்னின...

* * *

ஒரு தெளிவான விடியலோ, ஒரு பிரகாசமான நாளோ எகோரிக்கு கறுத்த இரவைப் போலவே இருந்தன. ஏற்கெனவே ஒரு மாதத்திற்கும் மேலாக அடுப்புப் பெஞ்சின் மீது உட்கார்ந்திருந்தான். சோம்பலான கைகள் அவனது முழங்கால்களின் மீது உடைந்த சிறகுகளைப் போலக் கிடந்தன, தலை குனிந்திருந்தது. கற்களைப் போல அவ்வளவு கனத்த சிந்தனைகளை எண்ணியவாறு அமைதியாக உட்கார்ந்திருந்தான்.



ஆமாம், துரு இரும்பைத் தின்பது போல, ஒரு மனிதனுடைய இதயத்தைத் துயரம் தின்கிறது.

இந்த நாட்களில் வீடு அமைதியாகவும் மகிழ்ச்சியற்றதாகவும் இருந்தது. மாலை நேரத்தில் மாஷாவும், அவளுடைய மகள்களும் உலர்ந்த புல்லை எப்படிக் கட்டுக்குவியல்களாகக் கூட்டிப் பெருக்கினார்கள் என்பதையும், திடீரென்று ஒரு சிறிய சாம்பல் நிறப் பூதத்தைப் போல முயலானது புல்லிலிருந்து வெளியே குதித்துப் பாய்ந்து அவர்களைச் சாகுமாறு அச்சுறுத்தியது என்பதையும் அவர்களிடம் கூறுவது வழக்கம். தாஷா உயிருக்குப் பயந்து ஓடினாள், அன்யா நடுக்கத்துடன் கீழே அமர்ந்து தனது உடையால் தலையை மூடிக்கொண்டாள், அதே வேளை மாஷா பின்னுக்குத் தாவி ஒரு வாருகோல் மீது மிதித்தாள். அது அவளது முதுகில் பலமாகச் சுரீறென்று அடித்தது!

எகோரியைத் தவிர எல்லாரும் சிரிப்பார்கள், அவனோ கல்லால் செய்யப்பட்டவனைப் போல அங்கே அமர்ந்திருப்பான். பிறகு மாஷா அவர்களுக்கு மற்றொரு வேடிக்கைக் கதை சொல்வாள், தாழ்வாரத்திற்குள்ளாக விரைந்தேகி தனது இதயந்திறந்து விம்பியழுது, ஆனால் அமைதியாகவே, எகோரிக்குத் தெரியக் கூடாது என்பதற்காக, எதுவுமே நடக்காதது போலத் திரும்பிவிடுவாள்.

பாட்டி அகுலீனா கண்ணீர் வரவிட மாட்டாள். அதற்கு அவளுக்கு நேரமில்லை. ஒவ்வொரு நாளும் செடிகள் பிடுங்க அவள் காட்டுக்குச் செல்லவும், அந்த நறுமணமிக்க மூலிகைகளுடனும் மந்திர உச்சரிப்புடனும் எகோரியைக் குணப்படுத்தவும் தலைப்படுவாள்.

விடியற்காலையில், யாரும் அவளைப் பார்க்கவும், தீக்கண்ணை அவள் மீது செலுத்தவும் கூடாது என்பதற்காக, குளிர்ந்த நீருக்காக

ஆற்றுக்குச் சென்றாள். பிறகு இத்தண்ணீரை ஒரு மரச்சாடியில் ஊற்றிக் கிசுகிசுக்கத் தொடங்கினாள்: ''கிழக்கிலிருந்து இடிமேகம் ஒன்று வந்தது. அந்த மேகத்தை விட்டு தீப்போன்ற அம்பு ஒன்று பாய்ந்தது. அது கடவுளினுடைய ஊழியன் எகோரியிடமிருந்து, அவனது பிரகாசமான முகத்திலிருந்து, துணிவுமிக்க இதயத் திலிருந்து, கூர்மையான கண்ணிலிருந்து, கருத்த புருவங்களிலிருந்து, வெப்பமான குருதியிலிருந்து, கருப்பான கல்லீரலிலிருந்து கறையை நீக்கியது. இந்த வார்த்தைகள் ஈட்டியையும் கத்தியையும் விடக் கூர்மையானதாக இருக்கின்றன. கடலில் ஒரு சாவி, வயலில் ஒரு பூட்டு, ஆமென்!''

பிறகு அவள் சாடியின் அடியில் ஒரு கத்தியால் சிலுவை அடையா ளம் வைத்து, தண்ணீரை எகோரியினுடைய முகத்தில் தெளித்தாள்.

''ஓ, பாட்டி!'' எகோரி நடுங்கினான். ''திரும்பவும் உன்னுடைய முட்டாள்தனம்! எந்தப் பயனுமில்லை. கடைசிக் காலம் வரை நான் குருடாக இருப்பேன்.''



''ஓ, இல்லை, பேரனே! ஒட்டுமுள் ஒட்டிக்கொண்டு வெள்ளாட்டை விடாதது போல உன்னை நான் விட மாட்டேன். நீ விரும்பியது போல தட்டவும் அடிக்கவும் செய், ஆனால் நம்பிக்கை கொள். உன் முகத்திலுள்ள தழும்புகளில் ஏறத்தாழ எல்லாமே ஆறிவிட்டன. சீக்கிரமே உனது சொந்தக் கண்களால் காண்பாய், நீ என்னை நம்பவில்லை என்றால்.''

வயல்களில் வேலை செய்ததனால் கறுத்துப்போன தன்னுடைய வற்றிய கைகளால், ஏதோ ஈரமான இலைகளையும் விருவிருப்பான மூலிகைகளையும் அவனது கண்களின் மீது வைத்து வெள்ளைத் துணியால் அவற்றைக் கவனமாகக் கட்டினாள்.

ஆகவே ஒவ்வொரு நாளும் அகுலீனா, எகோரியினுடைய பிணி யைக் கூர்மையான கத்திகளின் மீது, ஆழமான கடலுக்குள்ளாக, முலாமிட்ட பாறையில் உட்கார்ந்திருக்கும் தங்க பைக் மீனிடத்தில், இருண்ட காட்டில் அத்தகைய பிணிகளுக்காக உணவுடனும் நீருடனுமிருந்த அழுகிப்போன கட்டைக்கு சோர்வில்லாது அனுப்பி னாள். எகோரி நிச்சயமாகக் குணமடைவான் என்று அவள் நம்பி னாள், இந்த நம்பிக்கையுடன் அவனது கருத்த சிந்தனைகளை அப் பால் விரட்ட முயன்றாள்.

இலையுதிர் காலத்தில் ஒரு நாள், தனது துயரார்ந்த கண்ணீருடன் சாம்பல் நிற வானம் பூமியை நனைத்துக்கொண்டிருந்த போது, சிறுவன் வான்யாவுடன் எகோரி மட்டும் தனிமையில் வீட்டில் இருந்தான். அவன் எதிர்பார்த்திருந்தது போலவே அவனுக்கு ஒரு மகன் பிறந்திருந்தான். வழக்கம் போல எகோரி பெஞ்சின் மீது அமைதியாக உட்கார்ந்திருந்தான், ஆண்பூனை திரேந்தியைப் பிடிக்க முயன்றபடி தரையைச் சுற்றிலும் வான்யா தவழ்ந்து வந்தான். இப்பூனை அவனுக்கு மிகவும் விரைவானதாக இருந்தது, மேலும்

அவனுடைய சிறிய கைகளிலிருந்து நழுவிக்கொண்டே இருந்தது. வாலால் பிடித்து இழுபட எதுதான் விரும்பும்? அறையின் மத்தியில் அமர்ந்து வான்யா பரிதாபகரமாக ஊளையிடத் தொடங்கினான்.

''இதென்ன குழப்பம், மகனே?'' என்றான் எகோரி. ''என்னிடத்தில் தவழ்ந்து வா. நான் என்ன வைத்திருக்கிறேன் பார்!'' என்ற அவன் மேசையின் மீது ஒரு கரண்டியையோ, விளையாட்டுப் பொருளாகப் பயன்படுத்தக் கூடிய வேறு எதையோ தடவித் தேடிப்பார்த்தான். ஆனால் ஒரு துவாலையால் சுற்றப்பட்ட ரை ரொட்டியைத் தவிர மேசையின் மீது எதுவுமே இல்லை. ரொட்டியின் மிருதுவான உட்பாகத் துண்டை உடைந்தான், ஏனெனில் பொக்கை வாய் வான்யாவால் இன்னமும் மேல் ஓட்டை மெல்ல முடியாது.

''இந்தா, கொஞ்சம் ரொட்டி வாங்கிக்கொள்.''

ஆனால் வான்யா ''எனக்குப் பூனை வேணும்!'' என்று அலற மட்டுமே செய்து, முன்னிலும் அதிகமாக ஊளையிட்டான்.

''இந்தச் சிறு பறவை தத்துகிறது பார்,'' என்ற எகோரி ரொட்டித் துண்டை ஒரு சிறிய அலகும் பெரிய வாலும் கொண்ட பறவையாக உருவாக்கி இருந்தான்.

வான்யா அழுவதை நிறுத்தி, தந்தையினுடைய முழங்காலின் மீது தொற்றி ஏறி, மோப்பம் பிடித்து அந்தச் சிறு பறவையை உற்றுப்பார்த்தான்.

''இதோ இப்பறவை சில முட்டைகள் இட்டு விட்டது,'' மேசை நெடுகிலும் ஐந்து சிறிய ரொட்டி உருண்டைகளை எகோரி உருட்டி வைத்தான். ''முட்டைகளினின்றும் குஞ்சுப் பறவைகள் பொறிக்கும் பார்.'' கணநேரத்தில் ஐந்து கறுப்பான, தடித்த குஞ்சுப் பறவைகள் தோன்றி, தங்களுடைய தாயைச் சுற்றிலும் அமைதியாக உட்கார்ந்து கொண்டிருந்தன. வான்யாவும் அமைதியாயிருந்தான்.

மேலும் எகோரி மேசையின் மேல் ஒரு ரொட்டி சாஸேஜை உருட்டிவைத்தான்.

''இப்போது தாய்ப் பறவை தனது குஞ்சுகளுக்காக, அவற்றின் விருந்திற்காக ஓர் அருமையான நீண்ட புழுவைக் கொண்டுவந்திருக்கிறது.''

''கரண்டியுமா?''

''அவை எல்லாவற்றுக்கும் கரண்டிகள் கிடைக்கும், நாம் அவற்றிற்காக ஒரு மேசையும் உட்காரப் பெஞ்சுகளும் தயாரிப்போம்.'' அவர்கள் விளையாட்டில் திளைத்துவிட்டு, பாட்டி கொள்ளுப்பேத்திகளுடன் வீட்டிற்கு வந்த போது, சாமான்களுடனும், தட்டுகளுடனும் நன்கு ஆயத்தப்படுத்தப்பட்ட பறவைக் குடும்பம் சம்பாதித்துக் கொண்டது. ரை ரொட்டி வெள்ளரிக்காய், ஆப்பிள்கள் மற்றும் விஷேடமாக வளைக்கப்பட்ட ரொட்டித் துண்டுகளுடன் பரத்தி வைக்கப்பட்டிருந்த ரை மேசைக்கு முன்னர் அவை பெஞ்சுகளின் மீது உட்கார்ந்து கொண்டிருந்தன.

''அட நல்லவனே எகோரி!'' பாட்டி வியந்தாள். ''எல்லாவற்றை யும் நீயாகவே செய்தாயா? பார்க்காமல் உன்னால் எப்படி இதைச் செய்ய முடிந்தது?''

''என்ன செய்வது என்பதை என் விரல்கள் அறிந்தது போலக் காணப்பட்டது,'' என்று எகோரி கலங்கினான். ''அதிகளவு ரொட் டியை நான் வீணாக்கியதற்காக வருத்தப்படுறேன், பாட்டி.''

''அது பற்றிக் கவலைப்பட வேண்டாம், என் அன்பே! நான் இன்னும் சுடுவேன், எந்தவகையிலும் இதை நாம் தூக்கி எறியப் போவதில்லை.''

மேலும் தாஷாவும் அன்யாவும் மூஞ்சியை நீட்டிக்கொண்டு சொன்னார்கள்: ''நாள் முழுக்க நாங்கள் தோட்டத்தைக் கொத்திக் கொண்டிருந்தோம், ஆனால் எங்களுக்காக அப்பா எதுவுமே செய்ய வில்லை, இந்தக் குட்டிப்பயல் வான்யாவுக்கு மட்டுமே.''

''நீங்களோ, சிறுமிகளே, இம்மாதிரி சிடுசிடுப்பதற்குப் பதிலாக, பள்ளத்தாக்கிலிருந்து அப்பாவுக்குக் கொஞ்சம் களிமண் கொண்டு வருவது நல்லது. பிறகு அவன் உங்களுக்கும் கூட ஏதாவது செய் வான்.''

''என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய், பாட்டி!'' என்று எகோரி கோபமாகச் சொன்னான். ''களிமண்ணுடன் குழம்பிப் போவது ஒரு ஆணுடைய வேலை அன்று!''

''பேரனே, நன்கு களவு செய்வதை விட ஓர் அற்ப வேலை சிறந்தது. ஏதாவது உருவாக்கு, இல்லாவிட்டால் சோம்பிக்கிடப் பதால் உனது கைகள் வறண்டு போகும்.''

இதற்கிடையே கருப்புக் களிமண்ணுக்காக அன்யா ஆற்றுக்கு ஓட, தாஷா பள்ளத்தாக்கிலிருந்து சிவப்புக் களிமண்ணைக் கொண்டு வந்தாள். காய்ந்து போய்விடக் கூடாது என்பதற்காக அதை ஈரத்துணி ஒன்றில் சுற்றிவைத்தார்கள், மறுநாள் காலை அப் பாவுக்கு முன்னர் ஒரு பழைய பெஞ்சு போட்டு, அதன் மீது களிமண் ணை வைத்தார்கள்.

''சிவப்புக் களிமண் உங்களுடைய இடப்பக்கம் இருக்கிறது, அப்பா, வலப்பக்கம் கருப்புக் களிமண், கைகளைக் கழுவிக் கொள்வதற்காக ஒரு தொட்டியில் தண்ணீரும் இருக்கிறது. அதைக் கவிழாமல் பார்த்துக்கொள்ளுங்கள்!'' என்றாள் அன்யா. ''இன்று மாலைக்குள் ளாக கருப்புப் பின்னல்களுடன் சிவப்பு பொம்மை ஒன்று எனக்குச் செய்துகொடுங்கள்.''

''எனக்கும் கூட ஒரு பொம்மையும் ஒரு குதிரையும் ஒரு பசுவையும் செய்துகொடுங்கள்,'' என்று விரைவாகச் சொன்னாள் தாஷா.

''எனக்குப் பூனை வேணும்,'' என்று கத்தினான் வான்யா.

''நல்லது, பேரனே, இப்போது தப்பித்துக்கொள்ளக் கூடாது,'' என்ற பாட்டி அகுலீனா முறுவலித்தாள். ''தேவையிருக்கிறது உனக்குத் தெரிந்து போச்சு, ஆகவே இப்ப வேலையைத் தொடங்கு!''

பிறகு அவர்கள் தோட்டத்திற்குச் சென்றார்கள்.

கையளவு சிவப்புக் களிமண் எடுத்து எகோரி அதைச் சிந்தனையோடு பிசைந்தான். அது வெதுவெதுப்பாகவும் கனமாகவும் இருந்தது, அதில் எந்த வாசனையும் இல்லை.

''சரிதான்,'' அவன் பெருமூச்சுவிட்டான். ''இது ஒரு பொம்மையாகும். நீ எனக்குப் பக்கத்தில் உட்கார், வான்யா, எனக்கு உதவி செய். என்னால் பார்க்க முடியாது, ஆகவே அவளுடைய கைகளை நான் தவறான இடத்தில் வைக்கக் கூடும்.''

வான்யா தனது அப்பாவை நெருங்கிக்கொண்டு உட்கார்ந்து கண் இமைக்காது கவனித்தான். அவனது அப்பாவினுடைய விரல்களில் ஒரு களிமண் பெண் தோன்றிருந்தது!

''இப்போது நாம் இந்தத் தடித்த வணிகனுடைய மனைவிக்கு ஓர் அருமையான பெரிய ஸ்கர்ட் கொடுப்போம்,'' என்ற எகோரி, உருவத்தைச் சுற்றி ஒரு களிமண் பட்டையை வைத்தான், ''அதில் சில குஞ்சங்களை வைப்போம்.''

ஸ்கர்டின் ஓரங்களை அழுத்தி அவற்றை அருமையான குஞ்சங்களாக மாற்றினான்.

''இப்போது நாம் தோள்களின் மீது சட்டைகளுடன் கூடிய கைகளை ஒட்டலாம். வணிகனுடைய மனைவி வேலை செய்ய விரும்பவில்லை. தனது கைகளை இடுப்பின் மீது வைத்துக்கொண்டு நின்று கட்டளையிடுகிறாள்.''

அவன் விரல்களை தண்ணீரில் முக்கி பொம்மை முழுக்கப் பளபளப்பாக்கினான். அது பெருமையோடு பளிச்சிட்டது.

''கண்கள் எங்கே?'' வான்யா பொறுமையின்றி நெளிந்தான்.

''விளக்குமாறிலிருந்து ஒரு குச்சியை எடுத்து, அதனால் அவளது முகத்தில் இரு சிறிய புள்ளிகள் இடு.''

அவனுக்குச் சொல்லப்பட்டது போல வான்யா செய்தான்.

''இப்பொழுது அவள் பார்க்க முடியுமா?'' என்று எகோரி சோகத்தோடு கேட்டான். ''ஒரு மந்திரக் குச்சியால் என்னை மட்டும் பார்க்குமாறு யாராவது செய்தால்...''

''எனக்குப் பூனை வேணும்!'' வான்யா தன் தந்தையை வருத்தப்பட விடவில்லை.

''பிறகு எனக்குக் கொஞ்சம் கருப்புக் களிமண் கொடு,'' என்று சொல்லிய எகோரி ஒரு தடித்த வெள்ளரிக்காயை உருட்டினான். ''நாம் ஓர் அருமையான தடித்த திரேந்தியை, தலையும் காதுகளும் சிவப்புக் களிமண்ணால் செய்வோம். அதனுடைய கண்களை இடு, வான்யா. மேலும், அதனது பாதங்களையும் வாலையும் கூட நாம் சிவப்புக் களிமண்ணால் செய்யலாம், அதற்கு வாலில் குச்சியால் ஓர் ஊதுகுழலைச் சுழற்றலாம். இப்போது திரேந்தி காய்ந்து போய் விடும், அதே நேரம் நீயும் நானும் தாஷாவுக்கு ஓர் அழகிய பொம்மை செய்யலாம்.''



''அம்மாவுக்கு?''

''ஒரு நீண்ட வாலுடன், நம்முடைய நட்சத்திரம் பெற்றிருப்பது போல, அதன் மீது தாடி வைத்த மனிதன் கொண்ட ஒரு சிறிய கருப்புக் குதிரை ஒன்றை நாம் அம்மாவுக்காகத் தயாரிப்போம். பிறகு நாம் கொம்புகளுடன் கூடிய ஒரு வெள்ளாடும், சிறிய மணியுடன் கூடிய பசு ஒன்றும், குட்டிகளுடன் கூடிய தாய்ப் பன்றி ஒன்றையும் செய்வோம். அவை அவளைச் சுற்றிப் படுத்துப் பால் குடிக்கவும் சீறவும் செய்யும்.''

ஆகவே மாலை வரும் வரை பகல் முழுக்க அவர்கள் வேலை செய்துகொண்டிருந்தார்கள். அந்தப் பெஞ்சின் மீது, ஒரு சுறுசுறுப்பான வியாபாரச் சந்தையில் போல, தாடி வைத்த ஆண்கள், வாளிகளையும் குழந்தைகளையும் தூக்கிக் கொண்டு பெண்கள், கூர்மையான காதுகளுடன் குதிரைகள், பெரிய கொம்புகளுடன் பசுக்கள், ஒரு பூனையும் ஒரு நாயும் ஒன்றாக நடனமாடுதல், சிறகுகளுடன் கூடிய சில விநோதமான விலங்குகள், எல்லாம் கத்திக்கொண்டும், சப்தமிட்டுக்கொண்டும், தள்ளிக்கொண்டும், பாடல்கள் பாடிக் கொண்டும் — உண்மையானவை போலவே இருந்தன.

எல்லாரும் வீட்டுக்கு வந்த போது அங்கு நிலவிய மகிழ்ச்சிதான் என்ன!



''குழல் வாசித்துக் கொண்டிருக்கும் அந்த வேடிக்கையான வெள்ளாட்டைப் பார்,'' என்று மாஷா சிரித்தாள்.

''அதன் தாடியைப் பற்றி என்ன,'' அகுலீனா குலுங்கச் சிரித்தாள். ''அது கிழவன் அஃபனாஸியினுடைய அப்பட்டமான உருவம்.''

முதன் முறையாக எகோரி மீண்டும் முறுவலித்தான். அவன் எவ்வளவு களைப்பை உணர்ந்தான் என்பதை யாரிடமும் கூறவில்லை — யாருடனோ பகல் முழுக்க அவன் மல்லாடி இறுதியில் வெற்றியடைந்தவன் போல. அடுப்புப் பெஞ்சின் மீது படுத்து ஆழ்ந்து தூங்கிப் போனான். அவன் கனவில் ஏன் முறுவலித்துக் கொண்டிருந்தான் என்பதை யாராலும் சொல்ல முடியாது.

* * *

அந்தக் கடுமையான குளிர்காலம் முழுக்க காலை முதல் இரவு வரை எகோரி பொம்மைகளைச் செய்தான். இரண்டு பீப்பாய் களிமண்ணையும் செலவிட்டான், கடினமான உழைப்பால் தனது அவலத்தை வென்றான்.

வீட்டில் உட்கார்வதற்கு எந்த இடமும் இல்லை. எல்லா பெஞ்சுகளும், அலமாரிகளும், அடுப்புப் பெஞ்சும், கிடங்கு அறையும் நூற்றுக் கணக்கான பொம்மைகளால் நிரம்பின. மாஷாவும் மகள்களும் அவற்றிற்கு வர்ணந்தீட்டக் கற்றுக்கொண்டார்கள்.

வாத்தின் சிறகையும் அவர்கள் பயன்படுத்தினார்கள், தூரிகையை



அன்று, ஏனெனில் அது ஈரமான களிமண்ணில் ஒட்டிக்கொள்ளாது. அவர்கள் மூன்று வர்ணங்களை மட்டுமே தேர்ந்தெடுத்தார்கள்: பிரகாசமான சிவப்பு, சூரியகாந்திப்பூப் போல மஞ்சள் மற்றும் மரகதப் பச்சை, மழைக்குப் பிறகு வரும் இளம் புல் போல. ஆனால் அவ்வளவு பகட்டான பொம்மைகள் இருந்தன — கண்களுக்கு ஒரு சிறந்த காட்சி!

மாலை நேரங்களில், குளிர்ந்த நிலவு பனியை நீல நிறம் போட்ட போதும், கடுங்குளிர் நதியைப் படுகைவரை உறையவைத்த போதும், வீட்டில் கொளுத்தப்பட்ட மரச்சக்கையை அவர்கள் ஏற்றினார்கள். மங்கிய வெதுவெதுப்பான சூரியன் போல அது மக்களும், களிமண் உருவங்களும், முறுவலிக்கின்ற விலங்குகளும் ஒன்று சேர்ந்து மகிழ்ச்சியாக வாழ்ந்த இந்தச் சிறிய, சுகமான உலகத்தை வெளிச்சமாக்கியது.



எகோரியினுடைய கைகள் கொடும் விலங்கையோ தீயப் பொம்மையையோ ஒருபோதும் செய்ததில்லை, நல்லவைகளை மட்டுமே செய்தன. மேலும் ருஷ்யா முழுவதிலுமே மக்களுக்கு வாழ்க்கை அவ்வளவு கடினமாக இருந்தாலுங்கூட, கைவினைஞர்கள் எப்போதுமே நல்லதையும் மகிழ்ச்சிமிக்கதையும் கட்டவும், தீட்டவும், சிலைவடிக்கவும் செய்தார்கள். தீமையைப் பார்த்து, சாவைக் கூட பார்த்து மக்கள் சிரித்தார்கள், ஏனெனில் சிரிப்புத்தான் நினைவு தெரிந்த காலந்தொட்டு எல்லாவிதமான அவலங்களுக்கும் எதிராக மனிதனுடைய பாதுகாவலாக இருந்து வந்திருக்கிறது.

* * *

நீண்ட குளிர்காலத்தை வேலை விரைவாகச் செல்லும்படி செய்தது. இதோ ஏற்கெனவே பாட்டி அகுலீனா ஒரு பாடலுடன் வசந்தத்தை வரவழைத்துக் கொண்டிருந்தாள்.

வானம்பாடி களேநீர், பறந்தே வாரீர்!
வையம் மகிழவே கோடையைத் தாரீர்!
கடுங்குளி ரதனால் களைத்துப் போனோம்,
கடும்பசி யதனால் இளைத்துப் போனோம்,
நெருப்பும் மூட்டாது போனோம் வாடி,
இருப்பது எம்மிடம் இன்னலே கோடி!

இதைக் கேட்டு வசந்தம் வந்தது. வில்லோ மரம் செழித்த கிளைகளால் அதை வாழ்த்தியது முதல் தான். இந்தத் துணிச்சலான மரம் இரவுக் குளிர்க்கு அஞ்சவில்லை. கிராமப்புற மக்கள் வில்லோக் கிளைகளை உடைத்து, ஒன்றை ஒன்றும், கால்நடைகளையும் பின்புறங்களில் அவற்றால் தட்டினார்கள், பாடிக் கொண்டே: ''அரிய வில்லோ, கண்ணீர் வர அடித்து எமக்கு நலத்தைக் கொடு!''

வசந்தகால வில்லோவிடமிருந்து மனிதனுக்கு நலமும் வலிமையும் சென்றன.

வசந்தகால விதைப்பை அடுத்துப் பிறகு புனித ஜியார்ஜின் நாள் வந்தது. கால்நடைகள் இருண்ட தொழுவங்களினின்றும் மேய்ச்சல் நிலத்திற்கு ஓட்டிச் செல்லப்பட வேண்டியிருந்தன. பசுவுக்காகவும் சிறைப்பாடிலிருந்து எகோரியைத் திரும்பக் கொண்டுவந்த நட்சத் திரத்திற்காகவும் பாட்டி சில 'கோன்கள்' சுட்டாள். காலையில் அவற்றிற்கு மேலாகச் சில வார்த்தைகளை ஓதினாள், வயல் வெளிக்கு அவர்கள் எல்லாரையும் ஒன்றாக, வான்யாவையும் தங்களோடு அழைத்துச் சென்றாள்.

எகோரி தனிமையில் விடப்பட்டான். ஒரு சிறிய வானம்பாடிக்குப் போதுமான களிமண் மட்டுமே இரு பீப்பாய்களில் தங்கியிருந்தது. திடீரென்று வாசற்பக்கக் கதவு தடாலென்று திறக்க, யாரோ அறைக்குள்ளாக விரைந்து வந்தான்.

''யார் அது?'' எகோரி கேட்டான். ''மாஷா, நீயா?''



''இல்லை, மாஷா இல்லை,'' என்று அறியாத, ஆனால் தெளி வானதும் அழுத்தமானதுமான குரலில் பார்வையாளன் பதிலளித் தான். ''எதற்காக வீட்டில் உட்கார்ந்து கொண்டிருக்கிறாய், வயல் வெளியில் இருக்க வேண்டிய நேரத்தில்?''

எகோரி வெளிறிப் போனான்.

''என்னுடையதை நான் ஏற்கெனவே கடந்து விட்டேன், நல்ல வனே, வயல்வெளியில் எனக்காகச் செய்ய எதுவுமில்லை.''

''இல்லையே,'' என்று அந்நியன் பதிலளித்தான். ''இன்று ஏதோ இருக்கிறது. என்னைப் பின்தொடர்.''

''மகிழ்ச்சியோடு, ஆனால் என்னால் முடியாது,'' என்று எகோரி உள்ளடங்கிய குரலில் சொன்னான். ''நான் குருடன் என்பதை நீ பார்க்கவில்லையா? என்னால் அங்கு வர முடியாது.''

''நான் உன்னைக் கூட்டிச் செல்கிறேன்,'' என்று பார்வையாளன் அதிகாரமாகச் சொன்னான். எகோரியின் கையைப் பற்றி வாசற் படியை நோக்கி, பிறகு படலை வழியாக, கிராமத்தை விட்டு ஒரு பெரிய மேய்ச்சல் நிலத்திற்கு அவனை அமைதியாகக் கூட்டிச்சென் றான்.

''ஒருவழியாக நாம் வந்துவிட்டோம்,'' என்றான் அந்நியன். பிறகு அவன் புல்லை நோக்கிக் குனிந்து இரண்டு கை நிறைய முத்துப்போன்ற பனித்துளிகளை வாரியெடுத்து எகோரியினுடைய முகத்தில் தெளித்தான்!

குளிர்ச்சியான பனித்துளி எகோரியை நெருப்புப் போல எரித்த தாகத் தோன்றியது, மேலும் அவன் கைகளால் கண்களைப் பற்றிக் கொண்டான்.

''பயப்பட வேண்டாம்,'' என்றான் அந்நியன் அமைதியாக. ''உன் கைகளை எடு. உன்னால் இப்போது பார்க்க முடிகிறதா?'' எகோரி

எச்சரிக்கையோடு கைகளை விலக்கினான், அவனுக்கு முன்னால் மின்னல் அடிப்பது போலக் காணப்பட்டது!

''தெரியுது,'' என்று கிசுகிசுத்தான். ''எனக்குத் தெரியுது!'' சிரிக்கவும் அழவும் செய்தான், உணர்ச்சிவயப்பட்டு நடுங்கினான். அவனுக்கு முன்னால் பொன்முடி கொண்ட இளைஞன் பளபளக்கின்ற கவசத்தில் நின்று, மினுமினுக்கின்ற கத்தியின் மீது சாய்ந்து கொண்டான்.

''புனித ஜியார்ஜ் மாவீரர்! நான் கனவு காண்கிறேனா அல்லது இது ஓர் அதிசயமா?'' எகோரி பின்னுக்கு நகர்த்தான். ''எதற்காக என்னுடைய பார்வையைத் திரும்பத் தந்தீர்கள்?''

''ஏனென்றால் நீ மனத்தை இழந்து விடவில்லை. ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய வாழ்நாளில் சில நேரத்தில் இருட்டின் ஊடாகவும், குருட்டுத்தனத்தின் ஊடாகவும் செல்கிறான், ஆனால் ஒவ்வொருவரும் பார்வையைத் திரும்பப் பெறவில்லை. தன்னையே வெல்வதற்காக உன்னுடைய பார்வையை நான் மீட்டுத்தந்தேன். போய் வருகிறேன்!''



தங்கத் தீப்பொறிகளில் அவர் ஒளி வீசினார், மேன்மேலும் பிரகாசமாக, பிறகு கரைந்து போய்விட்டார். வெண் மேகம் மட்டுமே மேய்ச்சல் நிலத்திற்கு மேலாக மிதந்து மறைந்துபோனது...

இது என்ன? ஓர் அற்புதம், ஓர் அழகிய கனவு, அல்லது பாட்டியினுடைய மூலிகைகள் எகோரியைக் குணப்படுத்தினவா? இந்த ரகசியத்தைப் பற்றி யாருக்கும் தெரியவில்லை.

* * *

வீசியடிக்கிற மழையைப் போல நாள்கள் நகர்ந்தன, வசந்தகாலப் புற்களைப் போல வாரங்கள் தொடர்ந்தன, ஓடுகின்ற நதியினைப் போல ஆண்டுகள் கடந்தன.

எகோரி தன்னுடைய ஒளியைத் திரும்பப் பார்த்த அந்த அதிசயமான நாளுக்குப் பிறகு அநேக ஆண்டுகள் கடந்துவிட்டன. இப்போது வான்யா கூட பெற்றோர் கூட்டை விட்டுப் போய்விட்டான். அவனுடைய தாத்தாவைப் போல, மணிகளை விரும்பத் தொடங்கியிருந்த அவன், இப்போது மாஸ்கோவில் அத்தகு இன்னிசையான மணிகளை உருவாக்கிக் கொண்டிருந்தான், அவற்றின் புகழ் வீடுவாசல்கள் வரை பரவியிருந்தது. மகள்கள் எகோரியினுடைய மாணவர்களாகிய நல்ல இளைஞர்களை மணமுடித்துக் கொண்டிருந்தார்கள்.

நிகதீமுடைய கட்டளையை எகோரி நிறைவேற்றினான், தனது திறமையை மறைக்காது, தனது மாணவர்களுக்கு அதைப் பெருந்தன்மையோடு கற்பித்தான். அவர்களில் நிறையப் பேரை அவன் பெற்றிருந்தான், மூன்று குழுக்களுக்குப் போதுமானவர்கள் இருந்தனர்.

எல்லாவற்றிலும் ஆர்வங்கொண்ட பிரகாசமான கண்கள்

படைத்த இளைஞர்கள் தொலைதூர கிராமங்களினின்றும் கற்றுக் கொள்வதற்கு அவனிடம் வந்தார்கள். சிலர் தங்கிவிட்டனர், ஆனால் பிறர் இது தங்களுக்குரியது அல்ல என்பதை உணர்ந்து போய் விட்டனர். அவர்களது கருத்தை மாற்ற எகோரி ஒருபோதும் முயலவில்லை. மற்றொரு மிரோன் யாரிடமும் மறுபடியும் நிகழ்வதை அவன் விரும்பவில்லை. இந்த உலகத்தில் பல தொழில்கள் இருக் கின்றன, சரியான ஒன்றை அவர்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ளட்டும், அது மிகவும் சுணங்கிப்போவதற்கு முன்னால், நிகதீம் வழக்கமாகச் சொல்வது போல, அவர்களுக்கு மகிழ்ச்சியையும், மற்றவர்களுக்கு இன்பத்தையும் கொண்டுவரட்டும்.

வழக்கப்படி, எல்லா மாணவர்களும் அவனுடைய வீட்டில் ஒரே குடும்பமாக வாழ்ந்தார்கள், எல்லாவற்றையும் பங்குபோட்டுக் கொண்டார்கள் — வேலையை, விழாக்களை மற்றும் துயரத்தை. அவர்கள் திறமையை, வாழ்க்கை அநுபவத்தை மற்றும் இதயத் தாராளத்தைத் தேடிப்பெருகின்ற எல்லாவற்றையும் கற்றுக்கொண் டார்கள். ஒரு தீய இதயத்தால் கலையையும் தீமையாகவே செய்ய முடியும்.

அடிக்கடி, அறிவுறுத்துவதற்கு மாறாக, எகோரி தனது சந்தடி மிக்க கூட்டத்தை ‘இயற்கையைக் கேட்பதற்கு’ அழைத்துச் செல் வான். குளிர்காலத்தில் புதிரான வெள்ளை அமைதியை உற்றுக் கேட்டு, மினுமினுக்கின்ற பனியில் நீல நிழல்களையும், மலர்கின்ற செர்ரி போலப் பனி மூடிய கிளைகளையும் பார்த்துக் களிமகிழ்வு அடைவார்கள்.

வசந்தகாலத்தில், வெதுவெதுப்பான பூமியிலிருந்து ஆவி எழு வதை, உருகிய பனியின் முதலாவது கருத்த நீர்மடுக்களின் மீது வானம்பாடிகள் பாய்வதைக் கவனிப்பார்கள், மேலும் பிரகாசமான நீலவானத்தின் பின்னணியில் கருத்த மரங்களின் மீது காக்கைகள் கரைவதைக் கேட்பார்கள்.

கோடைக்காலத்தில் மலர்கின்ற சணலின் இரக்கமான நீலநிற ஏரிகளைப் பார்த்துப் புகழ்ந்தார்கள், வானத்தின் மீது தனது இளஞ் சிவப்பு நிறக் கதிர்களைச் சூரியன் பாய்ச்சுவதைக் காண பனி விழுந்த புற்களின் மீது வெறுங்கால்களுடன் காத்திருப்பார்கள். பெருமகிழ்ச்சியுடனும் பேரச்சத்துடனும், இறவாரங்களுக்குக் கீழே இருக்கும் சிட்டுக்குருவிகளைப் போல, இடியின் முழக்கத்தாலும், ஈரமான கருமேகங்களில் மறைந்து போன நீலநிற மின்னலின் கீற்று களால் கோடிட்டதாலும் வெடித்துத் துண்டான கருத்த வானத்தை வைக்கோற் பரணிலிருந்து கவனிப்பார்கள். மழைக்குப் பிறகு, அவர் கள் முற்றத்திற்கு ஓடி, ஆழமான சாம்பல் நிறச் சேற்றுமடுக்களில் நிற்பார்கள், அதேவேளை வானவில் பொன்னிறச் சூரியக் கதிர் களால் ஒளிவீசிக்கொண்டு நதியின் நடுவிலிருந்து வெளியேறி வானத்தைத் தழுவிச் செல்ல எழுவதைப் பார்ப்பார்கள்.

இலையுதிர்காலத்தில், களைப்புற்ற தரை தனது மிகவும் வண்ணமிகு ஆடை அணிந்து கொண்ட போது, நீண்ட நூலாம்படைகளில் இருந்த பனித்துளி, கன்னிப் பெண்ணுடைய தலை அலங்காரத்தில் உள்ள அரிய முத்துகளைப் போல மின்னியது, மௌனமாகிய பையன்கள் தங்களுடைய சொந்த நாட்டைத் தவிர மிகவும் அழகானது எதுவுமில்லை என்பதை உணர்வார்கள்...

இந்த ஆண்டுகள் பலவற்றைக் கொண்டுவந்தன – பசி, கொள்ளை நோய், தீ மற்றும் போர். அன்புக்குரிய பலர் இப்போது தங்களுடைய கல்லறைகளிலே படுத்திருக்கிறார்கள். எகோரியினுடைய தலைமுடி வெள்ளிக்கீற்றாய் மின்னியது, துயரத்தில் அவனுக்குரிய பங்கும் அவனுக்குக் கிடைத்தது. ஆலையில் அரைக்கப்பட்ட கோதுமை தூய்மையான தானியமாவது போல, துயரத்தில் மனிதன் முதிர்ச்சியடைகிறான். கஷ்டமான நாட்களில் அவன் எப்போதுமே தனது பாட்டிக்கு விருப்பமான பாடலை நினைவு கூர்ந்தான்:

கருமேகத்தின் பின்னே – மின்னிடும் விண்மீன்கள்,
விண்மீன்களின் பின்னே – முழுநிலா பளிச்சிடுகிறது,
நிலவுக்குப் பின்னே – செவ்வான விடியல்,
விடியலின் பின்னே – பொன்னிறச் சூரியன்.

ஆக அவனுடைய வர்ணங்கள் கருப்பாகவும் சாம்பலாகவும் மாறவில்லை. முற்றிலும் எதிராக! எவ்வளவு அதிகம் அவன் வாழ்ந்தானோ அவ்வளவு பிரகாசமாகவும், மிக மகிழ்ச்சியாகவும் அவை ஆயின. கடைசியில், தனது வாழ்நாள் முழுக்கத் தான் எதைக் கனவுகண்டு கொண்டிருந்தானோ அதைத் தீட்ட அவன் முடிவு செய்த கணம் வந்தது.

ஒருபோதும் நிறுத்தாது தீமையை எதிர்த்துப் போரிடுவதை, அது எவ்வளவு பெரியதாக இருந்தாலும், எப்போதுமே அதை முறியடித்த புனித ஜியார்ஜை வரையக் கனவு கண்டான்.

ஒரு பெரிய பலகையில் அவன் இவ்வாறு தான் புனித ஜியார்ஜை வரைந்தான்.

தங்கக் கவசமணிந்த அஞ்சாத மாவீரர் அருமையான கால்கள் கொண்ட குதிரையின் மீது விரைந்து செல்கிறார்! அவரது சிவப்பு மேலங்கி காற்றில் பறந்து கொண்டிருக்கிறது, அவரது தங்கக் கேடயம் சூரிய ஒளியில் மின்னுகிறது, அவரது குதிரை, கூரிய ஈட்டியால் குத்தித் துளைக்கப்பட்ட கரும் பறவைநாகம் ஒன்றைக் கீழே போட்டு மிதித்துத் துவைக்கிறது.

காலத்தின் வெண்புரவி மீது அச்சமின்றி பாய்ந்து செல்லும், ருஷ்யா முழுமையுமே தீமை எந்த வடிவத்திலும் அமைப்பிலும் இருந்தாலும் அடித்து வீழ்த்துகிறது என்று எகோரிக்குத் தோன்றியது.

வாழ்நாள் முழுக்க அந்தளவு சிரமத்தோடு எகோரி சேகரித்த எல்லா அறிவும் அவனது புனித ஜியார்ஜில் இளமையின் வலிமை



யோடும் உள்ளூரத்தோடும் மின்னியது.

''சரி, அதுதான்,'' களைப்போடு தனது சாம்பல் நிறத் தாடிக்குள்ளாகக் கிசுகிசுத்தான். ''என்னை நானே தாழ்த்திக்கொள்ளவில்லை, இல்லையா?''

தூரிகைகளைக் கவனமாகக் கழுவி விட்டு, வீட்டை விட்டு வெளியே சென்று, விழுந்து கிடந்த இலைகளின் மேலாகக் காட்டிற்கு மெதுவாக நடந்தான். திடீரென்று, வெண்மேகங்களுக்கு அப்பால் உயரே நீலநிற வானத்தில் ஓடையின் சலசலப்பு ஒலி கேட்டது, அப்போது மாஸ்கோவின் வெளிப்புறத்தில் போல. நீலவானத்தை விட்டுப் பாடகர்கள், வெண்பனிநிற அன்னங்கள் தாங்களாகவே வெளியே வருகின்ற வரை விநோதமான இசை மேன்மேலும் அருகே வந்தது. மெதுவாக, ஒரு கனவில் போல, அவனுக்கு மேலாக அவற்றினுடைய சிறகுகளை அலைத்தன, ஆனால் அந்த இடத்தை விட்டு நகரவில்லை.

''என்னை எங்கே அழைத்துக் கொண்டிருக்கிறீர்கள், நண்பர்களே?''


பிறகு அவன் பூமியை விட்டு மென்மையாக மிதந்து, உயரே, உயரே அமைதியாக மேல்நோக்கி வானளாவ, ஒரு வெண் அன்னத்தைப் போல, தனது கட்புலனா சிறகுகளை அடித்துப் பறந்து செல்கின்ற வரை கனமற்று வருவதாக உணர்ந்தான், அவனைப் போல, பெரியவர்களும் பெயரற்றவர்களுமான ருஷ்யக் கலைஞர்களுடைய முடிவற்ற ஊர்வலத்தில் அமரத்துவத்தை நோக்கிப் பறந்துகொண்டு...



வாசக நேயர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்து வரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் ஆலோசனைகளை வரவேற்கவும் ராதுகா பதிப்பகம் மகிழ்வுடன் காத்திருக்கிறது. கடிதங்களைத் தயை செய்து கீழ்வரும் முகவரிக்கு அனுப்புங்கள்: Raduga Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR.





ராதுகா பதிப்பகம்
மாஸ்கோ

